

# தெய்வம் நீ என்று உணர்





புலவர். ஆறு. மெ. மெய்யாண்டவர்



தெய்வம்
நீ என்று
உணர்
திருக்குறள்
புலவர். ஆறு. மெ. மெய்யாண்டவர்
ANDAVAR LIBRARY, KOVILOOR
No. 27553

முதற்பதிப்பு : ஜுன் 2018

உரிமை : ஆசிரியருக்கே

வெளியீடு : வள்ளுவர் பேரவை
4, தியாகராசன் தெரு,
செக்காலை,
காரைக்குடி - 630002.

அலைபேசி : 98654 55036

அளவு : 1 x 8 Paper 18 kg 'Maplitho'

விலை : ரூ. 80 /-

அச்சு : பாரத் பிரிண்டர்ஸ்
வ.உ.சி. ரோடு,
எல்.ஐ.சி. எதிர்புறம், காரைக்குடி
போன்: 04565-400593

தொடர்புக்கு : திருவள்ளுவர் புத்தக நிலையம்

அலைபேசி : 98654 55036

மின்னஞ்சல் : valluvarbooks@gmail.com

12-4



## தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

### தலைவர், உலகத் திருக்குறள் பேரவை

### ஆசியுரை

புலவர் ஆறு. மெ.மெய்யாண்டவர் தமிழ்கூறும் நல்உலகிற்கு நல்ல ஆக்கத்தினைத் தந்துள்ளார்.

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்.

தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" - என்ற திருமூலர் வாக்கிற்கு ஏற்பத் தமிழ்ப்பணியைத் தெய்வப்பணியாய்ச் சிறப்பாகச் செய்து வருகின்றார். தெய்வம் நீ என்றுணர் என்ற கட்டுரையில் சுவாமி விவேகானந்தப் பெருமானின் வாழ்வையும், மனித ஆத்மாக்களின் நடுவே வாழ்ந்த மகாத்மாவின் வரலாற்றையும் எடுத்துக் காட்டியிருப்பது சிறப்புக்குரியது.

"மதுரகவி ஆண்டவனும் மயில்மலை முருகனும்" கட்டுரை தெய்வீக வெளிப்பாடாய் மலர்ந்துள்ளது. மதுரகவி ஆண்டவர் குன்றக்குடி மலை முருகனைப் போற்றிப்பாடும் பாங்கு அற்புதமானது.

பைந்தமிழின் ஆதி குரு எங்கள் குமரேசர்பத
பங்கயம் எந்நாளும் வாழ்க என்று தொடங்கி
குன்றைமலை வாழ்க அருள் ஒன்று தமிழ்வாழ்க முறை
கொண்டுலகம் வாழ்க மாதோ என்று பாடியிருப்பது

ஊனை உயிரை உருக்கும் அற்புதப் பனுவல். மதுகவி ஆண்டவர் குன்றை முருகன் பக்தர் என்கின்ற பொழுது மெய்சிலிர்க்கின்றது.

"தேரும் தேரின் சக்கரங்களும்" சிந்தனை நந்தவனச் சொற்பொழிவாகும். சிந்தனைச் செறிவு மிக்கது.

"தொல்காப்பியர் காட்டும் இனிய இல்லறம்," இல்லற வாழ்விற்கு இலக்கணமாக அமைந்த கட்டுரை.

"கலித்தொகையில் மனிநேயம்" கட்டுரை கண் கலங்க வைக்கும் அன்பின் வெளிப்பாடு.

இலக்கியம், இலக்கணம் என்று எல்லாத் தளங்களிலும் செழுமையும் வளமையும் பெற்ற மெய்யாண்டவரின் கட்டுரைகள் வரலாற்றில் நின்று நிலைத்து நிற்பவை. இத்தருணத்தில் மெய்யாண்டவரின் சிந்தனைக் கட்டுரை வாழும் தலைமுறைக்கும் வளரும் தலைமுறைக்கும் பயன் தரத்தக்கது.

அனைவரும் படித்துப் பயன் பெறவும்.

புலவர் மெய்யாண்டவர் தமிழ்ப்பணி சிறக்கவும் நல்வாழ்த்துக்கள்.

என்றும்வேண்டும் இன்ப அன்பு

(பொன்னம்பல அடிகளார்)

**சொ. சுப்பையா**

**துணைவேந்தர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.**

## அணிந்துரை



வேப்பங்குளம், பேராசிரியர் ஆறு.மெ.மெய்யாண்டவர் "தெய்வம் நீ என்றுணர்" எனும் தலைப்பிலே அருமையான நூல் ஒன்றைப் படைத்திருக்கிறார். இந்நூலில் பல்வேறு தலைப்புகளில், இலக்கியங்கள் குறித்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் தெளிந்த புலமையுடனும் நல்ல ஆற்றொழுக்கான நடையுடனும் அமைந்து ஒளிவிட்டு மிளிர்கின்றன. நூலாசிரியரின் ஆழங்கால் பட்ட அறிவும், இலக்கியச் செழுமையும் கட்டுரைகளில் வெளிப்படுவது தனிச்சிறப்பாக அமைந்துள்ளது.

"தெய்வம் நீ என்றுணர்" எனும் கட்டுரையில் மானுடத்தின் மாட்சியை விளக்கும் விதமான மானிடப் பிறப்பைப் பற்றி அறிஞர்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டி யார் மனிதன் ஆவான்; யார் மனிதனாக மாட்டான் என்பதை வரையறுக்கும் விதத்திலே தக்க ஆதாரங்களுடன் கருத்துக்களைப் பதவு செய்துள்ளார். மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான் என்பதைவிட எவ்வாறு வாழ்ந்தான் என்பதே இன்றியமையாதது என்பதற்கான சான்றாதாரங்களைப் படைத்திருக்கிறார்.

"தேரும் தேர்ச்சக்கரமும்" என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில் தேர் என்ற சொல் இலக்கியங்களில் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட்டுள்ளது. சமுதாயத்தில் தேர்த் திருவிழாக்கள் எவ்வாறெல்லாம் நிகழ்கின்றன என்பதை விளக்கும் முகமாக

அறிவொளித் தேரை ஓட்டி தேர் பற்றிய செய்திகள் இவ்வளவு உள்ளனவா? என்று நம்மை வியக்கவைக்கிறார். இவரின் இந்த ஆய்வுக் கட்டுரை மிகவும் சிறப்பு வாய்ந்தது. இல்லறத்தின் இனிய மாண்புகளைகள் குறிப்பிடும் வகையில் அமைந்த "தொல்காப்பியர் காட்டும் இனிய இல்லறம்" எனும் கட்டுரை ஐவகை நிலங்களில் வாழ்ந்த மாந்தர் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. "நற்றிணை காட்டும் நயத்தகு காதல்" எனும் கட்டுரையில் நற்றிணை குறித்த விரிவான தகவல்கள் இடம் பெற்றுள்ளன என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. திருக்குறள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையில் உரையாசிரியர்களின் கருத்துக்கள் எப்படி எல்லாம் இந்நூலில் பரிமளிக்கின்றன.

இத்தகு சிறப்பு வாய்ந்த நூலை ஒவ்வொரு தமிழ் ஆய்வாளரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது என் விருப்பம். இத்தகு சிறப்பான நூலைப் படைத்த பேரா. ஆறு.மெ.மெய்யாண்டவர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகு நூல்களை மேலும் படைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

(சொ.சுப்பையா)

# அணிந்துரை

## பேராசிரியர். டாக்டர். அய்க்கண்

## தலைவர், சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் சங்கம்

# ஓர் இறைவன் - உருவாகுகிறார்....



பேராசிரயர் புலவர்
ஆறு. மெ. மெய்யாண்டவர்,
நாடறிந்த நல்ல பேச்சாளர் நம் வட்டாரம் மட்டுமல்ல-
"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி" பசிப்பிணி மருத்துவராய் உயிர்க்கெல்லாம் உணவூட்டி ஒப்பற்ற ஆன்மநேயராய் விளங்கிய இராமலிங்க சுவாமிகள் அவதரித்த வடலூர் வட்டாரம் வரை, தம் பேச்சுத் திறத்தால் புகழ்க்கொடி நாட்டியுள்ள அறிவு சான்ற உரையாளர் .

சங்க இலக்கியம் முதல் பிற்காலப் பக்திப் பனுவல்கள் பன்னிரெண்டு திருமுறைகள் , ஆழ்வார்களின் பிரபந்தங்கள் வரை, கற்றுத் தேர்ந்து இன்னிசைக் குரலில் உரையாற்றும் நுண்மாண் நுழை புலத்தவர். எந்த இலக்கியம் ,எந்தத் தலைப்பு, ஆனாலும்,தெளிந்த அறிவும் ஆய்வுத்திறமும் துலங்க, நம் மனங்கொள்ளும் வகையில் பேசும் திறன்மிக்கவர். தம் உரையாற்றலால் கேட்பார்ப் பிணித்து மகிழ்வூட்டும் அவரது உரைகளைக் கேட்கும் போதெல்லாம் என் மனதிற்குள் ஒரு வருத்தம் ஏற்படும்.

"இவரது அரிய கருத்துகளும் சிந்தனைகளும் சொற்களின் ஒலியாய் காற்றிலே மிதந்து கால இடைவெளியில் மறைந்துபோய்விடுமே", என்று வருந்துவேன். அவையெல்லாம் எழுத்துக்களின் வடிவாகி , நூலாகப் பரிணமித்து எதிர்காலத்துக்கும் ,வருங்காலச் சந்ததியினருக்கும், நிரந்தரமான ஆவணங்களாகப் பயனளிக்குமே என்று நினைப்பேன். இவரைப் போன்ற பேராசியர்கள் பலரும், தம் பணிக்காலத்திலேயே தம் பெயரை நிலை பெறச் செய்யும் வகையில் நூல்களைப் படைத்து வருகின்றார்கள்.

பேராசிரியர் மெய்யாண்டவர் இயல்பாகவே எழுத்தாற்றல் கொண்டவர்தான். உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் காரைக்குடிக்கிளையில் தொடக்ககாலம் தொட்டே உறுப்பினராக இயங்கி வருகிறார். அச்சங்கம் நடத்தும் கவிதை, கட்டுரை - ஏன் சிறுகதைப்

போட்டிகளிலும்கலந்து கொண்டு பாராட்டும், பரிசும் பெற்றுள்ளார். ஓய்வு பெற்ற பிறகும், தம் இலக்கியத்திறனை எதிர்காலம் கண்டறிந்து மகிழும் வாய்ப்பாக ஒரு நூலும் வெளியிடாதிருக்கிறாரே என்று எனது நெடு நாட் கவலையைப் போக்கும் வகையில் அவரது முதல் இலக்கியப் படைப்பு அச்சுருவத்தில் என் கைக்கு வந்தபோது பேருவகையடைந்தேன்.

முதல் கட்டுரையே, பாரதியாரின் 'தெய்வம் நீ என்றுணர்' என்னும் அருமையான தலைப்பில் அமைந்துள்ளது ,குறிப்பிடத்தக்கது.

**"நான் படைப் பதனால்**
**என் பெயர் இறைவன்"**

என்ற கவியரசு கண்ணதாசனின் ஆளுமை மிக்க பாடல் நம் நினைவுக்கு வருகிறது.முதல் கட்டுரையில்,முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்து வரலாற்றுச் சாதனை படைத்த இளம் தெய்வங்கள் இருவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் அவர்களைப் பற்றிப் பேராசிரியர் மெய்யாண்டவர் கூறும் செய்திகள் நம் கண்முன்னே மேலும் பல செய்திகளை எழுப்பி நிற்கின்றன.

அமெரிக்க நாட்டில் அனைத்துச் சமயங்களைச் சார்ந்த பழுத்த ஞானிகள், அறிஞர்கள் சிந்தனையாளர்களிடையே , இளம் சிங்கமாக நின்று ,சங்க காலத்துக் கணியன் பூங்குன்றனின் " யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்னும் உலக சகோதரத்துவத்தின் பரிணாமமாக அமெரிக்க நாட்டுச் சகோதரர்களே! சகோதரிகளே! என்று விளித்த முழக்கம், இன்றும் நம் அகச் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. "ஒரு நூறு நல்ல இளைஞர்களைக் கொடுங்கள். நல்ல வளமான நவபாரதத்தை உருவாக்கிக் காட்டுகிறேன்" என்று நம் பாரம்பரியம் மிக்க புதிய நாட்டை நிர்மாணிக்க, அவர் காட்டிய துடிப்பு இன்றும் நம் இளைய சமுதாயத்திற்கான இலட்சியமாக ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

இவரைப் போலவே, ஒரு முழுமையான வாழ்வுக் காலத்தில் எத்தனையோ கவிஞர்கள் எட்டமுடியாத சிந்தனைச் சிகரங்களைத் தன் முப்பத்தொன்பது ஆண்டுக் கால வாழ்வில் பாரதி எட்டிப் பிடித்து தேசியக் கவியாகத் திகழ்வதை பேராசியர் நம் நெஞ்சத்துள் எழுப்புகிறார்.

பசி, வறுமை, நோய் நொடி, ஊர் ஊராய் அலைச்சல், ஆதரவின்மை என எத்தனையோ தடைகளைத் தாண்டி அவன் எழுப்பிய சிந்தனைகள் தாம் எத்தனை? எத்தனை?...

சிறுவர்க்கான பக்திப் பாடல்கள், இளைஞர்க்கான புதிய ஆத்திசூடி, பாரத நாட்டின் ஒற்றுமை, சுதந்திரப் போராட்டம் ,பெண்களின் பெருமை ,பெண்விடுதலை குறித்த புரட்சி, தமிழின் சிறப்பு மெல்லத் தமிழ் இனிச்சாகும் என்ற நிலையை மாற்றுவதற்கான எழுச்சி பல உறவுநிலைகளில் கண்ணனைத் தரிசனம் செய்தபாங்கு, குயில்பாட்டு, பாரத தேவியாகப் பாஞ்சாலி சபதம் படைப்பு,இசைக்கலையைத் தமிழிசையாகப் போற்றிய பாடல்கள் இவற்றிற்கெல்லாம் மேலாக,புதிய நடையில் வசன கவிதை, சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வு சொல்லும் உரைநடை, என எத்தனை எத்தனை படைப்புகள் முப்பத்தொன்பது ஆண்டு கால வாழ்க்கையில் சாதித்துள்ளான் என்று நம்மை வியப்பிலும் பெருமிதத்திலும் ஆழ்த்தும் சிந்தனை அலைகளை இக்கட்டுரை நம் சிந்தையில் எழுப்புகிறது.

பாரதிக்குள் பெண்ணியத்தை விதைத்த சகோதரி நிவேதிதை, அண்ணல் காந்தியடிகள், திருமூலர், தாயுமானவர், ராமலிங்கவள்ளலார் அருணகிரியார், ஆதி சங்கரர், திருவள்ளுவர் முதலான தெய்வப்பிறவிகளைப் பற்றிய குறிப்புகளையும் ஆங்காங்கே நமக்கு நினைவூட்டிக் கட்டுரையைச் சுவை ததும்பப் படைத்துள்ளார்.

தாம் பிறந்த மண்ணின் மாண்பு துலங்க அவதரித்த மதுரகவி ஆண்டவரின் வாழ்க்கையைச் சிறப்பாக ஆய்வு செய்து வரலாற்று பூர்வமான தரவுகளுடன் "மதுரகவி ஆண்டவரும் மயில் மலை முருகனும்" என்ற கட்டுரையைப் படிக்குபோது குன்றக்குடி முருகன் மீது அவர் பாடியுள்ள பனுவல்களின் பக்திச்சுவை , இலக்கியச்சுவை முதலியவற்றை உணர்கிறோம். குன்றக்குடி சண்முகநாதனின் மீது மதுரகவி ஆண்டவர் பாடியுள்ள 18 நூல்களிலிருந்து 6 பாடல்களை எடுத்துக் காட்டிக் கவிஞரின் முருகபக்தியையும் கவித் திறனையும் போற்றியுள்ளார்.

"தேரும் தேரின் சக்கரங்களும்" என்னும் தலைப்பிலான கட்டுரை பண்டையத் தமிழர் சமுதாயத்தில் தேர் பெற்றிருந்த முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகிறது. மக்களின் ஒற்றுமையையும் ஒன்றுபட்ட வலிமையையும் உணர்த்தும் உருவகமாகத் திகழ்ந்தது தேர். தேர் என்னும் சொல், தெளிதல் என்னும் பொருளில் வள்ளுவரால் கையாளப் பெறுகிறது. மன்னனை உயிராகவும் மக்களை உயிரால் இயக்கப்படும் , உடலாகவும் போற்றி "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று இலக்கணம் வகுத்தான் சங்கப்புலவன் .

இந்த நிலை காலப்போக்கில் பரிணாம வளர்ச்சியுற்று மக்களால் இயக்கப் பெற்ற குடிமக்களாட்சியாக பிரஞ்சுப் புரட்சி ருசியப் புரட்சி என வரலாறு மாறியதைப் பல நூற்றாண்டுகள் முன்னதாகவே கவிச்சக்கரவர்த்தி கம்பன், தயரதனை 'உயிரெல்லாம் உறைவதோர் உடம்புமாயினான்' என்றுமக்களின் உயர்வைக் குறித்துச் சென்றான்.

தமிழர்தம் நாகரிகத் தொன்மையைத் "தொல்காப்பியர் காட்டும் இனிய இல்லறம்" என்னும் கட்டுரையில் விரிவாக எடுத்துரைத்துள்ளார் . உலக மொழிகள் எல்லாம் தம் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் கூறியுள்ளன. ஆனால் தமிழர் கண்ட தொல்காப்பியம்

மக்கள் தம் வாழ்க்கைக்கான இலக்கணம் கூறும் தனிச் சிறப்புடையது. மக்கள்தம் வாழ்வியலை அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என வியந்து கூறி நெறிப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர் .இக்கட்டுரையில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், பற்றி ஆங்கில மொழிக் கூற்றுக்கள் வழியாகத் தமிழ்மொழியின் சிறப்பைப் பேராசிரியர் நிலை நிறுத்துவது குறிப்பிடற்குரியது.

"நற்றிணை காட்டும் நயத்தகு காதல்" என்னும் கட்டுரையில் 192,புலவர்கள் திணை அடிப்படையில் குறிஞ்சியில் 130 பாடல்களையும், பாலையில் 107பாடல்களையும், நெய்தலில், 101 பாடல்களையும், மருதத்தில் 33 பாடல்களையும் ,முல்லையில் 28 பாடல்களையும் யாத்துள்ள விவரங்களைக் கூறி, தமிழர்தம் நாகரிக வாழ்வைச் சிறப்பிக்கிறார்.

"திரைகடல் ஓடித் திரவியம் தேடும்" வழக்கம் பொருள்வயிற் பிரிவே ஆகும். பொருள் தேடச் சென்றுள்ள தலைவன் திரும்பி வரும் வரை பிரிவுத் துயரில் உழன்று ஆற்றியிருப்பதற்குக் காரணம் பொருள் தேடச் செல்லும் தலைவனோடு தலைவி செல்வது வழக்கம் இல்லை. இந்த நாகரிகத்தைத் தொல்காப்பியம் "முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை" எனக் குறிக்கும் .

நற்றிணைப் பாடல்களின் நயத்துக்கு இரண்டு பாடல்களை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார் பேராசிரியர்.

"நின்ற சொல்லர் நீடுதோறினியர்
என்ற தலைவியின் கூற்றில் சிறியன சிந்தியாதான்" என்று கம்பன்

பாடியுள்ளதைக் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார். பொருள் தேடிப் பிரிந்த தலைவனின் உடல் அறிவும் உணர்வுமாகிய இரு கயிறுகளால் இழுக்கப்படும் தேய்புரி பழங்கயிற்றுக்கு உவ மித்திருக்கும் நயத்தால் பாடிய புலவர்க்குத் தேய்புரி பழங்கயிற்றினார், என்ற சிறப்புப் பெயர் வாய்த்தமை குறிப்பிடத்தக்கது.

குன்றக்குடித் திருமடத்தில் திங்கள் தோறும் நடைபெறும் சிந்தனை நந்தவனக் கூட்டத்தில் "சுற்றந் தழால்" என்னும் குறளதிகாரம் பற்றிப் பேராசிரியர் ஆற்றிய உரை சிறப்பான ஓர் ஆய்வுரைக்கான கூறுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. திருக்குறளின் சிறப்புக்களைப் பிற்காலப் பேறிஞர்கள் பாராட்டியிருப்பதையும் சுற்றந்தழால் பற்றிப் பல்வேறு உரையர்சிரியர்களின் கூற்றுகளையும் இலக்கியங்கள் பலவற்றின் எடுத்துக்காட்டுகளோடு விளக்கியுள்ள திறம் படித்தின் புறத்தக்கது .

கற்றறிந்தோர் ஏந்தும் கலித்தொகையில் மனிதநேயம் விளக்கப்பட்டிருப்பதைச் சிறப்பாகத் தொகுத்துள்ளார் மெய்யாண்டவர் "ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவருக்கு உதவுதல்" என்று தொடங்கும் பாடலை விளக்குவதோடு, பண்டைக்காலத்து ஆடவர் மேற்கொண்ட மடலேறுதல் என்னும் பழக்கத்தையும் சுட்டிக் காட்டியுள்ள திறம் போற்றகுரியது.

சங்க காலத்திற்குப் பிறகு உருவான அறநூல்களைப் பதினெண்கீழ்க்கணக்கு எனத் தொகுத்தவற்றில் ஏலாதி, இன்னிலை , கைந்நிலை ஆகிய நூல்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இவற்றின் முரண்பாடுகளை அரிதின் ஆய்ந்து எழுதியுள்ளார். அந்நூல்களில் கூறப்படும் அறிவுரைகளின் தன்மையையும், கவித்திறனையும், பல பாடல்கள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளமை போற்றுதற்குரியது.

சிறுகதையும் தம்மால் எழுதமுடியும் என்பதைக் காட்டுவார்போல் தன் தாய்மண்ணிலே நடந்த மூன்று தலைமுறைக் கதையைச் சுவையாக உணர்வுபூர்வமாகப் படைத்து "வாழ்வே கனவுதான்" என்ற நிலையைக் காட்டியுள்ள திறனும் பாராட்டுக்குரியதே.

தம் சமுதாயத்தில் இடம் பெற்ற விவாதத்திற்குரிய பல பழக்கவழக்கங்களைச் சுட்டிக்காட்டிவதோடு அந்த மண்ணின்

மைந்தர்களனின் பேச்சு மொழியை அப்படியே துல்லியமாக எழுதியுள்ளார். இக்கால முற்போக்கு எழுத்தாளர்கள் போல வட்டாரமொழிக்குச் சிறப்பிடம் தந்துள்ளமை சிறுகதையின் வாசிப்புக்கு ஆர்வத்தைத் தூண்டுகிறது வேப்பங்குள வட்டார மொழி இனிய மொழி உரையாடலாகத் திகழ்ந்து. சிறுகதையின் இயல்பை உயர்த்திப் பிடிக்கிறது.

பத்தாம் திருமுறையாகத் திகழும் திருமந்திரத்தில், பல தொடர்கள் அரிய கருத்தை வெளிப்படுத்துவனவாக இருந்தாலும் அவை எளிய சொற்களில் அமைந்து எளிதாக நம் இதயங்களில் பதிந்து கொள்ளும் இயல்பின்

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் ...**
**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்...**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்**
**படமாடக் கோயில் பரமர்க்கு அங்காமே..**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே**

எனப் பல தொடர்கள் எளிய சொற்களால் அரிய கருத்துக்களை எடுத்தியம்புகின்றன.

திருமுறைத் தொகுப்பு முறையில் பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமந்திரம், சாத்திரவகையின் பாற்படும். எனவே அந்நூலில் சாத்திர மெய்ம்மைகள் பல விளக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் முக்குற்றம் ,முப்பதம், முப்பரம், முத்துரியம் என்ற தலைப்பில் ஆழ்ந்த தத்துவங்களை எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கியுள்ள சிறப்பு, உண்மையிலேயே மெய்யாண்டவர் அவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்துவதே ஒருதலை ஆக ஒரு சோற்றுப் பதமாக சிறப்புடன் எழுத்து வடிவம் கண்டுள்ள இந்த நூல்,தொடர்ந்து பல படைப்புகளாகப் பெருக வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

## நன்றியுரை:
## புலவர் ஆறு.மெ.மெய்யாண்டவன்



நான் சிவகங்கை மாவட்டம், வேப்பங்குளம் மண்ணில் பிறந்தவன் என் பிறந்த நாள் 27.3.1949 திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்றேன். அத்துடன் எம்.ஏ. பி. லிட். பி. எட்., பட்டங்களைப் பெற்றேன். தேவகோட்டை சமீன்தார் அரு. சோமநாராயணன் செட்டியார் இளம்பருவத்திலே சிவசிந்தனையூட்டிய செம்மலாவார். தமிழாசிரியராய், முதுகலை மொழியாசிரியராய், தலைமையாசிரியராய், வட்டார வளமைய மேற்பார்வையாளராய்ப் பணியாற்றி 31.05.2007 -இல் ஒய்வு பெற்றேன். ஒய்வுக்குப்பின் 10 ஆண்டுகள் கல்வியியல் கல்லூரியிலும் கலையறிவில் கல்லூரியிலும், தனியார் பள்ளியில் கல்வி ஆலோசகராவும் பணியாற்றினேன். என் வாழ்வில் ஒளிவிளக்கேற்றியவர் தமிழாசிரியர் அருள்செல்வராசு ஆவார். பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றிய நான், காரைக்குடியில் நிலையாகத் தங்கியுள்ளேன். காரைக்குடியில் இலக்கிய உலகில் அறிமுகப்படுத்தியவர்கள் குன்றக்குடி, அருள்நெறியத் தந்தை அடிகளார் . தவத்திரு பொன்னம்பல அடிகளார் , கோவிலூர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள், காசி ஸ்ரீ அருசோ, பேராசிரியர் அய்க்கண் அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சொ. சுப்பையா பேராசிரியர் மா. சோலையன் , பேராசிரியை கா. மணிமேகலை செல்வத்துரை, தமிழாகரர் தெ. முருகசாமி காப்பியக்கவிஞர் நா.மீனவன் பேராசியர் நா. சுப்பிரமணியன்,குன்றக்குடி ஆதீனப்புலவர் மரு. பரமகுரு, பேராசிரியர் ம.கார்மேகம் த.மு.எ.ச.க. தமிழகத் தமிழாசிரியர் கழக அன்பர்கள் சன்மார்க்க வள்ளலார் சங்க அன்பர்கள் இவர்கள் அனைவரும் என்னைப் பெருமைப்படுத்திப் பெருமிதம்கொள்ள வைத்தவர்கள்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளாருக்கும், வாழ்த்துரை வழங்கிய அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சொ.சுப்பையா அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த பேராசிரியர் அய்க்கண் அவர்களுக்கும் என் நன்றிகள்.

இந்த நூலை வெளியிட்டு உதவிய வள்ளுவர் பேரவைத் தலைவர் இலட்சிய ஆசிரியர் , கவிஞர் மெ. செயம்கொண்டான் மற்றும் அவரது நண்பர்கள் அனைவருக்கும் என் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள பல கட்டுரைகள், புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதினம், உலகத்தமிழ் எழுத்தாளர் சங்கம் , ஸ்ரீராஜராஜன் கல்வி இயல் கல்லூரி, ஸ்ரீ வெங்கடேசுவரா கல்வியல் கல்லூரி ஆகியவற்றில் கருத்தரங்கக் கட்டுரைகளாக வெளிவந்தவை. அலுவலர் கூட்டமைப்புத் தலைவர் திரு.ஆ. கோவிந்தராமானுசம் திரு.மு. நாகலிங்கம், புலவர் .இராம. அருச்சுனன் புலவர்.சி. மாதவன் கவிஞர் ஜனநேசன் இவர்கள் என் வெற்றியின் பங்காளிகள். கல்லூரி ஆகியவற்றில்.... தாங்கள் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல் இது என் முதல் முயற்சி, காலங்கடந்த சிந்தனை எனப் பேராசிரியர் அயக்கண் அவர்கள் கூறியதால் ஏற்பட்ட தூண்டுதலே இந்நூல் வெளிவரக் காரணம் அன்பர்கள் அனைவரும் இந்நூலை வாங்கி உதவ அன்போடு வேண்டுகின்றேன். பேராசிரியர் கண்ணதாசன் , பேராசிரியர் சே. கணேசன், க. திருப்பதி, புகழேந்தி இவர்களும் என் அன்பிற்கினியவர்கள். ஆயிரக்கணக்கான மாணவர்கள் என் நினைவைப் போற்றும் பலரும் இம்மாவட்டம் முழுதும் பணியில் உள்ளனர். இம்மாவட்டப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அதிகம் பேர் உள்ளனர் . எல்லோரும் என் நூலை வாங்கிப் பயனுற அன்போடு வேண்டுகிறேன்.

# தெய்வம் நீ என்று உணர்

## தோற்றுவாய் :

உலகம் தோன்றிய நாள்தொட்டு இற்றைநாள் வரை உயிர்களின் தோற்றமும் வளர்ச்சியும், நுகர்ச்சியும் இறுதியில் தளர்ச்சியும் இருந்து வருகின்றன. ஊர்வன, பறப்பன, நடப்பன, இயல்வன எனப் பல்லுயிரினங்கள் இப்பாரில் வாழ்வன. இப் பல்லுயிரினங்களில் மனிதப் பிறப்பே மகத்தானது. இதையே "அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்றார் ஔவை மூதாட்டி. "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்பார் அப்பர் அடிகள். "மானுடம் வென்றதம்மா" என்பார் கம்பர். இவ்வரிகள் எல்லாம் மனிதப் பிறப்பின் மாண்பைத் தெற்றென விளக்குகின்றன.

நல்லதன் நன்மையும், தீயதன் தீமையும் பகுத்துணர்ந்து அறிபவன் மனிதன். உணர்ந்து அறிந்த கருத்தைப் பிறர்க்கு உரைக்கும் சொல்லாற்றல் பெற்றவன் மனிதன் ஒருவனே. இத்தகு மனிதன் மற்ற உயிரினங்கள் போல் உண்பதும் உறங்குவதும் மட்டுமே செய்து வாழின் மனிதனாகான். வையத்துள் வாழ வேண்டும் வழியறிந்து வாழ்பவனே வானுலகத் தெய்வத்துக் கொப்பாய்க் கருதப்படுவான். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய் என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் மகாகவி பாரதியார் வாக்கு வலியுறுத்துகின்றது. தெய்வமாகும் பெற்றி எவ்வாறென்பதே ஈண்டு நாம் உணரவேண்டுவது, உணரச் சான்றோர் வாழ்வே சான்று, அத்தகு சான்றோர் வாழ்வின் சாரமே நாம் காணப் புகுவது.

பாரதநாடு ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்த காலம். பாரத மக்கள் மண்புழுக்களாய், மன உணர்விழந்து வாழ்ந்த காலம். ஆங்கிலேயரைக் கண்டு அஞ்சி அஞ்சிச் செத்த காலம். இதனால் வெகுண்ட தெய்வக் கவிஞர் தேசியக் கவிஞர் பாரதி, "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என முழங்கினார். ஒளி படைத்த கண்ணினாய் வா வா உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா என ஒளி படைத்த பாரதம் வருவதாய்க் கனவு

கண்டார். இந்தியனே நீ சாதாரண மனிதனில்லை. தெய்வம் நீ என்பதை உணர். தேசம் காக்கப் புறப்படு என்றார் கொத்தித்திரியும் கோழி எத்தித் திருடும் காக்கை, பாலை நல்கும் பசு, வாலைக் குழைக்கும் நன்றிமிகு நாய், வண்டி இழுக்கும் குதிரை, வயலில் உழும் மாடு, நமை அண்டி வாழும் ஆடு இவற்றை ஆதரிக்க வேண்டும். இந்த உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் என்றார். சொல்லடி சிவசக்தி எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய் வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே எனத் தான் இந்த உலகத்திற்குப் பயன்பட்டு வாழ அருள் தருமாறு, அன்னை பராசக்தியை வேண்டுகிறார். தன் தெய்வீகக் கவிதைகளால் பாரத நாட்டின் விடுதலைக்கு வித்திட்டார். "நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" எனத் தன் குறிக்கோளால் இந்திய மக்கள் இதயம் புகுந்தார். "கஞ்சி குடிப்பதற் கிலார் அதன் காரணங்கள் இவை எனும் அறிவு மிலார்" என்று இந்தியாவில் அறியாமையால் வாழும், பசியால் வாடும் இந்தியரைக் கண்டு கண்ணீர் விட்டார். இவ்வாறு பிறர்க்காகவே தான் வாழ்ந்து தெய்வப் பிறவியானார். நம் எல்லோரையும் "தெய்வம் நீ என்றுணர்" என உணர்த்தினார். மகாகவி பாரதியின் மானசீக குரு சகோதரி நிவேதிதை யாவார். சகோதரி நிவேதிதை மார்கரெட் நோபிளாய் இருந்து இலட்சியத்துறவி, வீரத்துறவி விவேகானந்தர் அமெரிக்காவில் நிகழ்த்திய இந்து சமயத் தெய்வீகச் சொற்பொழிவால், விவேகானந்தர் சீடர் பெண்மணியாகி இந்தியா வந்தவர். தன் பெயரைச் சகோதரி நிவேதிதை என ஆக்கிக்கொண்டார். மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான் என்பதைவிட, எவ்வாறு வாழ்ந்தான் என்பதே இன்றியமையாததாகும். வாழும்போதே வாழாமற் போகின்றவர் பலர். சிலர் மட்டுமே தெய்வப் பிறவிகளாய் வாழ்ந்து தம் நிலைத்த செயல்களால் அழியா அமர வாழ்வை அடைவர். பாரதியார் முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்தார். ஆனால் அவர் கவிதைகளில் இன்றும் வாழ்கிறார். சுவாமி விவேகானந்தர் முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்தார். ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்குரிய மகத்தான பணிகளைச் செய்து உலகம் முழுவதும் நம் இந்து சமயத்தின் பெருமையைப் பரப்பினார். "ஏழை ஒருவனிடம் மதபோதனை

செய்யாதே, அவன் பசியைப் போக்க வழி காட்டு அதுவே முதல் மத போதனை" என முழங்கிய புரட்சித் துறவி விவேகானந்தர் ஆவார். இவ்விரு தெய்வச் சான்றோரும் தெய்வம் தாமே என உணரச் செய்த பெற்றியர். "தெய்வம் நீ என்றுணர்" எனும் வாக்கின் இலக்கியமாய் வாழ்ந்தவர் அண்ணல் காந்தியடிகள்., வெறும் மனிதர்களை "ஆத்மா" என்போம். பிறர்க்குத் தீங்கு செய்ய முயல்பவரைத் துராத்மா என்போம். பிறர்க்காகத் தம்மை அழித்துக் கொள்பவரை மகாத்மா என்போம். "எவன் ஒருவன் ஏழைக்காகத் தன் இதயத்திலிருந்து இரத்தக் கண்ணீர் வடிக்கின்றானோ அவனை நான் மகாத்மா என்பேன்" என்றார் விவேகானந்தர். அந்தப் பொன் மொழிக்கு எடுத்துக் காட்டாய் வாழ்ந்தவர் மகாத்மா காந்தியடிகள். இங்கிலாந்தில் வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். ஆனால் இந்திய நாட்டின் அவலம் கண்டு ஆடம்பரம் விடுத்து, சட்டையை நீக்கினார். இடுப்பிலே மூன்றரை முழத்துண்டு, மார்பைப் போத்திய துண்டு கையில் தடி ஒன்று.இதுவே அவர் கொண்ட வறுமைத் திருக்கோலம். இந்திய மக்கள் என்று வறுமை நீங்கி நல்லாடை உடுப்பரோ, அன்றே நல்லாடை நான் உடுப்பேன் என உறுதி பூண்டு, இறுதிவரை வாழ்ந்த ஏந்தல். "காடெல்லாம் சுற்றிச் சுற்றிக் கடுந்தவம் செய்தாரில்லை, நாடெலாம் சுற்றிச் சுற்றி நலிந்தவர் துயரம் தீர்த்தார்" பகவத்கீதையை "சத்தியமான ஞானத்தைப் போதிக்கும் சிறந்த நூல்" எனக் கருதிப் பயின்று அதன்படி வாழ்ந்தவர்.

பகவத்கீதையில் மனத்தவம், வாக்குத் தவம், உடல் தவம் மூன்றும் தெளிவுறுத்தப்படுகின்றன. இதில் மனத்தவம் மேலானது. சொல்லையும் செயலையும்விடச் சிந்தனையில் அடக்கம், பழகியவனுக்கு வாயடக்கமும் (சொல்), மெய் (உடல்), அடக்கமும் தாமே வந்து அமைகின்றன. இந்த மனத் தவத்தால் மாநிலம் போற்றும் பேறு பெற்றவர் அண்ணல் காந்தியடிகள்.

"ஏழைகளுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டு" என்னும் கருத்தைத் திருமூலர் எனும் ஞானி தெளிவுறக் கூறுகின்றார். அப்பாடல் இதோ,

"படமாடக் கோவில் பரமர்க் கொன்றீயின்
நடமாடக் கோவில் நம்பர்க் கங்காகா

நடமாடக் கோவில் நம்பர்க் கொன்றீயின்
படமாடக் கோவில் பரமர்க் கங்காமே"

ஏழை வழிபாடே இறைவழிபாடு என்பது இதனால் விளங்கும். இக்கருத்தையே, "அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே" எனத் தாயுமானவர் கூறுகின்றார். இராமலிங்க வள்ளலாரும் "ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று இறைவனை வேண்டினார். அதன்படி வடலூரில் சத்திய பரிபாலன் தரும ஞானசபை எனும் அறச்சாலை நிறுவி, பசியால் வாடி வருவோர்க்குப் பசி நீக்கினார். இன்றுவரை அப்பணி இடையறாது நிகழ்கின்றது.

## நிறைவுரை:

எவ்வுயிரும் எம்முயிர் போல் எண்ணி இருக்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே எனும் தாயுமானவர் வாக்கின்படி, எல்லாவுயிர்களையும் தன் உயிர் போலக் கருதி வாழ வேண்டும். "நீயும் அவையும் வேறில்லை" என எண்ணத் தொடங்கும் நிலையே நீ தெய்வம் ஆகும் நிலை. இதையே அருணகிரியாரும் "யானாகிய என்னை விழுங்கி வெறுந்தானாய் நிலை நின்றது தற்பரமே" என்றார். ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் வேறில்லை. "நீயே பரம்பொருள்" எனும் ஆதிசங்கரர் அத்வைத தத்துவத்தையே மகாகவி பாரதியார், "தெய்வம் நீ என்றுணர்" எனும் சொல்லில் அடக்கினார். இதையே வான்புகழ் வள்ளுவரும்

"யான்எனு தென்னுஞ் செருக்கறுப்பான வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்" என்றார்

எனவே, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வம்போல் தெய்வப் பெற்றி பெற முயல்வோமாக.

# மதுரகவி ஆண்டவரும் மயில் மலை முருகனும்

**முன்னுரை:**

மருதுபாண்டிய மன்னரின் கண்கண்ட கடவுள் குன்றக்குமரன், அவன் அருள் பெற்று உய்ந்த ஆன்றோர்களும் ஆன்மீகச் சான்றோர்களும் பலராவர். பாம்பன் சுவாமிகளும் மதுரகவி ஆண்டவர் சுவாமிகளும் குன்றக்குடி குமரனருளை மாந்தி மகிழ்ந்தவர்கள். அவ்விருவருள் மதுரகவி ஆண்டவரின் வாழ்க்கைக் குறிப்பையும், மயில் மலையாம் குன்றக்குடி முருகனைப் பற்றியும் அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்குட நன்னீராட்டு விழா வேளையில் சிந்திப்பதும் வந்திப்பதும் மகிழ்வுதரும் ஒன்றாகும்.

**தோற்றம்:**

மணிவாசக சரணாலய அடிகள் எனப் பின்னாளில் வழங்கப் பெற்ற மதுரகவி ஆண்டவர் எனும் பெரியார் சிவகங்கை மாவட்டம், கல்லல் எனும் ஊரை அடுத்த வேப்பங்குளம் கிராமத்தில் தோன்றினார். இப்பகுதி பாரத நாடு விடுதலை அடைவதற்கு முன் மருதுபாண்டியர் ஆண்ட சேது காவலர் நாடு என அழைக்கப்படும் சிவகங்கை மாவட்டம் ஒரு குறுநில நாடு. மன்னர் ஆட்சிக் காலத்தில் 22-1/2 கிராமங்கள் அடங்கிய இப்பகுதி குன்னங்கோட்டை நாடு என அழைக்கப்பெற்றது. பழைய இராமநாதபுரம் மாவட்டம் சேதுபதி மன்னரால் ஆளப்பெற்ற சேது நாடு என வழங்கப்பெற்றது. சிவகங்கைப் பகுதி மருதுபாண்டியர் ஆண்ட மருதுபதி என்றும் சேதுகாவலர் பகுதி என்றும் சிவகங்கை சமஸ்தானம் என்றும் வழங்கப்பெற்றது. பல கிராமங்களை இணைத்து நாடு என வழங்கினர். இம்மாவட்டம் ஏழு கிளை பதினான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இதில் கல்லலைத் தலைமையிடமாகக் கொண்டு 22-1/2 கிராமங்கள் அடங்கிய பகுதியே குன்னங்கோட்டை நாடு எனப்பட்டது. இந்நாட்டுப் பகுதியில் வேப்பங்குளம் ஒரு சிறு கிராமம். எலுமிச்சை, நாரத்தை, தென்னந்தோப்புகள் அடங்கிய வளமான பகுதி. சின்னக்கொழும்பு என வெளியூர் மக்களால் வழங்கப்பெற்ற பகுதி, இங்கே 1885 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 23 ஆம் நாள் (பார்த்திப ஆண்டு

ஆவணித்திங்கள் ஆறாம் நாள்) மதுரகவி ஆண்டவர் தோன்றினார். தாயார் பெயர் இலக்குமி அம்மாள், தந்தையார் பெயர் சோணைமுத்து அம்பலகாரர். அடிகளாரின் பாட்டனார் சின்னைய தேசிகர் ஆவார். இவர் சிறந்த ஞானியாகவும், யோகியாகவும் விளங்கினார்.

கம்பராமாயணம் முதலிய காவியங்களையும், வேதாந்த நூல்கயைும் நன்கு ஓதியுணர்ந்தவர். நாநாஜீவவாதக்கட்டளை எனும் நூலை ஆனந்தக் களிப்பு மெட்டில் இயற்றியவர்.

**இளமைப் பருவம்:**

சின்னைய தேசிகர் அருளால் தோன்றிய இவருக்குப் பெற்றோர் ஆண்டவன் எனப் பெயரிட்டனர். பிற்காலத்தில் இவர் பிற புலவர்களால் மதுரகவி ஆண்டவர் என்றும், முத்தையாப் பாவலர் என்றும் துறவறம் பூண்டபின் மணிவாசக சரணாலய அடிகள் என்றும் அழைக்கப்பெற்றார். ஐந்தாம் வயதில் கல்வி கற்கத் தொடங்கினார். பன்னிரண்டு வயதிலேயே கொழும்பு, இரங்கூன் முதலிய இடங்கட்குச் சென்று நாட்டுக்கோட்டை நகரத்தார் தனவசியர் கடைகளில் கணக்கப் பிள்ளையாகவும், பின் மேலாளராகவும் பணியாற்றினார். இத்தொழில் மூலம் பெரும்பொருள் ஈட்டினார். அரும் பொருளே பெரும்பொருள் என்று மயங்கிவிடாமல் பரம்பொருளிடத்திலும் வரம்பிலா பத்திமை பூண்டு பாக்கள் ஆகிய பூக்களால் அருச்சித்துச் சிவன், முருகன், அன்னபூரணி அம்மன், எக்கலாதேவி அம்மன் போன்ற தெய்வங்களைப் போற்றிவழிபட்டார்.

**புலமைக் கல்வி:**

கல்வியை நன்கு கற்றுத்தேற விழைந்தார். வாசுதேவ நல்லூர் மணிமுத்து ஓதுவார் என்பாரிடம் நன்னூல் முதலிய இலக்கண நூல்களையும், திருவிளையாடற் புராணம், பெரியபுராணம் முதலிய சைவ இலக்கிய நூல்களையும் பழுதறப் பயின்றார். இளையான்குடி முகம்மது மீரா ஞானதேசிகன் இவர் குருநாதர்களில் ஒருவர். இவர் மீது மதுரகவி ஆண்டவர் 'அருள் வாக்கியக் குருவணக்க மாலை' எனும் நூல் பாடியுள்ளார்.

**மாணிக்கவாசகரிடம் அன்பு:**

இவர் மாணிக்கவாசகரிடம் மட்டிலாக் காதல் கொண்டார். திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் நாள்தோறும்

பாராயணம் பண்ணாமல் உணவருந்தமாட்டார். அடிக்கடி திருவாசகத்தை ஓதி உள்ளம் உருகுவார். சைவ சித்தாந்த நூல்களையும் கற்றுணர்ந்தார்.

அறிஞர் மாட்டன்பு.

ஆத்திசூடி விருத்தியுரையாசிரியர் வைத்தியலிங்கம் பிள்ளை நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக்கவிஞர் வேங்கடாசலம் பிள்ளை, பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் முதலிய தமிழ்ப் பெருமக்களிடத்தே தணியாக் காதல் கொண்டு பெரும் நட்புப் பூண்டவர்.

**திருமடம்:**

கல்லலில் திருமடம் ஒன்றைத் தம் சொந்தச் செலவில் அமைத்து அதற்கு மணிவாசக நிலையம் என்று பெயரிட்டு அதில் உறைந்தார்.

**தேர்த்திருப்பணி:**

கல்லலில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரப் பெருமானுக்கு நாட்டார்களின் உதவியையும் கொண்டு ஒரழகிய தேரைச் செய்து முடித்தார். தேரைச் செய்யும் பொழுது சிவகங்கைக்கடுத்த கீழைப்பூங்குடியில் இருந்த பெருஞ்செல்வராகிய இராமையா அம்பலகாரர் என்பவர் கைம்மாறு கருதாமல் பேருதவி செய்தார். அவருடைய நன்றியைப் பாராட்டுமுகத்தான் இயன்மொழி வாழ்த்து எனும் நூலைப் பாடினார். இது நல்ல சொற் சுவையும் பொருட் சுவையும் வாய்ந்த நூல் ஆகும். தேர்திருப்பணிக்கு ரூபாய் முப்பதாயிரம் தன் பணத்தை ஈந்தார். தேர் செய்த ஆண்டு 1920-22.

**துறவறம்:**

இவர் தமக்கு ஐம்பதாவது அகவை கடக்கும் போது குன்றக்குடி மேலமடத்துத் தலைவர் கணபதி சுவாமிகள் என்னும் பெரியார்பால் சந்நியாச தீக்கை பெற்றுத்துறவு பூண்டார். துறவியான பின் இவர் 'மணிவாசக சரணாலயர்' எனும் பெயரை மேற்கொண்டார்.

**தமிழ்த்தொண்டு:**

துறவனம் பூண்டபின் அடிகளார் தமது காலத்தைத் தொண்டுகளிற் செலவிட்டார். செய்யுள் நூல்கள் பல இயற்றினார். சொற்சுவை பொருட்சுவை சிறந்து விளங்கவும், விரைவாகவும் சந்தம் பிழையாமலும் பாடுவதில் இவர் மிகவும் வல்லவர். இவர் முருகக் கடவுள் மீது பேரன்பு பூண்டவர். அக்கடவுள் மீது பல

வண்ணப்பாக்களையும், பதிகங்களையும் பாடியுள்ளார். நயம் பொருந்திய இவருடைய பாடல்கள் படிப்பவர்க்குக் களிப்பை ஊட்டுவனவாகும். மதுரகவி ஆண்டவர் சுவாமிகள் முருகப்பெருமான் மீது ஏறத்தாழ 18 நூல்கள் பாடியுள்ளார். 1. திருப்பரங்குன்றப்பதிகம், 2. திருச்செந்தூர்ப் பதிகம், 3. திருப்பழநிப் பதிகம், 4. திருவேரகப்பதிகம், 5. பழமுதிர்சோலைப் பதிகம், 6. குன்றுதோறாடற்பதிகம், 7. குன்றக்குடிப் பதிகம், 8. குமரமலைப்பதிகம், 9. விராலிமலைப்பதிகம், 10. கொடுமளூர்ப் பதிகம், 11 போற்றி மடக்குத்திருப்பதிகம் முதலாயின. விரிக்கின் பெருகும். இவர் அருள்தரு சண்முகநாதப் பெருமான் மீது பாடிய குன்றக்குடிப் பதிகத்திலிருந்து ஓரிரு பாடல்களில் உள்ள நயங்களைச் சுட்டுவோம்.

**மயிலாடு குன்றைமலைமேவு மெங்க**
**ளயிலாடு செங்கை யழகர்க் - கியலாடு**
**பாட்டுரைக்க நெஞ்சிற் பயிலுமொரு கோட்டுக்**
**காட்டுமத யானைக் கழல்.**

என விநாயகப் பெருமானைத் தொழுது மயிலாடு குன்றக்குடி யுறையும் எங்கள் வேல்தாங்கிய சிவந்த கைகளை உடைய அழகரைப் பாடவருள் என வேண்டிக் குன்றக் குடிப்பதிகத்தைத் தொடங்குகிறார். அறுசீர் விருத்தத்தில் 11 பாடல்கள் பாடி உருகி முருகனை வேண்டுகிறார். கதிரவன் மேற்றிசையில் மறையும் போது அந்திவானம் சிவக்கும். அந்தச் சிவப்பு நிறமேனி ஒளிவீச சுந்தரசுவாமியாகிய சோமசுந்தரக் கடவுள் அருளிய குளிர்ச்சி நிறைந்த ஆறுமுகனே வா எனப் பொருள் தரும். பாடல் மேலே காட்டப்பெற்றது.

**அந்தி நிறைமேனி ஒளிர்சுந்த ரசுவாமியருள்**
**அந்தணளி யாறு முகவா** - என அழைக்கிறார்.

அம்பிகை பார்வதியின் திருமுலைப்பால் அமுது பருகி ஆகாயம் உலாவி வரும் குழந்தாய் எனும் பொருளில் முருகனை விளிக்கும் பாடல்வரி இது. "அம்பிகை தனாது முலை தந்த வமுதே பருகும் அம்பரம் உலாவுமதலாய்" இலக்குமி உறையும் மார்பையுடைய திருமால் மகிழும் வலியதோள் தாங்கிய மருகனே! என அழைக்கும் காட்சி மிக அழகு. அப்பாடல்வரி "செந்திருவுலாவு மருமந்திகழ்முராரி மகிழ் திண்புய விலாச மருக" என்பதாகும்.

அடுத்துச் செம்பவள மேனியைத் தழுவும் கொம்பாகிய பார்வதி வழங்கிய வேலைத் தாங்கிய இளைய வேலே வருக எனும் பொருளில் கூறும் பாடல்வரி சிந்தித்து மகிழத்தக்கது.

செம்பவள மேனி யொடு கொம்பிறைவரே தழுவு
செங்கை அயில் ஏறும் இளையோய்

எனும் பாடல் வரியே இது.

அடுத்து நஞ்சுண்ட கண்டனாகிய எங்களிறைவனாம் சிவன் செவியில் பிரணவத்தின் உட்பொருளை ஓதிய குமரா எனப் பாராட்டுகிறார் மதுரகவி.

நஞ்சம்அது மேவும் மிடறு எங்கள் இறையோர் செவியில்
நன் பொருளை ஓது குமரா
குன்றை மலை வாழ் முருகனே
என வாழ்த்தி மகிழ்கிறார்.

குன்றக்குடி முருகனிடம் மதுரகவி ஆண்டவர் வேண்டுவதென்ன தெரியுமா? சங்கரி மனைவி குமாரி. கன்னியா குமரியன்னை - இறைவன் பங்கில் உறைபவள். மாதொருபாகன் எனச் சிவனை அழைக்கிறோம். மேலும் "சங்கரி குமாரி இறைபங்கில் வளர்தேவிதரு தண்கருணை மேவு மதலாய் (குழந்தாய்) சந்ததமும் (எப்பொழுதும்) உன் நாமம் அதை இன்பமுடன் ஓதுபவர் தங்கள் எதிர் தோன்றி யாடி அருள்பவன் நீ" எனவும், இரவு பகலாய் அறிவு தடுமாறி வருந்தும் இந்த ஏழையின் சிறுமதியைக் கண்டு அருள் தந்து என்னை ஆட்கொள்வாய்! அப்பா முன்பிறப்பில் நான் செய்த தீவினைகளை நீக்கி உலக பந்தயத்திலிருந்து என்னை விடுவிப்பாயாக எனவும் வேண்டுகிறார். அவ்வேண்டுதலைத் தரும் மதுரகவி ஆண்டவரின் வரிகள் இதோ

சந்ததம் உன் நாமம் இதை இன்பமுடன் ஓதுபவர்
தங்களெதிராடும் இளையோய்
கங்குல் பகலாயவுநைந்து ழலும் ஏழைமதி
கண்டருளியாளும் இறைவா
பண்டு புரி தீயவினை யண்டியிது வேளைமிகு
பங்கமுற வாது செயு மோர்
பந்த மறவே கிருபை தந்துனது பாதநல
பங்கயமது ஓத அருள்வாய்
இங்கே உன்பாதம் நலம் தரும்

பாதம் அந்தப் பாத, தாமரை மலர்களை
ஓதிப்பாடி அருள வேண்டும் என்கிறார்.

இறைவன் பாதம் நலம் தரும் என்பது கருத்து. அதனால்தான் மாணிக்கவாசகப் பெருமான் "எம் பொருட்டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே" எனக் குறிப்பிட்டார் போலும். இப்படியெல்லாம் வேண்டிய மதுரகவி இறுதியில் குன்றைமுருகனைப் பின் வருமாறு வாழ்த்தி மகிழ்கிறார்.

பைந்தமிழின் ஆதி குரு எங்கள் குமரேசர்பத
பங்கயம் எந்நாளும் வாழ்க
தந் தம்வினை யாதி வழிபந்தமருள் சோதிவிழி
தண் கருணை நாளும் வாழ்க
கந்தமிகு மாலைமுடி ஒன்றி வளர் ஆறுமுக
கந்தர் அயில் நாளும் வாழ்க
கொந்திலகுசோலை செறி வந்தமது வோடுநதி
கொண்ட நகர் நாளும் வாழ்க
குன்றைமலை வாழ்க அருள் ஒன்று தமிழ்வாழ்கமுறை
கொண்டுலகம் வாழ்க மாதோ

குன்றக்குடி முருகனை வாழ்த்திய மதுரகவி ஆண்டவர் நிறைவாக உலகம் வாழ்க என உலகளாவிய சிந்தனையைக் குன்றக்குடி முருகனை வழிபடுவோர் பெறுக என நிறைவு செய்கிறார். மதுரகவி ஆண்டவர் நூல்கள் பலவற்றுக்கு ந.மு. வேங்கடசாமி நாட்டாரும், கரந்தைத் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையும் சிறப்புப் பாயிரங்கள் பாடியுள்ளனர் என்பது ஈண்டுணரத்தக்கது.

**நிறைவுரை:**

தாம் துறவு பூண்டு வாழும் காலத்தில் மதுரகவி ஆண்டவர் தென்காசி, திருநெல்வேலி, திருச்சி, பெரம்பலூர், இறுதியில் முருக்கன்குடி போன்ற ஊர்களுக்கு மாட்டுவண்டியில் சென்று தமிழ்த் தொண்டாற்றியுள்ளார். 1944 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 8 ம் நாள் (தாரண ஆண்டு ஆடித் திங்கள் 24 ஆம் நாள் சதய நட்சத்திரத்தில் பெரம்பலூரை அடுத்த முருக்கன்குடி எனும் சிற்றூரில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார். மதுரகவி ஆண்டவர் வழியில் குன்றை முருகன் அருள் பெற்றுய்வோம்.

*இடம்: திருவண்ணாமலை ஆதினக்கொலு மண்டபம்*
*நாள்: 18.12.93 சனிக்கிழமை மாலை 6.00 மணி,*
*சிந்தன நத்தவனம் 30 டிசம்பர் 1993.*

## *தலைப்பு:* **தேரும் தேரின் சக்கரங்களும்**

*பண்டைத் தமிழர் வாழ்வில், தமிழ் மன்னர்கள் வாழ்வில் தேர் ஓர் இன்றியமையா இடத்தைப் பெற்றுள்ளது. சமுதாய மக்கள் அனைவரையும் ஓரிடத்தில் கூட்டி அவர்களின் ஒன்றுபட்ட பலத்தை உணர்த்தும் பெருங்கருவியாகத் தேர் விளங்கியுள்ளது. உலகப் பொதுமயையாக வள்ளுவத்தை வழங்கிய வான்புகழ் வள்ளுவன் தேர் எனும் வேர்ச்சொல்லைப் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டுகிறர். ஒழுக்கம் உடைமை எனும் அதிகாரத்தில் வள்ளுவர் "பரிந்தோம் பிக்காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை" என்பார். இங்கே "தெரிந்தோம்பித் தேரினும்" எனும் சொற்றொடர் ஆய்வுக்குரியது. ஒழுக்கத்தை விரும்பிப் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் எல்லாப் பொருள்களிலும் ஆராய்ந்து தெளிந்தபின் உயிர்க்குத் துணையும் சிறப்பும் தருவது ஒழுக்கமே என்பார். இங்கே தேர் எனும் சொல் தெளிதல் எனும் பொருளில் வருகிறது. மகாபாரதத்தில் குருஷேத்திரப் போர்க்களம் பாண்டவர் படைத்தலைமையை அருச்சுனன் ஏற்றுத் தேரில் ஏறி நின்று கௌரவர் படையை நோன்குகின்றான். அவர்தம் தாயாதியர் எனும் உணர்வு, அவனுக்குத் தோன்றுகிறது. எப்படிப் போரிடுவது எனக்குழம்பிய அருச்சுனனுக்குப் பார்த்தனுக்குச் சாரதியாய் வந்து தேர்கடாவிய கண்ணன் பகவத்கீதையை உபதேசம் செய்து தெளிவைத் தருகின்றான். இங்கே ஒரு மனிதன் தெளிவுபெறத்தேர் ஒரு கருவியாகக் காட்டப்படுகிறது. மேலும் வள்ளுவர் நம் செங்கோன்மை எனும் அதிகாரத்தில் அரசன் ஒரு தலையாய் நீதி வழங்காது செய்யத்தக்கதை அறிந்து ஆராய்ந்து தெளிந்து நீதி வழங்குவதே அரசனது செங்கோன்மை என்கிறார். ஆகவே, அரசன் தெளிந்த அறிவு, படைத்தவனாக இருத்தல் வேண்டும். அத்தகைய அரசன் தான் மக்கட்குத் தெய்வம் என்று வைத்துப் போற்றத்தக்கவன் ஆவான். இதை வள்ளுவர் இறைமாட்சி எனும்*

அதிகாரத்தில் "முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்" என்கிறார். இறைமாட்சி-இறைவனது சிறப்பு இங்கே மக்கள் இறைவனாய்ப் போற்றும் அரசனது சிறப்புக் கூறல் சங்கப்பாடலும் "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" எனப்பாடும், கம்பன் மன்னனை உயிராகப்பாடாமல் மக்களை உயிராக்கித் தசரத மன்னனை உடம்பாக்கினான். விண் "செயிரிலா உயிரெலாம் சென்று நின்று வாழ் உயிரேலாம் உறைவதோர் உடம்புமாயினான்'' என்பதே அப்பாடல்வரி. சேக்கிழாரும் "மாநிலங் காவலன் ஆவான் மன்னுயிர் காக்குங்காலைத்தானதனுக் கிடையூறு தன்னால் தன்பரிசனத்தால் ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்கள் தம்மால் ஆன பயம் ஐந்துந்தீர்த்து அறங்காப்பான் அல்லனோ? என அரசன் யார் யார்க்குக் காவலன் என்பதை விளக்குகிறார். மனுநீதிச் சோழன் அம்மன்னன் ஆவான். இம்மன்னனே தன் மகன் ஆவின் கன்றைத் தேர்ச்சக்கரத்தில் நசுக்கிக் கொன்றதை அறிந்தான் ஆவுறு துயர மெய்தினான். ஓர் ஐயறி உயிராம் ஆவுகுகண்ணீர் அவன் நெஞ்சைச் சுட்டது. அமைச்சர்களில் ஒருவரை அழைத்துத் தன் மகனுக்கும் தேர்ச்சக்கரத்தினால் கொலைத் தண்டனை வழங்குக என ஆணையிட்டான். அமைச்சன் அவ்வாணையை நிறைவேற்ற அஞ்சித் தன் உயிர் போக்கிக் கொண்டான். இளவரசன் அரசர் உலா வரும் தெருவில்தான் சென்றான். ஆவின் கன்று தானே வந்து தேர்க்காவில் வீழ்ந்து இறந்தது. கன்று தேர்க்காலில் இடைப்புகுந் திறந்தது. எனவே, இளவரசன் மேல் குற்றமில்லை என அமைச்சர்கள் மன்னனிடம் கூறினார்". வளவன் நின் புதல்வன் ஆங்கோர் மனு நெடுந்தேர்மேல் ஏறி அளவில் தேர்த்தானை சூழ, அரசுலாம் தெருவில் போங்கால் எனும் வரிகளால் சேக்கிழார் இக்கருத்தை வலியுறுத்துகிறார். அரசன்தானே தன் மகனுக்குத் தேரூரும் திருவாரூர்த் தெருவில் தேர்க்காலில் இட்டுத்தண்டனை வழங்குகின்றான். மனுநீதி மன்னன் தன் மகன் மீது தேறேற்றிக் கொன்ற நிகழ்வைச் சேக்கிழார் தம் தீந் தமிழ்ப்பாட்டில் பின்வருமாறு படைத்துக் காட்டுகிறார்.

ஒருமைந்தன் தன்குலத்துக்குள்ளான் என்பதும் ஓரான். தருமம் தன் வழிச் செல்கை கடனென்று தன்மைந்தன் மருமம்தன் தேராழி உற ஊர்ந்தான். மனுவேந்தன் என்பது அப்பாடல்.

பெரியபுராணத் தொடக்கமே தேரையும் தேர்ச் சக்கரத்தையும் அடிப்படையாகக் கொண்டு தொடங்கியுள்ளது. பெரியபுராணம் உருவாகக் காரணமாய் இருந்த சுந்தரமூர்த்தி நாயனார் புராணமாகிய தடுத்தாட் கொண்ட புராணம் தான் முன்னே இருந்திருக்க வேண்டும். ஏன் சேக்கிழார் இவ்வாறு அமைக்க வேண்டும்? சேக்கிழார் அநபாயச் சோழன் அமைச்சராய் இருந்தவர். அமைச்சர் அரசனுக்கு அறிவூட்ட வேண்டும். அதை அநபாயச் சோழனுகக்கு சோழ அரச மரபில் தோன்றிய முன்னோன் ஆகிய மனுநீதிச் சோழனைக் கொண்டே உணர்த்த நினைத்தார். மனுநீதிகண்ட புராணத்தின் மூலம் அதனை உணர்த்தினார். அரசன் எவ்வழி அவ்வழி மக்கள். குடிபுறம் காத்தோம்பும் தொழிலைச் செய்பவன் அரசன். தன் மகன் தவறு செய்தான் என்பதற்காகச் சலுகை காட்டவில்லை. தருமம் தன் வழிச் செல்கை கடனென்று உணர்ந்து தானே தன் மகனுக்குத் தேர்ச்சக்கரத்தில் இட்டுக் கொலைத் தண்டனை வழங்கினான். இந்நீதி முறையைச் சிலம்பு காட்டுகிறது. வழக்குரை காதையில் தேராமன்னா செப்புவதுடையேன் எனப் பாண்டியன் தவறிழைத்தமையைக் கண்ணகி உணர்த்தும் போது ஆவின் கடைமணி ........... நெஞ்சுசுடத்தான் தன் அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன் " எனக் கூறித் தன் சோழநாட்டு மன்னர்களின் நீதி வழுவாமையைப் பெருமையை நிலைநாட்டுவான். இவ்வாறு பெரியபுராணம் தேராழி எனும் சொல்லைப் பயன்படுகிறது. சிலம்பு ஆழியின் மடித்தோன் எனச் சுட்டுகிறது. அன்றைக்கு அரசர்கள் தேரில் வந்து நாடு சுற்றினார். நாட்டை இயக்கும் சாரதிகளாகச் செயல்பட்டனர். நாடு எனும் தேரை மக்களாகிய வலிய தேர்ச்சக்கரங்களின் உதவியோடு அவர்கள் உழைப்பாகிய அச்சாணியைக் கொண்டு இயக்கினார். அரசர்கள் குடியிருந்த அரண்மனை கோ இல்-கோவில் என ஆயிற்று. நாட்டை இயக்கும் அரசர்கள் தமக்குக் கோவில் கண்டனர். எனவே, உலகை இயக்கும் இறைவன் உறைய அரசர்கள் கோவிலை உருவாக்கினர். அரசர்கள் உலா வரும் போது தேரில் வந்தனர். இன்று ஆளும் அமைச்சர்கள் காரில் உலா வருகின்றனர். அரசர்கள் தாம் தேரில் வருவது போல இறைவன் திருமேனிகளும் (உற்சவ மூர்த்திகள்) தேரில் உலா வர ஏற்பாடு செய்தனர். அதற்குத்

தேர் ஓடும் தெருக்களை உருவாக்கினர். அக்காலத்தில் தமிழ்நாடு மூன்று நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. (சேர, சோழ, பாண்டியநாடு) அந்நாடுகளுடன் உள்நாடுகள் பிரிக்கப்பட்டன. சான்றாகப் பாண்டிய நாட்டில் ஏழு கிளை பதினான்கு நாடுகள் உள்ளன. குன்னங்கோட்டை நாடு, பாகனேரி நாடு, மல்லாக்கோட்டை நாடு, தென்னிலை நாடு, உஞ்சனை நாடு, செம்பொன்மாரி நாடு முதலியன. ஒவ்வொரு நாடும் குறிப்பிட்ட கிராமங்களைத் தன்னகத்தே கொண்டது. ஒவ்வொரு நாட்டுக்கும் தலைவர் உண்டு. அவரை நாட்டு அய்யா என்பர். குன்னங்கோட்டை நாடு 22-1/2 கிராமங்களைக் கொண்டது. இது கல்லலை மையமாகக் கொண்டுள்ளது. இங்கே நாட்டுத் தேர் உண்டு. இந்த நாட்டுத் தேரை 22-1/2 கிராமத்து மக்களும் ஒருங்கே கூடித் தேரை வடம்பிடித்து இழுத்து நிலையில் நிறுத்துவர். இத்தேர்திருவிழா பத்து நாள்கள் நடைபெறும். இவ்வரை முறையோடு கூடிய விழாவைத் தமிழ் மன்னர்களே உருவாக்கியுள்ளனர். நம் அருள் நெறித் தந்தை அவர்களின் வழிகாட்டுதலோடு குன்றக்குடி ஆறுமுகவேலவன் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. மாசிமகத் தேர்த்திருவிழா கல்லலில் நடைபெறுகிறது. வைகாசித் தேர்திருவிழா காளையார்கோவிலில் நடைபெறுகிறது. இவ்வாறு பழம்பாண்டி நாட்டின் ஒரு பகுதியாகிய நம்-மாவட்டத்தில் பல இடங்களில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. இத்தேர்த்திருவிழாவின் நோக்கம் என்ன? பல சமுதாய மக்களை ஓரிடத்தில் கூடச்செய்து அவர்கள் ஒன்றுபட்ட சக்தியைக் கூட்டித் தேரை இழுக்கச் செய்தனர். மக்களுக்குள்ளே ஒரு கட்டுக் கோப்பையும் ஒழுங்குமுறையையும் உருவாக்க இத்தேர் உருவகப் பொருளாய் இருந்தது. சோழர் காலத்திலேயே திருவாரூர்த் தேர்த்திருவிழா நடைபெற்றுள்ளது. இப்பொழுதும் நடைபெற்று வருகிறது. மக்களின் உடல் வலிமை, மனவலிமை இரண்டும் வனம் பெற மானுடப் பண்பு வளர அரசர்கள் தேரை ஓர் உருவகப் பொருளாய் உருவாக்கினர். வள்ளுவர் இடன் அறிதல் எனும் அதிகாரத்தில் வலிய சக்கரங்களை உடைய தேராயினும் அது கடலில் ஓடாது கப்பல் நிலத்தில் ஓடாது என்பார். " கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும் நாவாயும் ஓடா ஒரு நிலத்து, " என்பதே அக்குறள், ஓர் அரசன் மாற்றரசனோடு போரிடுமுன் எண்ணிப்

பார்க்க வேண்டும். தம் மக்கள் மனநிலைச் சூழலை ஆராய வேண்டும். வலிய சக்கரங்களை உடைய தேர்தான். ஆனால் கடலில் ஓடாது. வலிய சக்கரங்கள் தாம் மக்கள் நாடு - தேர் இங்கே, அரசன் தேரை இயக்குபவன், எனவே தம் மக்களின் கருத்தையும் எண்ணிச் செயல்பட வேண்டும். உலகத்தையே நடுங்கவைத்த ஹிட்லர் ரஷ்யாவுக்குள் நுழையும் போதுதோல்வியுறவில்லையா ? ஏன் இடன் அறிதல் அறிவு, அவனிடத்தில் இல்லை, ஆகவே, ஓர் அரசன் தம்குடி மக்களை அலட்சியப்படுத்தக் கூடாது, இதையே திருவள்ளுவர் வினைத்திட்பம் எனும் அதிகாரததில் விளக்குகிறார். உருளும் பெரிய தேர்க்கு அச்சில் இருந்து தாங்கும் ஆணி போன்றவர்கள் உலகத்தில் உள்ளனர். அவர்களின் உருவின் சிறுமையைக் கண்டு எள்ளக் கூடாது என்பதே அக்கருத்து.

" உருவு கண் டெள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து " என்பதே அக்குறள்.

எனவே, அரசன் மக்களின் உருவம் கண்டு, எளிமை கண்டு, எள்ளல் கூடாது,

" நிறை உழைப்புத் தோள்கள் எல்லாம் எவரின் தோள்கள் " கடலின் மூழ்கிமுத்தெடுப் போர் மூச்சு எவரின் உயர்வைப் படம் பிடித்துக் காட்டினார். அன்றைய அரசர்கள் தம் நாட்டு மக்களை உயிரெனப் போற்றினர். கோவிலின் கொலையுண்டது குற்றம் என்று கருதியவுடன் உயிர் துறந்தோன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் , பொற்கைப் பாண்டியின் தம் கையையே வெட்டிக் கொண்டான். பாரி மன்னன் தன் தேரையே ஓரறிவுயிராகிய முல்லைக்கொடி படர ஈந்தான். சமயத்தின் மூலம் தமிழ் மக்கள் வாழ்வு செம்மைப்படுத்தப்பட்டது. அகநானூற்றில் தலைமகன் தேர் ஓட்டிச் செல்லும் போது வழியில் வண்டுகள் தேரின் மணி ஒலியால் துன்புறும் எனக்கருதி மணியின் நாக்கை இறுக்கிக்கட்டி விட்டுத் தேர் ஓட்டுவான் எனவரும் இன்றைய நிலை என்ன ? இன்று சாலையில் கார் ஓட்டும் போது ஒலித் துன்பம் ஒருபக்கம், மறுபக்கம் மனித உயிர்கள் மலிவாகி விட்டன. மனமே இன்றைய பாமர மக்கள் தெளிந்த அறிவு பெறுந்தல்

அறிவொளித்தேர் ஓட்டுகிறோம். எல்லோர்க்கும் கல்வி எனும் இலக்கை அடைய முனைகிறோம். அன்று அரசன் தேரிலே வரும்போது தெளிவோடு வந்தான். ஏன்எனில் அமைச்சர்கள் அன்று அரசர்க்குத் தெளிந்த தேர்ந்த சிந்தனை வழங்கினர். அன்று அரசர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. கிராமத்தலைவர்கள் குடவோலை முறை மூலம் தேர்ந்தெடுககப் பெற்றனர். அன்று மன்னர் ஆட்சிக் காலததில் மக்கள் பயமின்றி வாழ்ந்தனர். இன்று மக்களாட்சி தேர்தல் மூலம் ஆள்வோர் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். தேர் - தெளி என்பது பொருள். தேர்தல் தெளிதல் எனும் பொருள்தரும் சொல் இன்றைக்குத் தேர்தல் எல்லோராலும் சிந்திக்கப்பட வேண்டும். குடும்பத் தேர் ஓடக் கணவன், மனைவி இருவலிய சக்கரங்களும் சரியான பாதையில் செல்ல வேண்டும். ஒருமித்த சிந்தனை இருக்க வேண்டும். நாடும் தேர்தான் இன்று இயக்குபவர் ஆள்வோர் ஆவர். இயக்குபவரின் அடித்தளமாகத் தேரின் சக்கரங்களாக மக்கள் உள்ளனர் என்பதை நாட்டை இயக்கும் ஆள்வோர் மறந்துவிடல் கூடாது. ஆகத் தேர்தான் நாடு. அதை இயக்கும் சக்கரங்கள் மக்கள் நாட்டை இயக்கும் சாரதி மட்டுமே அரசு. இதையே வள்ளுவர் " உருவு கண்டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து " எனும் குறள் மூலம் விளக்குகிறார். ஓராற்றான் தேரும் தேரின் சக்கரங்களும் எனும் தலைப்பில் சிந்தித்துள்ளோம்.

நன்றி, வணக்கம்.

## தொல்காப்பியர் காட்டும் இனிய இல்லறம்

தமிழர்களாகிய நாம் உலகின் கண் பெருமைப்படத்தக்க சிறப்புகளை உடையவர்கள். தமிழ் இலக்கியம் உலகில் தோன்றிய தொன்மைமிக்க செவ்வியல் இலக்கியங்கட்கு நிகரானது. அவற்றினும் வேறுபட்ட வீறுபெற்ற பல தனித் தன்மைகளை உடையது. அகம், புறம் எனும் நம் இலக்கியப் பகுப்பும், தொல்காப்பியப் பொருளதிகாரம் என்ற இலக்கியப் படைப்புக்கான இலக்கியக் கொள்கைகளும், படைப்பு நெறிகளும் அடங்கிய இலக்கணமும் உலகம் காணாத தனி வளர்ச்சிகளாகும். நம் பண்பாடு உலகப் பொதுமனித நேயம் தழுவியது. ஆன்ம

நேயத்தை உட்கொண்டது. தொல்காப்பியம் தமிழின் தமிழரின் முதல் நூல், தமிழர்தம் மொழி, இலக்கியம், இலக்கணம் பற்றியன மட்டும் அல்லாமல் தமிழரின் வாழ்வும் நாகரிகமும் பற்றிய நூல், தமிழர் வீடுகள் தோறும் இருக்க வேண்டிய நூல் மேற்கண்டவாறு தொல்காப்பியம் பற்றி அறிஞர் தமிழண்ணல் கூறுவர், படித்தவர் மட்டுமின்றிப் பாமரரும் படித்தறிய வேண்டிய அற்புதச் செய்திகளின் தொகுப்பு : கருத்துக் கருவூலம் இந்நூல்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று இலக்கணங்களைக் கூறும் நூல், தொல்காப்பியம் எனும் சொல் நூலைக் குறிக்கும்போது ஒரு சொல் ஆகும். பொருளாக விரித்துரைக்கும்போது தொல் + காப்பு + இயம் எனப் பகுத்துக் கூறல் வேண்டும். அதாவது தமிழரின் காதல் வாழ்வே அகவாழ்வு உலகின் முதல் பொருள் நிலமும் பொழுதும் ஆகும். இவை இல்லை எனில் உலகு இல்லை. செயல் இல்லை. இதைத் தொல்காப்பியர் தம் அகத்திணை இயலில் அழகுறக் காட்டுகிறார். அகம் - இல்லறம் - திணை - ஒழுக்கம் - இயல் - இலக்கணம் இல்லற வாழ்வின் ஒழுகலாறுகளை விளக்கும் பகுதி என விரித்துரைக்கலாம். கி.மு., கி.பி. என்று கூறுவது காலம் பற்றிய சிந்தனையே ஆகும். உலக வரலாறெல்லாம் நிலத்தின் அடிப்படையைச் சார்ந்தவையே. உலகமே முப்பொருள்களில் தாம் அமைந்துள்ளது. அம் முப்பொருள்கள் நிலம் - பொழுது, முதல் பொருள் - TIME பொழுது நிலம் - இடம் - Space - சுற்றுப்புறச் சூழல் அறிவை உணர்த்தும் தெய்வம் - உணவு - மரங்கள் - விலங்குகள் - பறவைகள் - இசைக் கருவிகள - நரம்புக் கருவிகள் - தொழில்கள் அனைத்தும் சுற்றுப்புறச் சூழல் சார்ந்தவை. இக்கருப்பொருள்களை அறிவியலார் "Environ-mental Seiemce" என அழைக்கின்றனர். இவை சார்ந்து வாழ்வு நடத்தும் செயல்முறையே உரிப்பொருள். இதுவே ஆங்கிலத்தில் Action எனப்படுகிறது. இவற்றைப் பற்றித் தொல்காப்பியர் கி.மு. 700 லேயே " முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே நுவலுங்காலை முறை சிறந்தனவே " என்று தம் நூற்பாவில் விளக்குகிறார். மேலும் முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு என முதல் பொருள் பற்றி எளிதாய் விளக்குகிறார்.

காடுசார்ந்த இந்நிலங்கள் பற்றி திருமால் விரும்பும் முல்லை நிலம் எனும் பொருளில் ' மாயோன் மேய காடுறை உலகமும்' எனத் தொடங்கும் நூற்பாவில் முருகன் விரும்பும் மேகம் சூழ்ந்த மலைசார்ந்த குறிஞ்சிநிலமும் இந்திரன் விரும்பும் மிகுந்த நீரை

உடைய வயல்சார் மருதநிலமும் என்னும் பொருளில் " வேந்தன் மேய தீம்புனல், உலகமும் " என்றும் வருணன் விரும்பும் கடல்மணல் சார் நெய்தல் நிலமும் எனும் பொருளில் " வருணன் மேய பெருமணல் உலகமும் " என்றும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையில் சொல்லப்படும் எனும் பொருளில், " முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் " எனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே என்றும் தெளிவாகத் தொல்காப்பியர் விளக்கும் விதம் பாராட்டுக்குரியது.

முல்லைக்குரிய பெரும்பொழுது கார்காலம், சிறுபொழுது மாலை, குறிஞ்சிக்குரிய பெரும்பொழுது கூதிர் (குளிர்காலம்) சிறுபொழுது யாமம், முன்பனி என்பனவாகும்.

மருதம், நெய்தல் இருநிலங்களுக்கும் கார், கூதிர், முன்பனி, பின்பனி இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறு பெரும்பொழுதுகளும் உண்டு.

வைகறையும் விடியலும் மருதத்தின் சிறுபொழுதுகள் நெய்தல் நிலத்தின் சிறுபொழுது ஏறபாடு.

"வைகறை விடியல் மருதம் ஏற்பாடு நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும் " எனும் நூற்பா இதனை விளக்கும். பாலை நிலத்துக்குரிய பெரும்பொழுது பின்பனி இளவேனில், முதுவேனில் எனப்படும். சிறுபொழுது நண்பகல் - நடுப்பகல், தனக்கெனத் தனிநிலம் பாலைக்கில்லை. முல்லையும், குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து பாலை என்பதோர் படிவங் கொள்ளும்" எனச் சிலம்பு செப்பும். தொல்காப்பியர் பாலையை "நடுவுநிலைத்திணையே நண்பகல் வேனில்" என்பார்.

காடும் காடுசார்ந்த இடமாகிய முல்லையும், மலையும் மலைசார்ந்த இடமாகிய குறிஞ்சியும் ஒன்றையொன்று சார்ந்தே உள்ளன. நம் தமிழகத்தில் கொடைக்கானல், உதகமண்டலம் போன்றவை மலைநிலமாகவும் காடுசார்ந்த முல்லை நிலமாகவும் உள்ளன. வயலும் வயல்சார்ந்த தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டப் பகுதிகள் மருதநிலத்திற்குச் சான்று. மலைஞாலம் எனப்படும் மலையாள மாநிலமாகிய கேரளம் மலைநிலமாகக் காட்சியளிக்கிறது. கடல்சார்ந்த நிலம் நெய்தல் தற்போது கன்னியாகுமரி, இராமேசுவரம், தூத்துக்குடி, சென்னை கடற்கரை இவை நெய்தல் நிலங்களாகும். அங்கே மீனவர் பரதவர் தொழில் மீன்பிடி தொழிலாக உள்ளது. தொல்காப்பியர் நிலம் பொழுது

இரண்டின் அடிப்படையில் இத்தொழில்கள் சார் மக்கள் இல்வாழ்வை அற்புதமாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார் என்பது வெள்ளிடைமலை. எந்நிலம் மழையின்றி வறண்டு போகுமோ அது பாலைநிலம். நம் நாட்டில் இராஜஸ்தான் பாலைநிலத்திற்குச் சான்று. இவ்வாறு இயற்கையோடு ஒட்டிய இல்வாழ்வியலைத் தொல்காப்பியர் மிகப் பழங்காலத்திலேயே நிலவியல் அடிப்படையில் வகுத்துக் காட்டியுள்ளமை வியப்பிற்குரியது.

இவ்வாழ்வியலைத் தொல்காப்பியர் அகத்திணையியல், களவியல் - கற்பியல் - பொருளியல் ஆகிய நான்கு இயல்களில் அற்புதமாக வடித்துள்ளார். முல்லை இருத்தல் - இருத்தல் நிமித்தம் குறிஞ்சி புணர்தல் புணர்தல் நிமித்தம் மருதம் - ஊடல் - ஊடல் நிமித்தம். நெய்தல் - இரங்கல் இரங்கல் நிமித்தம். குறிஞ்சிநிலச் சூழல் தலைவன் தலைவி சேர்ந்து வாழ்தலையும் (புணர்தல்), இயற்கை இருப்பிடம் - மனிதன் வாழும் சுற்றுச் சூழல் உழைத்துக் களைத்து வரும் தலைவனிடம் ஊடல் கொண்டு பின் கூடல் நிகழ் தன்மையையும் கூறுகிறது. உணவில் உப்பு அமைந்தாற்போன்றது ஊடல் என்பான் வள்ளுவன். தலைவனைப் பிரிந்து தலைவி பிரிவாற்றாமல் இருப்பது இரங்கல், இன்று கடலில் மீன்பிடிக்கச் சென்ற கணவருக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருந்து உள்ளம் நெகிழ்ந்து பிரிவுத்துயரில் மூழ்குவதை இரங்கல் பொருளாகக் கண்கூடாகக் காண்கிறோம். பொருள்தேடப் பிரிந்து செல்லும் கணவருக்குப் பிரிந்து வருந்தி வாழ்தலே பிரிதல், பிரிதல் நிமித்தப் பொருளாகும். இதற்குப் பாலைநிலம் - இடம் ஏன் எனில் கணவன் பிரிவு மனைவியின் மனத்தை வறண்ட பாலை போல ஆக்கிவிடுகிறது. இச்சிந்தனை பூக்களை அன்பால் இணைந்த ஒருவனும் ஒருத்தியும் நடத்தும் இல்வாழ்வில் இடம்பெறுமாறு சிந்தியுள்ளார் தொல்காப்பியர்.

"புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண், பெண் காதலே, அக்காதல் இலக்கியங்களின் வற்றா ஊற்றிடங்களில் ஒன்று" என ஆங்கிலப் பேராசான் ஆக்ஸ்போர்டு கூறுவார். சங்கப் புலவர் தாம் மெய்யாகக் கண்ட இவ்வுலக மனப்பட்டவர் ஆகலின் உலகம் நீடுவாழ உயிர்க்கொடை செய்யும் காமம் அன்னவர் (புலவர்)நெஞ்சினைக் கொள்ளை கொண்டதும் தமிழ்ப்பாடலுக்குத் வியப்பாமோ என்பார். வ.சுப. மாணிக்கனார். கார் - ஆவணி புரட்டாசி, கூதிர்காலம் - ஐப்பசி கார்த்திகை - முன்பனிக்காலம் - மார்கழி - தை, பின்பனிக்காலம - மாசி, பங்குனி, இளவேனில் காலம்

- சித்திரை, வைகாசி, முதுவேனில் காலம் - ஆனி, ஆடி ஆகிய மாதங்கள் மேற்கூறிய பெரும்பொழுதுக்குரிய மாதங்களைக் கொண்டே இல்லற வாழ்வியல் நிலம் பொழுதை அடிப்படையாகக் கொண்டமைந்திருக்கும் இயல்பை உணரலாம்.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற இம்முறை வைப்புக்குரிய காரணத்தை நச்சினார்க்கினியர் ஆய்வு செய்வது சிந்தனைக்குரியது. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற முறை என்னையெனின் இவ்வொழுக்கம் எப்படி இல்லறம் பற்றிய ஒழுக்கம் ஆகலின், கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்த மகளிரது இயற்கை முல்லை ஆகலின் அது முற்கூறப்பட்டது. எனவே, முல்லை எனும் சொல்லுக்குப் பொருள் இருத்தல் ஆயிற்று புணர்தல் இன்றி இல்லறம் நிகழாமையின் புணர்தல் பொருட்டாகிய குறிஞ்சியை அடுத்தும் அதன்பின் மருதத்தையும் வைத்தார் பரத்தையிற் பிரிவு போலப் பிரிவொப்புமை நோக்கி நெய்தல் ஒழுக்கமாம் இரங்கலை ஈற்றின் கண் வைத்தார், இவை நச்சினார்க்கினியர் கூற்று.

கைக்கிளை என்பது ஒருதலை வேட்கை பெருந்திணை என்பது ஒவ்வாக்கூட்டம் என விளக்குவார் இளம்பூரணர், பெருந்திணை காதல் உணர்வு எல்லைகடத்தலை உணர்த்தும். சிறுமை பற்றிய உணர்வே கைக்கிளையை உணர்த்தும் என்பர்.

அன்பின் ஐந்திணை, அன்பினால் இணையும் ஐவகை ஒழுக்கம், ஒத்த அன்பும், ஒத்த குலனும், ஒத்த வடிவும், ஒத்த குணமும், ஒத்த செல்வம், ஒத்த இளமை இவற்றால் அமைவதே அன்பின் ஐந்திணை ஒழுக்கம் ஆகும். இருவரும் ஒருவருக்கொருவர் உள்ளத்திலே நினைந்து பிறரிடம் சொல்லாது தமக்குள்தாமே மகிழும் இன்பநிறைவே அகவாழ்வு.

"புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை தேருங்காலைத் திணைக்குரியப் பொருளே" என்பர் தொல்காப்பியர். ஆனால் அவர் எந்தெந்த நிலத்திற்கு எந்த எந்த ஒழுக்கம் என்பதை வரையறை செய்யவில்லை. பின்வந்த உரையாசிரியர் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்றோரே தம் உளப்பாங்கிற்கேற்ப உரைகண்டனர்.

நிலம் வரையறுக்கப்பட்டதே தவிர பொழுதும் ஒழுக்கமும் மாறுபடலாம் என்பதை தொல்காப்பியரே "திணை மயக்குறுதலும கடி நிலை இலவே" என உரிப்பொருள் ஒழுககம மாறுபடலாம்

என்பதையும் "நிலனொருங் குமயங்குதல் இல்லென மொழி.ı" என நிலப்பாகுபாடு மாறாது என்பதையும் விளக்குவர்.

எனவே எந்நிலத்தும் எவ்வொழுக்கமும் நிகழலாம் என்பது தெளிவாகிறது. மேற்கண்ட பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இலக்கண இலக்கியமாம் தொல்காப்பியம் கூறும் உயிரியல், உளவியல் சார்ந்த அற்புத வாழ்வியல் காட்டும் தொல்காப்பியம் படிக்குந்தொறும் இன்பம் தரும் என்பது ஒருதலை.

## நற்றிணை காட்டும் நயத்தகு காதல்

சங்க இலக்கியம் உலக இலக்கியங்களின் இமயம். தமிழ்ப் பண்பாட்டின் சுரங்கம். சங்க இலக்கியப் பாடல்கள், அற வாழ்வின் அடிப்படை. அகவாழ்வுதானே. அந்த அக வாழ்வின் தொடக்கம் காதல். காதல்உ லகின்க வின்மிகு அழகை நற்றிணை காட்டும் பாங்கு நமக்குப் படித்துச் சுவைக்கும் பலாச்சுளை இனிப்பு. அப்பலாச்சுளை இனிப்பைப் படித்து இன்புறுவோம்.

சங்கத் தொகை நூல்களுள் நற்றிணை முதல் இடம் பெறுகிறது. "நற்றிணை நல்ல குறுந்தொகை " எனத் தொடங்கும் பாடல் அதை நினைவூட்டும். நல் + திணை = நற்றிணை என்றாகும். நல்ல ஒழுகலாறுகளைக் கூறும் நூல் என்பது இதன் பொருள், திணை எனும் சொல்லுக்குக் கொண்ட கொள்கையில் திண்மையாக நிற்பது என்பது பொருள். திண் + ஐ = திணை. திண்மையுடையது எனப்பொருள் தரும். இந்நூல் தலைவன் ( காதலன்) தலைவி (காதலி ) இருவரின் அக ஒழுக்கம் பற்றி அழகுறக் கூறுகிறது.

நற்றிணைப் பாடல்களைத் தொகுக்கச் செய்தவன் பன்னாடுதந்த பாண்டியன்மாறன் வழுதி 192 புலவர்கள் இந்நூலைப் பாடியுள்ளனர். பாடலில் உள்ள சொற்றொடர்களால் பெயர் பெற்றவர் எழுவர்.

வண்ணப் புறக்கந்தரத்தனார், மலையனார், தனிமகனார், விழிக்கண்பேதைப் பெருங்கண்ணனார், தும்பீசர் கீரனார், தேய்புரி பழங்கற்றினார், மடல்பாடிய மாதங்கீதனார் ஆகியோர்.

திணை அடிப்படையில் குறிஞ்சி - 130, பாலை - 107, நெய்தல் - 101, மருதப்பாடல்கள் - 33, முல்லைப் பாடல்கள் - 28, இயற்கை அழகும் தூய காற்றும், கொட்டும் அருவியும் சேர்ந்த

மலையும் மலைசார்ந்த இடமுமே தலைவன், தலைவி அன்பால் இணைந்தும் பிணைந்தும் வாழ்தல் ஆகிய புணர்தல், ஒழுக்கம், முல்லையும் ( காடும்), குறிஞ்சியும் ( மலையும் ) தம் நிலையில்; மாறுபட்டு வறட்சியடையும் போது அது பாலை நிலம் ஆகிது. இங்கே பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகிய ஒழுக்கம் நிகழ்கிறது. சற்றேறக்குறைய தமிழர்கள் ஐம்பது ஆண்டுகட்கு முன்வரை மனைவியரைப் பிரிந்து பர்மா, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகட்குச் சென்று பொருள் ஈட்டி வந்தனர். இதுவே பொருள்வயின் பிரிவாகிய பிரிதல் ஒழுக்கம் ஆகும். மனைவியுடன் கடல்கடந்து செல்லும் பழக்கம் பண்டு இல்லை. இதைத் தொல்காப்பியர் "முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை" என்பார். ஆனால் இன்றோ வெளிநாடுகட்குக் குடும்பத்தோடு செல்லும் வழக்கமும் அங்கு வாழும் வழக்கமும் வந்துவிட்டது. காடும் காடுசார்ந்த இடங்களிலும் வீடுகள் அமைத்து இயற்கை சூழலோடு வசித்தனர். இருத்தலும் இருத்தல் நிமித்தமும் ஆகிய ஒழுக்கமும், இதனால்தான் முல்லை நிலத்திற்கு உரியதாயிற்றுபோலும். மருதம் - வயல்சார்ந்த பகுதி, தலைவன் உழவுக்குச் சென்று மாலை திரும்புவான். இரவிலே தலைவனும் தலைவியும் இன்ப நுகர்ச்சியில் இணைந்து மகிழத்தலைப்படும் வள்ளுவன் கூறும் "உப்பமைந்தற்றால் புலவி" எனும் குறள் 'வரிக்கேற்பத் தலைவி சிறிது ஊடுவதும் பின்பு கூடுவதும் உணர்த்தும் காட்சியே மருதநிலை ஒழுக்கமாகிய ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆயிற்று. கணவனை வெளிநாட்டுக்குக் கடலில் கப்பலேற்றிவிட்டுப் பிரிவை எண்ணி வருந்தும் நிலையே இரங்கலும் இரங்கல் நிமித்தமும் என்ற கடல் சார்ந்த நெய்தல் நில ஒழுக்கம் ஆயிற்று பெரும்பாலும் கடற்கரையை ஒட்டி வாழும் மீனவக் குடும்பங்களின் இன்றைய அவல நிலையே நெய்தல் நிலப் பண்பாடு என்பது புரியும்.

மருத நில ஊடல் இன்று பெரிதாகி மணவிலக்கு வழக்குகள் என மாறி நீதிமன்றங்களில் கோல் ஒச்சுகின்றன.

பண்டைத்தமிழ் மக்களின் வாழ்க்கை முறை இயற்கையோடு ஒட்டியதாயிருந்தமையால் அவர்கள் பொருள் ஈட்டிவரப் பிரிந்தனர். மீண்டும் மனைவி மக்களுடன் இணைந்து வாழ்ந்தனர். இத்தகைய அற்புத நயத்தகு காதல் வாழ்வை நற்றிணைப் பாடல்கள் பரக்கக் காட்டுகின்றன. அத்தகு நயம்படு நற்றிணைப் பாடல்களில் ஓரிரண்டு ஈண்டு சுவைப்போம்.

நற்றிணையில் முதல்பாட்டு, கபிலர் பாட்டு, குறிஞ்சித்திணை துறை, தலைவன் பிரியப்போகிறான் என்பதை உணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது. தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும் முயற்சிகளில் ஈடுபடுவதைத் தோழி உணர்ந்தாள். அதைத் தலைவிக்கு உணர்த்தினாள். அது கேட்ட தலைவியோ தன் தலைவன் மேல் ஆராக் காதலும் நம்பிக்கையும் உடையவளாய்த் தோழியைத் தேற்றும் பாங்கைப் பார்க்கலாம்.

"தோழீ! நம் தலைவர் என்றுமே பிறழாத சொல் வாய்மையினை உடையவர். பழகும் தோறும் பழகுந்தோறும் இடைவிடாது நீள இனிமைதரும் பண்பினர். என் தோள்களைப் பிரியும் குறைபாட்டுச் செயலை என்றும் செய்ய அறியா இயல்புடையவர், வண்டானது தாமரைப் பூவினிது தண்மையான தாதினை ஊதிக் கொண்டு சென்று மேலான சந்தன மரத்திலே தொகுத்து வைத்துள்ள இனிய தேன் இறாலைப் போன்ற உயர்ந்த பண்பினர். அவர் நட்பு நமக்கு என்றும் மேன்மைதரும். நீரின்றி இயங்கா உலகம் போல நான் இன்றி இயங்காத பிரியாக் காதலை உடையவர். அவர் பிரிவால் என் நெற்றியில் உண்டாகும் பசலையை அவர் விரும்பாதவர். சிறுமையறியாதவர். அவர் என்னைப் பிரியார் எனத் தோழிக்கு உணர்த்துகிறாள் தலைவி. இச்செய்தி மூலம் தலைவன் தன்பால் கொண்ட ஆராக் காதலை உணர்த்துகிறாள். தாமரைத்தாது தலைவியையும் சந்தனமரம் தலைவனையும் அற்புதமாய்ச் சுட்டிக்காட்டும் உவமைகள், இக்கருத்தை உணர்த்தும் இனிய பாடல் இதோ. "

**" நின்ற சொல்லர் ; நீடுதோ றினியர்**
**என்றும் என்தோள் பிரிபு அறியலரே**
**தாமரைத் தண்தா (து) ஊதி, மீமி சைச்**
**சந்திரன் தொடுத்த தீந்தேன் போலத்**
**தம் மின் றமையா நந்நயந் தருளி**
**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமையுறுபவோ செய்பறிய லரே "**

- என்ன அருமையும் அழகும் பொதிந்த பாட்டு.

"சிறுமையுறுபவோ செய்பறியலரே" எனும் பாடல் வரியைச் சுவைத்துத்தான் கம்பநாடன் வாலியைச் "சிறியன சிந்தியாதான் " என் எடுத்துக்காட்டினான் போலும்.

இல்வாழ்க்கை என்பது உணர்ச்சிகளும் அறிவுக்கும் உள்ள போராட்டமே ஆகும். போராட்டம் இன்றேல் வாழ்க்கை இல்லை.

இதற்கு அற்புத உணர்ச்சிக்கலவையுள்ள பாடல் கருத்தைப் பார்ப்போம்.

ஒரு தலைவன் தலைவி ஒருத்தியைக் காதலிக்கிறான். பொருள் ஈட்டிய பின் காதலியைக் கடிமணம் புரிய எண்ணுகிறான். அவன் குறிக்கோளுக்கிணங்கப் பாதிப் பொருள் ஈட்டிவிட்டான். தலைவியின் நினைவு அவனை வாட்டுகிறது. தலைவியின்பால் உள்ள காதல் அவன் நெஞ்சும் அவனிடம் தலைவியைப் பார்க்கச் செல் எனக் கூறுகிறது. இஃது உணர்ச்சியின் கூற்று. எடுத்த செயலை நிறைவேற்றாமல் திரும்புவது சரியன்று என அவன் அறிவு சுட்டுகிறது. அன்புணர்ச்சிக்கும், அறிவுக்கும் இடையே அவன் உடம்பு துன்புறுகிது. இதனை மிக அழகாகச் சித்திரிக்கிறார் புலவர். அறிவு என்பது ஆற்றல் உள்ள ஒரு யானை, உணர்ச்சி என்பது மற்றோர் ஆற்றல் உள்ள யானை. இவ்விரு யானைகட்கும் இடையே ஒரு பழங்கயிறு உள்ளது. இப்பழங்கயிறும் தேய்ந்த புரி கழன்ற பழங்கயிறு. அக்கயிற்றை இரு யானைகளும் பிடித்து இழுததால் கயிறு என்ன ஆகும்? கயிறுதான் அவன் உடல். இரு பக்கம் இழுக்கும் யானைகளாக அறிவும் நெஞ்சும் உள்ளன. இது மனித வாழ்வில் எங்கும், என்றும் நடைபெறுகின்ற செய்தி. இதை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். அவன் தன் பெயரைக் குறிக்கவில்லை. பாடலை இயற்றிய புலவர் பெயரும் தெரியவில்லை. நற்றிணை தொகுத்த சான்றோர் இப்பாட்டில் வரும் ஒரு சொல் தொடரைக் கொண்டு அப்புலவர்க்குத் தேய்புரி பழங்கயிற்றினார் எனப் பெயர் சூட்டினார். அச்சுவையான பாடல் இதோ.

**புறந்தாழ்வு இருண்ட கூந்தல் போதின்**
**நிறம் பெறும் ஈர் இதழ்ப் பொலிந்த உன்கண்**
**உள்ளம் பிணிக்கொண்டோள் வயின் நெஞ்சம்**
**செல்லல் தீர்கம் செல்வாம் என்னும்**
**செய்வினை முடியாது எவ்வம் செய்தல்**
**எய்யாமையோடு இழிவுதலைத் தரும் என**
**உறுதி தூக்கத்தூக்கி, அறிவே**
**சிறிது நனி வரையல் என்னும், ஆயிடை**
**ஒளி று ஏந்து மருப்பின் களிறுமாறு பற்றிய**
**தேய்புரி பழங்கயிறு போல**
**வீவது கொல் என் வருந்திய உடம்பே.**

கூற்று : பொருள் முடியா நின்ற தலைமக்ன, ஆற்றானாகித்தன் நெஞ்சுக்குச் சொல்லியது. நிலம் ; பாலை, பொருள், பிரிவு, புலவர் ; தேய்புரி பழங்காயிற்றினார். மேற்கண்ட சுவை மிக்க பாடல்களைப் போல எத்தனையோ பாடல்கள் இந்நூலுள் நயத்தகு காதல்சுவை காட்டும் வண்ணம் பொதிந்து கிடக்கின்றன. நற்றிணை படிப்போம். நல்லின்பம் பெறுவோம்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்

# " சிந்தனை நந்தவனம் "

*சிந்தனை உரை. அதிகாரம் 53 சுற்றந்தழால்*

*தலைப்பு : செல்வம் பெற்றதால் பெற்ற பயன்*

*நாள் : 21.01.2012*

*"திருக்குறள், உலகநீதி நூல்கள் அனைத்தினும் சிறப்புடையது. மக்களின் தினச வாழ்க்கைக்கு வழிகாட்டியாக, சென்ற பல ஆண்டுகளாக இருந்துவருகிறது. இவ்வாறு தி.சு. அவிநாசிலிங்கம் தம் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். ஆண்டு 31.03.1963 வாகீச கலாநிதி கி. வா.ஜ. பதிப்புரையின் முதற்பத்தியின் ஒரு கூறு இங்கே சிந்திக்கத்தக்கது." பல ஆண்டுகட:கு முன் தி.சு. அவிநாசிலிங்கம் அவர்கள் திருக்குறள் சம்பந்தமாகப் பெரிய வேலை ஏதாவது செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. என்ன செய்யலாம் என்று கேட்டார், மகாமகோ பாத்தியாய டாக்டர் ஐயர் அவர்கள் திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தார்கள். திருக்குறளுக்குக் கிடைக்கும் பழைய உரைகளை எல்லாம் தொகுத்து ஒவ்வொரு குறளின் பின்னும் அமைத்து ... தொல்காப்பியம் முதல் இக்கால இலக்கியம் வரையில் குறளின் சொற்பொற்களை எடுத்தாண்ட ஒப்புமைப் பகுதிகளை இணைத்து வெளியிட வேண்டும் என அவர்கள் எண்ணினார்கள். அது நிறைவேறவில்லை. அதைச் செய்யலாம் என அவிநாசிலிங்கம் அவர்கள் பால் கி.வா. ஜ. தெரிவிக்கும் பாங்கு போற்றற்குரியது. கி.வா. ஜ. பற்றி முனைவர் ஔவை சு.நடராசன் கூறிய பாராட்டுரை எண்ணி மகிழத்தக்கது. வாகீச கலாநிதி தமிழ்க்கடல் கி. வா.ஜ. அவர்கள் நம் முன் நடமாடிய தமிழ்ப் பெருங்களஞ்சியமான டாக்டர். உ.வே. சாமி நாதையர் அவர்களின் சிறந்த மாணாக்கர்களில் முதல்வர் அய்யர் அவர்களின் சிந்தைக்கினிய சீலரும் சீடருமாய்த் திகழ்ந்தவர். இத்தகு சிறப்புடைய கி. வா.ஜ. தலைமையில் 1950 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் தலைமையில் திருக்குறள் பதிப்புப் பணியைத் தொடங்கினார்கள். இடையில் தருமபுரி ஆதீனப் புலவர் வித்துவான் ச. தண்பாணிதேசிகர் திருக்குறள் உரைவளம் பதிப்பை வெளியிட்டார். திருக்குறள் பதிப்புப் பணியை 1963 ல் கி.வா.ஜ. நிறைவு செய்தார்.*

இராமகிருஷ்ண மிஷின் வித்தியாலயம் இந்நூலை அழகான அச்சில் வெளியிட்டுள்ளது. ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் தலைவர் சுவாமி கமலாத்மானந்தர் திருவள்ளுவர் வீடு பேறு பற்றிப் பாடாமையால் எவ்வாறு உயர்ந்தார் என்பதை விளக்கியமை ஈண்டு சிந்திக்கத்தக்கது. " வள்ளுவர் வீடுபேறு பற்றி விளக்கமுற்பட்டால், அவர் எந்தச் சமயத்தைச் சார்ந்தவரோ அந்தச் சமயத்தைச் சேர்ந்த நூலாகவே திருக்குறள் மதிக்கப் பெற்றிருக்கும். திருமூலர் திருமந்திரம், பட்டினத்தார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், ஔவையார், அதிவீரராமபாண்டியன், போன்றவர்களின் வரிசையில் திருக்குறளைச் சேர்த்திருப்பார்கள். அவ்வாறு திருக்குறள் சேர்க்கப்பட்டிருந்தால், இப்போது போல அதைப் பொதுமை நூலாகத் தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுப் போற்றியிருக்காது " எனக் கூறியவர். திருக்குறள் ஓர் அறநூல். அறநூல் என்றே தமிழகத்திற்கு அறிமுகமாகியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். அருள்நெறித் தந்தை அடிகளார் திருக்குறள் மனிதனை முன்னிலைப்படுத்துகிறது. ஆதலால் திருக்குறள் புதுமை நிறைந்தது. பொதுமை தழுவியது, திருக்குறள் வாழ்க்கையில் பிறந்த வாழ்வியல் நூல், வாழ்க்கையோடிசைந்த அறநூல், திருக்குறள் சமயநூல். ஆனால் உலகப் பொதுச் சமயநூல், திருக்குறள் மானுடத்தின் வெற்றியைக் குறிக்கோளாக உடையது. திருவள்ளுவத்தின் வழி வையகம் இயங்கும்போது இன்பம் மலரும் துன்பம் நீங்கும்.

திருவள்ளுவமாலையில் ஔவை மொழிந்த வெண்பா திருக்குறளின் சிறப்பை,

" தேவர் குறளும் திருநான்மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்றுணர் "

இவ்வாறு புகழ்கின்றது. இதில் முதலில் நிற்பது குறள்.

" வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின்
வாய்மடுக்கும் தெள்ளமுதின் தீஞ்சுவையும்
ஒவ்வாதால் "
" சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து "

இவ்வாறு திருவள்ளுவமாலையில் வரும் பாடல் பகுதிகள் திருக்குறளின் சறப்பைத் தெள்ளிதின் விளக்குகின்றன. " சொல்லாத

தில்லை வள்ளுவன் வாய்விளைத் தவற்றுள் வெல்லாததில்லை ” என்பார் பாவேந்தர் பாரதிதாசன். வள்ளுவனை கொடை உலகுக்குக் கொடையாகக் கொடுத்ததாகப் பாரதி பகர்வார். டாக்டர் உ.வே.சா. இவ்வாறு பாராட்டுகிறார். இந்தப் பெரிய ஞானியினுடைய பரந்த மனப்பாங்கு அவ்வளவு சிறப்பானது. அவர் தமிழ்நாட்டில் பிறந்தவர். ஆனால் ஆனந்தம் என்றவற்றையின்றி வகுப்பு, சமயம் என்ற சார்புகள் இல்லை, திருக்குறளை வடமொழியில் அப்பாதீட்சிதர் “ நீதி குசும மாலா ” எனும் பெயரில் மொழி பெயர்த்தார். மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. லத்தீன் மொழியில் பெஸ்கிப் பாதிரியாரும் கிரௌலும் மொழி பெயர்த்துள்ளனர். ஜெர்மன் மொழியில் ஏ.எப். காம்மர்ஸ், ப்ரீட்ரிக் ரூகர்ட் டாக்டர் கிரௌல் ஆகியோர் மொழி பெயர்த்துள்ளனர். ஆங்கிலத்தில் ஜி.யு. போப் மொழி பெயர்ப்பு மிகப் பழமையானது. நிறைய ஆய்வு நூல்கள் திருக்குறள் பற்றி வந்த வண்ணம் உள்ளன.

“ தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்கெல்லை உரைகண்டார் இவர் என உரையாசிரியர் பெயர்களை ஒருபாடல் கூறுகிறது.” அறம் முப்பத்தெட்டுப் பொருள் எழுபதின் பத்திறம் இருபத்தைந்தால் தெளிய எனும் வரிகளால் அறம் 38 அதிகாரம், பொருள் 70 அதிகாரம், இன்பப் பால் 25 அதிகாரம் பால்கள் அறம், பொருள், இன்பம் என மூன்றாகும். ஒவ்வொரு பாலும் பல இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பரிமேலழகர் பகுத்த பகுப்புமுறை பாராட்டத்தக்கது. அறத்துப்பால் நான்கு இயல்கள் 1, பாயிரம் 4 அதிகாரங்கள், 2. இல்லறவியல் - 20 அதிகாரங்கள், 3. துறவறவியல் 13 அதிகாரங்கள், 4 ஊழ் - 1 அதிகாரம், பொருட்பால் பரிமேலழகரால் இவ்வாறு பகுக்கப்பட்டது. அரசியல் 25 அதிகாரங்கள், அங்கவியல் - 32 அதிகாரங்கள், ஒழிபியல் 13 அதிகாரங்கள், இங்கே பொருட்பால்தான் வாழ்வியல் வரலாற்றை வகுப்பது. தொல்காப்பியர் காட்டும் வாழ்வியல் நுட்பங்களைத் தொகுப்பது. மனித நேயத்தைப் போற்றுவது. இந்தப் பொருட்பாலில் அங்கவியலில் 53 ஆம் அதிகாரமாக வருவதுதான் சுற்றந்தழால் எனும் அதிகாரம். இதற்குப் பரிமேலழகர் இவ்வாறு விளக்கம் தருகிறார்.

"அஃதாவது அரசன் தன் கிளைஞரைத் தன்னில் நீங்காமல் அணைத்தல் வினைசெய்வாரைக் கூறி ஏனைச் சுற்றம் கூறுகின்றார். ஆகலின் இது தெரிந்து வினையாடலின்பின் வைக்கப்பட்டது". இங்கே அருள்நெறித்தந்தை தரும் விளக்கம் எக்காலத்தும் பொருந்தும். அவ்விளக்கம் ஈண்டு வருமாறு.

"பழகிய சுற்றத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளுதல் பிறப்பின் வகையாலும், பழகிய வகையாலும் முறையே அமைவது. உறவுச் சுற்றம் நட்புச் சுற்றம் முதலான சுற்றம் சூழ வாழல் வாழ்க்கையின் வளர்ச்சிக்குத் துணை. சுற்றம் ஆக்கம் தரும், பாதுகாப்புத்தரும். சுற்றம் சூழ வாழ்தல் ஒரு கலை, சுற்றம் பேணி வாழ்தலுக்கு இடையறா அன்பு, நினைவில் வைத்துப் பாராட்டுதல், அன்பு காட்டுதல், ஒத்துப்போதல், குற்றம் பாராட்டாதிருத்தல் ஆகியன தேவை. நாடாள்வோர்க்கும் சரி, தனி ஒருவராய் வெற்றி பொருந்திய வாழ்க்கை நடத்த விரும்புவோருக்கும் சரி சுற்றம் தேவை. செய்யவேண்டிய வினைத் தேர்தலுக்கும் சுற்றம் துணைசெய்யும் என்பதால் தெரிந்து வினையாடலுக்குப் பின்னும் வாழ்க்கையில் மறதிகள் வாராமல் நினைவூட்டி இயக்கும் பணியைச் சுற்றம் செய்து வாழ்க்கைக்கு வலிவூட்டும் என்பதால் பொச்சாவமைக்கு முன்னும் சுற்றம் தழால் எடுத்துக் கூறப்பட்டது". இதனைக் கீழ்கண்டவாறு சிந்திப்போம்.

சுற்று + அம் - சுற்றம், சுற்று + சூழ்ந்து அம் - அழகு, சுற்றம் சூழ வாழ்வது அழகுதரக்கூடியது. பார்த்து மகிழத்தக்கது. மனிதனுக்குத் தன்னால் கிடைக்கும் மதிப்பினைவிடச் சூழ்ந்திருப்பவர்களால் கிடைக்கும் மதிப்பே பெரும்பான்மையாக நிலைக்கிறது. அன்பு மனிதநேயத்தில் தொடங்குகிறது. இதனைத் தன்னிலிருந்து தொடங்கி, தன்னைச் சார்ந்தோரை இனத்தோரை, நாட்டோரை, சான்றோரை, " இன்னும் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க " என்ற இராமலிங்க அடிகளாரின் உயிர் இரக்கக் கோட்பாடும் சுற்றம் தழுவி நிற்பதே ஆகும். "ஊருடன் ஒத்து வாழ்" " ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" " ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் " என்று சமூகத்துடன் ஒத்துப் போகும் செயலை வலியுறுத்துகிறார் வள்ளுவர். ஒப்புரவறிதல் அதிகாரத்தில் வரும் இந்த 213 வது குறட்பா சுற்றந்தழால் அதிகாரத்துடன் மிகத் தொடர்புடையது. சுற்றந்தழாலின் முதற்குறளே சிந்திக்கத்தக்கது.

" பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள"

பரிமேலழகர், ஒருவன் செல்வம் தொலைந்து வறியவனாய வழியும் விடாது தம்மோடு அவனது பழைய நட்பைத் தொடர்பைப் பாராட்டுதல் சுற்றத்தார் மாட்டே உள.

மணக்குடவர், இஃது இல்லாக் காலத்தினும் விடார் எனபது கவிராஜபண்டிதர், அவன் தரித்திரன் ஆனபோதும் உபகாரம் செய்பவர் சுற்றத்தார். அடிகள் " ஒருவர் தம்மிடத்துள்ள பற்றை நீக்கிக் கொண்டாராயினும் அவர்மாட்டுத் தாம் கொண்டொழுகிய பழைய அன்பை மறவாது பாராட்டிப் பேணுதல் நல்லவகையில் அமைந்த சுற்றத்தின் கண் உண்டு. குசேலர் கண்ணன் நட்பைக் கூறலாம். காலோடு போழ்தில் கழி கிளைஞர் வானத்து மேலாடு மீனிற்பலராவர் - ஏலா இடர் ஒருவர் உற்றக்கால் ஈர்ங்குன்றநாட தொடர்புடையேம் என்பார் சிலர். இது நாலடி நவிலும் அங்கதச் சான்று. "

நன்றாக இருக்கும் போது வானில் உறையும் விண்மீன்களின் எண்ணிக்கை போலப் பலர் கூடி வாழ்வர். இயலாத துன்பம் ஒருவர் அடையும்போது " ம்ம் இவருடன் முன்பு தொடர்பு உடையராய் இருந்தோம். இப்போது இல்லை " என்று கேட்டார்க்கு விடை கூறும் பாங்கால் சுற்றம் தழுவாதவர் கீழ்மை கூறப்படுகிறது.

பரிமேலழகர் ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொல் சொல்லுதலையும் வல்லனாயின் தம்மில் தொடர்ந்த பலவகைச் சுற்றத்தாலே சூழப்படும் என்றார்.

மணக்குடவர், தனக்கு முன்னாயும், பின்னாயும் வருகின்ற சுற்றத்தாராலே சூழப்படுவான் என்கிறார். அடிகள் அடுக்கிய சுற்றத்திற்குத் தரும் விளக்கம் சுற்றத்தார் அவர் தம் சுற்றத்தார் என விரிவடையும் அக்குறள்

கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சூழப் படும் ( 525 )

என்பதாம். எப்படிச் சுற்றம் அமைதல் வேண்டும் ? விளக்கம் தருகிறார் வள்ளுவர்.

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும் ( 522 ).

பரிமேலழகர், அன்பு அறாதசுற்றம் ஒருவற்கு எய்து மாயின் அஃது அவற்குக் கிளைத்தல் ஆகாத செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும். அரும்பு + அறா எனப் பிரித்தால் அழகு, அரும்புதல்

நீங்காத எனப் பொருள் கொள்ளல் சிறப்பு. அரும்பு - அருப்பு ஆனது வலித்தல் விகாரம், அன்புநீங்காதவரே சுற்றமாயிருப்பர் என்பதை இதனால் அறியலாம்.

பலரோடு அளவிளாவிச் சுற்றத்தார் வலிமையையும் நட்பையும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதையும் அளவிளாவிப் பிறருடன் கலந்து பேசாதவன் தனிமைப்படுத்தப் படுவான் என்பதை ஒரு குறளில் அழகாகக் கூறுகின்றார். அக்குறள் இதோ,

**அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்**
**கோடின்றி நீர்நிறைந் தற்று (523)**

பரிமேலழகர் : கோடின்றி நீர்நிறைந் தற்று அச்சுற்றத்தோடு நெஞ்சு கலத்தில் இல்லாதவன் வாழ்க்கை குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தது போன்றதாம்.

சிறப்புக் குறிப்பு : சுற்றம் இல்லாதவன் செல்வங்கள் தாங்குவார் இன்மையின் புறத்துப் போம் என்பதாம்.

பரிதியார் : அளவுக்கு அளவாகச் செலவழியாதவன் செல்வம் கட்டுக்கரையும் கொடியும் காவலும் இல்லாத குளம் நீர் நிறைந்ததற்கு ஒக்கும். இதனால் தான் ஒப்பரவு அதிகாரத்தில்

**" ' ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு '**

என்ற குறள்மூலம் உலக மக்களால் விரும்பப்படும் பேரறிவாளன் செல்வம் ஊர்மக்களால் உண்ணப்படும் நீர்நிறைந்த ஊருணி போன்றது என வள்ளுவர் உரைத்தார் போலும் செல்வம் பெற்றதால் பெற்ற பயன் வள்ளல் அழகப்பர் பெற்ற பயன் என்றே கூறலாம். வள்ளல் அழகப்பர் தாம் பெற்ற செல்வத்தை இல்லாதார், எளியவர் என எல்லாரும் கல்வி கற்றுப் பின்னரும் கலை அறிவியல் , பொறியியல் பார்முழுதும் புகழோடு விளங்க வேண்டும் என எண்ணியே கல்வி நிறுவனங்களை உருவாக்கினார். அவர் நகரத்தார் பெருமக்களுக்கு மட்டும் உறவினர் அல்லர் சிவகங்கை மாவட்டத்தில் கிராமங்களிலிருந்து வந்து கல்விகற்று உயர்ந்த அத்துணை மக்களுக்கும் அவர் உறவினர் ஆவார். பெரிய புராணத்தில் அப்பர் அடிகளும் அப்பூதி அடிகளும் உறவினர் ஆயினர். அப்பரும் ஆளுடை அண்ணலும் ( ஞான சம்பந்தப் பெருமான் ) தந்தை மகன் போன்ற உறவு பூண்டு மகிழ்ந்தனர். கம்பராமாயணத்தில் இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன் ஆகிய சகோதரர்களுடன் குகன், சுக்ரீவன், வீடணனன் யாவரும்

சகோதர உறவு பெற்றனர். இப்பெற்றியே சுற்றம் சூழ வாழும் சுற்றம் தழால் ஆகும். " தன் பொருட்டு வாழ்வான் ஓர் ஏழை மக்கள் தம்பொருட்டு வாழ்வான் ஓர் செல்வன் " என்ற பாவேந்தர் பாரதிதாசன் கூற்று இங்கு எண்ணத்தக்கது. இதை மிக அற்புதமாக எடுத்தாள்கிறார் வள்ளுவர்.

**பெருங்கொடை யான்பேணான் வெகுளி அவனின்**
**மருங்குடையார் மாநிலத் தில்இல்.**

பரிமேலழகர் இதற்குத் தரும் உரை மிகத் தகவுடையது. ஒருவன் மிக்க கொடையை உடையனுமாய் வெகுளியை விரும்பானும் ஆயின் (விரும்பாதவனாய் இருந்தால்) அவன் போலக் கிளை உடையார் இவ்வுலகத்து இல்லை. மிக்க கொடை, ஒன்றானும் வறுமை எய்தாமல் கொடுத்தல் இதற்குச் சான்று வள்ளல் அழகப்பர் ஆவார். இத்தகையோர் செல்வம் பெற்றதால் பெற்ற பயன் சுற்றத்தார் சுற்றப்பட்ட ஒழுகல் ஆம். குறள்.

**சுற்றத்தார் சுற்றப்பட ஒழுகல் செல்வம்தான்**
**பெற்றத்தால் பெற்ற பயன்.**

பரிமேலழகர் உரை : செல்வம் பெற்ற அதனால் ஒருவன் பெற்ற பயனாவது தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகை அதனைத் தழீஇ ஒழுகல் என்பதாம். ஈட்டிய செல்வத்தைச் சுற்றத்தார்க்கு ஈந்து அனைத்து மக்களையும் ஈர்த்து அனைத்து வாழ்வதே செல்வம் பெற்ற வாழ்வின் பயனாகும்.

சுற்றம் என்பது பொது நோக்கில் உறவு முறைகளைக் குறித்தாலும் சிறப்புவகையாகச் சுற்றி இருக்கும் அனைவரையும் குறிக்கும் சொல்லாக எடுத்துக் கொள்வது ஏற்புடையது. " காக்கை குருவி எங்கள் சாதி" எனப் பாரதி சொன்னதும் ஈண்டு எண்ணத்தக்கதே. அதற்கு ஒப்பவே காக்கை தம் இனத்தைக் கரைந்து அழைத்துத் தம் சுற்றத்தை விருந்தோம்பல் போல வாழ்வோர் செல்வமே நிலையானது. அப்படிப்பட்டவர்க்கே செல்வம் நிலைக்கும். இதை உணர்த்தும் குறள் இதோ,

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீரார்க் கே உள.**

என்ன பொருத்தமான சிந்தனை.

**முடிவுரை :**

எனவே சுற்றம் சூழ வாழ்தலின் நோக்கமும் சீர்மையும் இதனால் விளங்கியிருக்கும்.

# கலித்தொகையில் மனித நேயம்

சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை - பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியவனவாகும். பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும் பதினெண்மேல் கணக்குநூல்கள் பிற நாலடியார் திருக்குறள் முதலான பதினெட்டு நூல்களும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும்.

இவற்றுள் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் தமிழர்தம் வாழ்வியல் பொருளியல் இன்ப இயல் ஆகிய மூனறனையும் பரக்கக்காட்டுவனவாகும்.

இங்குநாம் காண முயல்வது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான " கற்றறிந்தாரேத்தும் கலி " எனப் போற்றப்படும் ஆறாவது நூலாகிய கலித் தொகையில் காணப்படும் மனிதநேயம் பற்றியதாகும்.

இந்நூல் மதுரையாசிரியர் நல்லந்துவனார் இயற்றிய கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ எழுதிய பாலைக்கலி 35 பாடல்களும் கபிலரின் குறிஞ்சிக்கலி 29 பாடல்களும் மதுரை மருதன் இளநாகனார் பாடிய மருதக்கலி 35 பாடல்களும் சோழன் நல்லுருத்திரன் பாடிய முல்லைக்கலி 17 பாடல்களும் கடவுள் வாழ்த்துப் பாடிய நல்லந்துவனார் பாடிய நெய்தற்கலி 33 பாடல்களும் கொண்ட 5 கலிப்பகுதிகளும் அடங்கிய 150 பாடல்களைக் கொண்டு இலங்கும் அகவாழ்வு சுட்டும் அழகிய நூல் கலித்தொகையாகும். பழந்தமிழர் கண்ட ஐந்திணைப் பாகுபாட்டுச் சிறப்பும் அவரது மாண்புநிறை ஒழுக்கமும் உயர்வும் இந்நூலைக் கற்பார்க்குத் தெளிவாகப் புலப்படும்.

இச்செந்தமிழ்ப் பெருநூல் தேன்சுவைச் சொற்களாலும், தெள்ளிய உருவகங்களாலும் அமைந்த கற்கண்டுப் பெட்டகம் ஆகும். கலித்தொகை ஒத்தாழிசைக் கலிப்பா எனும் பாவகையில் அமைந்த நூல்.

மக்கள் தம் நல்வாழ்விற்கு வேண்டிய நன்னெறிகள் பலவற்றை இடை இடையே தொகுத்தும் விரித்தும் சுட்டிச் செல்வது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

இந்நூல் முழுதும் தலைவன் தலைவி தோழி மூவர் கூற்றுகளிலும் மனிதநேயம் மலிந்து காணப்படுகிறது. நல்லந்துவனார் பாடிய நெய்தற்கலியில் நெய்தல் நிலப் பழக்கவழக்கங்கள் பலவற்றையும், வைதிக ஒழுக்கங்கள் சிலவற்றையும் நன்கெடுத்து விளக்கியுள்ளார். உலக மாந்தர்க்கு நன்னெறி காட்டும் அறிவுசார்ந்த அறிவுரைகள் ; பல இவர் பாடல்களில் காணப்படுகின்றன. இவர் பாடலில் காணப்படும் மனிதநேயப் பாங்கை ஈண்டு ஆய்வோம்.

கலித்தொகைப் பாடல்கள் அனைத்தும், கருத்துவளம் மிக்கவை. தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி அறிவதற்கு அப்பாடல்கள் பெரிதும் உதவும். உயர்ந்தோர் தாழ்ந்தோர் அன்பில் மனிதநேயம் கலந்து மிளிர்வதை நல்லந்துவனார் பாடல் பரக்கக்காட்டும். நெய்தற்கலியில் தலைவனை நினைந்து இறங்கி ஆற்றியிருக்கும் தலைவியின் நிலையைத் தோழி தலைவனிடம் எடுத்துக் கூறி விரைவில் அவளை ( தலைவியை) மணம் புரிந்துகொண்டு இன்பம் தருக என எடுத்துக் கூறுகிறாள். இச்செய்தியைக் கூறும்போதே இல்லறத்தின் பொது அறங்களை வரிசைப்படுத்துகிறாள் தோழி.

அறிஞர்கள் சிறந்த கருத்துக்களுக்கு விளக்கம் தருவர். திருவள்ளுவரிடம் அறிவு என்றால் என்னவென்று கேட்டால்,

**" சென்ற விடத்தாற் செலவிடா (து) தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு " ( குறள் : 422 )**

என்று கூறுவார். இங்கே

**" மாமலர் முண்டகந்தில்லையோ டொருங்குடன் "**

எனத் தொடங்கும் பாடலில் பின்வரும் கருத்துக்களை மனித நேயப் பொழிவுகளாகத் தோழி கூற்றாக நல்லந்துவனார் பிழிந்து தருகிறார்.

அன்பு என்றால் என்ன ? பண்பு என்றால் என்ன ? முறை என்றால் என்ன ? பொறை என்றால் என்ன ? போற்றுதல் என்றால் எனன ? ஆற்றுதல் என்றால் என்ன ? போனற வினாக்களுக்கெல்லாம் விடைகள் தருகிறார் நல்லந்துவனார். அக்கருத்தாழம்மிக்க வரிகள் இதோ மேற்கூறிய பாடலின் தொடர்ச்சியாக அமைந்துள்ளன.

இல்வாழ்க்கை நடத்துகின்றவர்கள் பிறர் பசி ஆற்றுதல் வேண்டும். இதுதான் அலந்தார்க்கு ( துன்பப்படுவார்க்கு ) உதவுதல், வாழ்க்கையில் போற்றுதல் என்பது சேர்ந்தாரைப் பிரியாதிருத்தல் - இணைந்தவர்கள் பிரிதல் கூடாது. இது போற்றுதல் ஆகும். பண்பு எனக் கூறப்படுவது உலகவொழுக்கம் ஆகிய பண்புடையார் நடந்து கொள்ளும் முறையில் நடந்து கொள்வது. அன்பு எனப்படுவது சுற்றத்தாரைக் கெடாது பாதுகாத்து அரவணைத்தல், அறிவு எனப்படுவது அறிவற்ற பேதையர்கள் கூறிய இழி சொற்களை பொறுத்துக் கொள்ளுதல், செறிவு எனப்படுவது தாம் கூறிய சொற்களை மீண்டும் இல்லை என மறுக்காமை, நிறைவு என்பது மறைக்க வேண்டிய பொருளை அல்லது செயலைப் பிறர் அறியாது மறைப்பது, முறை எனப்படுவது நம் சுற்றத்தார் என்று கண்ணோட்டம் பாராது அவர் செய்த பிழைக்கு ஏற்ப உயிரைக் கொல்லுதல் ( கொலைத் தண்டனை ), சான்று மனுநீதிச் சோழன் தன் புதல்வன் என்றும் பாராமல் இரக்கம் காட்டாமல் தேர்ச்சக்கரத்தை ஏற்றிக் கொன்ற செயலே சான்று. பொறுமை எனக் கூறப்படுகிறது தம்மை இகழ்ந்தவர்களையும், போற்றாதவர் குற்றங்களையும் பொறுத்துக் கொளளுதல், ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை இத்தனைக்குரிய விளக்கங்களும் மனித நேயத்தைப் பறைசாற்றும் கருத்துக் கருவூலகங்கள் அன்றோ ? ஒரு தலைவன் தலைவியைத் திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்தும் தோழி கூறும் பொது நீதிகளாக நல்லந்துவனார் கூறிய மனிதநேயக் கருத்துக்கள் சாகா வரம் பெற்றவை ஆகும்.

"அப்பாடலாகிய சத்தான முத்துக்குவியலை இங்கே காண்போம்."

**ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண் பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்**
**அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை**
**அறிவெனப்படுவது பேதையார் சொல்நோன்றல்**
**செறி எனப்படுவது கூறியது மறா அமை**
**நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை**
**முறை வெனப்படுவது கண்ணோடா (து ) உயிர்வௌவல்**

பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் ( கலி.133)

நல்லந்துவனார் மேலும் ஒரு பாடலில் மனித நேயத்தைச் சுட்டுவது நினைந்து மகிழத்தக்கது.

ஒரு பெண்ணை நினைந்து காதல் மிகுந்த ஆடவன் ஒருவன் தன்னை அவள் ஏறிட்டுப் பாராமையால் ஊரில் உள்ள சான்றவரை அழைத்து, தான் விரும்பும் ஒருத்தி தன்னை விரும்ப வேண்டும் என்பதை வற்புறுத்தப் பனைமடல் ஏறுவதாகக் கூறி அழைக்கின்றான்.

அப்போது கூறும் பொதுநீதி மனித நேயம் சுட்டுவது ஆகும்.

நற்குணங்கள் நிறைந்த சான்றோரே நன்றாய் வாழுங்கள். நீர் சான்றோர் என்றால் உங்களிடம் ஒன்று அறிவுறுத்துவேன். பிறர்க்குண்டாகும் துன்பம் தமக்குண்டாவதாக எண்ணி அத்துன்பம் போக்கத் துணிபவர் சான்றோர்.

இங்கே ஒருத்தி மின்னல்போல வந்து என் உள்ளங்கவர்ந்தாள், என்னை இரங்கத்தக்கவனாய் ஆக்கி என் நெஞ்சைக் கவர்ந்து சென்று விட்டாள். நான் அவள் மீது உற்ற காமநோயால் வருந்துகின்றேன். அதனால் எருக்கம்பூ மாலை அணிந்து கரிய பனைமடலால் ஆன குதிரைமேல் ஏறும் முன்பு அவளால் ஏற்பட்ட வருத்தத்தை முறையிடுகின்றேன்.

எம்துயரைப் போக்குதல் நும்கடமை எனப் பேசுகிறான். காமம் உழந்தான் மடலேறுதிறம் " எனத் தொல்காப்பிய இலக்கணம் சுட்டும். இச்செய்தியால் நல்லந்துவனார் பாடலில் நாம் காண்பது பிறர்க் குற்றதுன்பத்தைத் தன் துன்பமாகக் கருதிப் போக்கல் சான்றோர் கடன் எனும் மனிதநேயச் சிந்தனையே ஆகும். அந்த அரும்பாடல் வரிகள் இதோ,

> சான்றவர் வாழியோ சான்றவிர் என்றும்
> பிறர்நோயும் தந்நோய் போற்போற்றி அறன்அறிதல்
> சான்றவர்க் கெல்லாம் கடன் ஆனால் இவ்விருந்த
> சான்றீர் உமக்கொன் அறிவுறுப்பேன்.
> துயர்நிலைத் தீர்த்தல் உந்தலைக் கடனே. ( நெய்தற்கலி - 139)

இத்தகு அற்புதமான மனித நேயத்தை உலகுக்குப் பறை சாற்றும் சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான

கலித்தொகையில் காணும் ஒவ்வொரு பாட்டும் உலகநீதி தரும் ஒப்பற்ற கருத்துப் பெட்டகம் என்பதை அறிந்து இன்புறுவோம்.

இம்மனிதநேயச் செய்தியைப் பாரதியும் நினைவு கூர்வது சிந்தித்தற்குரியது. " உயிர்களிடத்து அன்பு வேண்டும் . அது உண்மை என்று தானறிதல் வேண்டும். வயிரமுடைய நெஞ்சு வேண்டும். அது வாழும் முறைமையடி பாப்பா" இதைவிட எளிமையாக மனிதநேயத்தை விளக்க இயலாது.

"பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ" என்று நிரந்தரமாக அணையா அடுப்புமூட்டி வடலூரில் சத்திய பரிபாலன சபையை நிறுவிப் பசித்தோர்க்கு உணவிட்ட இராமலிங்க வள்ளலார் சொல்லுவார். அன்புடைமை, விருந்தோம்பல், கொல்லாமை எனப் பல அதிகாரங்களில் வள்ளுவம் காட்டும் மனிதநேயம், " இட்டுப்பார் உண்டவர்கள் இன்புற்றிருக்கையிலே தொட்டுப்பார் உன் நெஞ்சைத் தோன்றும் இன்பம் " தன் பொருட்டு வாழ்வானோர் ஏழை மக்கள் தம் பொருட்டு வாழ்வான ஓர் செல்வன் எனப் பாரதிதாசன் காட்டும் மனிதநேயச் சிந்தனை யாவும் கலித்தொகை காட்டும் மனிதநேயத்தின் மறுபதிவுகள் என்பதை நாம் மறுக்க இயலாது.

இன்றைய சமுதாயத்தில் மேற்கண்ட பாடலில் பயின்று வரும் மனிதநேயப் பாங்கை உலவவிடுவதும், உருவாக்குவதும் அறிஞர்களின் கடமையாக எடுத்துக் கொண்டு சமூகத்தில் மனிதநேயம் உருவாக ஒவ்வொருவரும் பாடுபடுவோம்.

# ஏலாதி, இன்னிலை, கைந்நிலை

**முன்னுரை :**

இலக்கியங்கள் வாழ்க்கையின் எதிரொலிகள் சமுதாயத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல் கற்கள், மனத இலட்சியத்தின் உயிர்நாடி. எல்லா மொழிகளிலும் காலந்தோறும் சூழ்நிலைக்குத்தக்க இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். மாற்றம் அடைந்து கொண்டே இருக்கும்.

தமிழில் தோன்றிய முதல் இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள். அவை எட்டுத் தொகை பத்துப்பாட்டு என அழைக்கப்பெற்றன. தொடக்க காலத்தில் தமிழர் வாழ்க்கையை அகம், புறம் என வகுததுக் கொண்டு அகவாழ்வு அல்லது இல்வாழ்வு, புறவாழ்வு அல்லது நாட்டு வாழ்வு எனும் நிலையில் அக இலக்கியங்களாக அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு போன்றவற்றைத் தொகுத்தனர்.

புற இலக்கயங்களாகப் புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்களைத் தொகுத்தனர். பரிபாடல் பொது நிலையில் அமைந்தது.

அகம், புறம், என்ற வாழ்க்கைநிலை, அறம், பொருள் இன்பம் என மூன்றாக வளர்ந்தது. காலத்தின் கோலத்தால் அறநூல்கள் தோன்ற வேண்டிய சூழ்நிலை தமிழகத்தில் ஏற்பட்டது. அதனால் சங்க காலத்தை அடுத்து அறநூல்கள தோன்றின எனக் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு எனப் பதினெட்டு நூல்கள் அமைந்ததால், அதற்குப்பின் தோன்றிய அறநூல்களையும் எண்ணினர் போலும். அதனால் சங்க இலக்கியங்கள் பதினெண்மேல்கணக்கு நூல்கள் எனவும், அதற்குப் பின் தோன்றிய அறநூல்கள் பதினெட்டுக்கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் வகுத்துக் கொண்டனர் எனத் தெரிகிறது. சங்க இலக்கியத்தில் அகநூல்கள் மிகுதி. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் மிகுதி. இது சமுதாய மாற்றத்தையும் காலச் சூழ்நிலையையும் நமகுத் தெரிவிக்கிறது.

பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களில் முதல் பதினொரு நூல்கள் அறநூல்கள். 1. திருக்குறள், 2. நாலடியார், 3. பழமொழி, 4. நான்மணிக்கடிகை, 5. திரிகடுகம், 6. சிறுபஞ்சமூலம், 7. ஆசாரக் கோவை, 8. ஏலாதி, 9. இன்னாநாற்பது, 10. இனியவை நாற்பது, 11. முதுமொழிக் காஞ்சி, அடுத்துள்ள ஆறு நூல்கள் அகநூல்கள். 12. ( 1) திணை மாலை நூற்றைம்பது, 13. (2) ஐந்திணை எழுபது, 14. (3) ஐந்திணை ஐம்பது, 15. (4) திணைமொழி ஐம்பது, 16. (5) கைந்நிலை, 17. (6) கார்நாற்பது, 18. (7) களவழி நாற்பது, இறுதியில் உள்ள களவழி நாற்பது ஒரே புறநூலாகப் பதினெண்கீழ்க்கணக்கில் உள்ளது. மணிவாசகர் பதிப்பகத் தொகுப்பில் இன்னிலை எனும் இன்னிலை நூல் இல்லை எனச் ச.வே. சுப்பிரமணியன் குறிப்படுகிறார். ஆயின், 1930 அம்பாசமுத்திரம் அகஸ்தியர் அச்சுக் கூடத்தில் கப்பல் ஒட்டிய தமிழன் வ.உ.சி. கைந்நிலை எனும் சொல்லுக்கு ஒழுக்கத்தைப பற்றிக் கூறும் நூல்களாம் என உரைத்துக் கொள்க என உரைத்து, கைந்நிலை என்பதை நூலாகக் கொண்டார் இல்லை.

இப்பொழுது பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய ஒரு வெண்பாவைக் காண்போம்.

நலாடி, நான்மணி, நானாற்பது, ஐந்திணைப் பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம், இன்னிலையைக் காஞ்சியுடன், ஏலாதி என்பவும் கைந்நிலையும், ஆம் கீழ்க்கணக்கு, இவ்வெண்பாவில், இன்னிலைய எனும் மூன்றாம் அடி முதற்சீருக்குள் கீழே நான்காம் அடி முதற்சீர் கைந்நிலைய ஆம் என்றும் கைந்நிலையும் ஆம் இருவகைப்பாட பேதத்தில் உள்ளது. இதற்குச் சவே, சுப்பிரமணியம் அவர்கள் 1885 ஆம் ஆண்டு தொடங்கி சி. வை. தாமோதரம் பிள்ளை, கே. ஸ்ரீநிவாச ராகவாச்சாரியார் ஆராய்ந்து எழுதியதின் பயனாக இன்னிலை பதினெண் கீழ்க்கணக்கு நூல் இல்லை எனவும், கைந்நிலை எனும் ஐந்திணை நூல் மட்டுமே உண்டு என்பார். எப்படியாயினும் ஈண்டு, ஈலாதி, இன்னிலை, கைந்நிலை ஆகிய மூன்று நூல்கள் பற்றியும் ஈண்டு காணலாம்.

மேலே கூறப்பட்டுள்ள பதினெட்டு நூல்கள் திருக்குறள், கி.மு. முதல் நூற்றாண்டில் தோன்றி இருக்கலாம் என்பது பொது

எண்ணம். ஏனைய நூல்கள் கி.பி. 250 க்கு பின்பும், கி.பி. 800 க்கு முன்பும் தோன்றி இருக்கலாம்.

(இராமநாதபுரம் மன்னரைப் புலவர்) சேது சமஸ்தான மகா வித்வான் ரா. ராகவய்யாங்கார் அவர்கள் தாம் பதிப்பித்த திணைமாலை நூற்றைம்பதின் முகவுரையில், பதினெண்கீழ்க்கணக்கு எண்ணிக்கையைத் தந்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | ஜைன ( சமண ) முனிவர் எழுதிய நாலடி | 400 |
| 2. | விளம்பி நாகானார் எழுதிய நான் மணிக்கடிகை | 100 |
| 3. | கபிலர் எழுதிய இன்னா | 40 |
| 4. | பூதஞ் சேந்தனார் எழுதிய இனியவை | 40 |
| 5. | மதுரைக் கண்ணங்கூத்தனார் எழுதிய கார் | 40 |
| 6. | பொய்கையார் எழுதிய களவழி | 40 |
| 7. | மாறன் பொறையனார் எழுதிய ஐந்திணை | 50 |
| 8. | மூவாதியார் எழுதிய ஐந்திணை | 70 |
| 9. | கண்ணஞ்சேந்தனார் எழுதிய திணை மொழி | 50 |
| 10. | கணிமேதாவியார் எழுதிய திணைமொழி | 70 |
| 11. | திருவள்ளுவர் எழுதிய முப்பால் | 1330 |
| 12. | நல்லாதனார் எழுதிய திரிகடுகம் | 100 |
| 13. | பெருவாயில் முள்ளியார் எழுதிய ஆசாரக்கோவை | 100 |
| 14. | முன்றுறையரைனார் எழுதிய பழமொழி | 400 |
| 15. | மாக்காரியாசான் எழுதிய சிறுபஞ்சமூலம் | 100 |
| 16. | மதுரைக் கூடலூர் கிழார் எழுதிய முதுமொழிக்காஞ்சி | 100 |
| 17. | கணிமேதாவியார் எழுதிய ஏலாதி | 80 |
| 18. | புல்லாங்காடனார் எழுதிய கைந்நிலை | 60 |
| | ஆக மொத்தம் பாடல்கள் | 3250 |

இப்பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பான்மையும் மதுரையில் வாழ்ந்த புலவர்களால் எழுதப் பெற்றுள்ளன என்பது கீழ்க்கணக்கு ஏடு ஒன்றில் காணும் தனிப்பாடலால் அறிய முடிகிறது.

மாப்புலவர் எல்லாரும் மாக்கூடற்கண் இருந்து,
பாற்படுத்த தென்தமிழன் பாநான்கின் - வாய்ப்புடைத்தாய்ப்
பண்பாய்ந்து உரைத்த பதினெட்டுக்கீழ்க்கணக்கும்

வெண்பாவின் பால் உரைத்தார் மிக்கு.

நீதிநூல்களுள் திருக்குறள் பாடல் தொகையில் பேரெல்லை உடைத்தாயிருத்தலோ, அவற்றுள் தலைசிறந்தும் விளங்குவது ஆதலின், முதற்கண் அமைக்கப்பெற்றது. நாலடியாரும் பழமொழியும் நானூறு பாடல்களை உடையன. இவற்றுள் நாலடியார் திருக்குறளோடு மிக நெருங்கிய தொடர்புடையது. ஆதலின் திருக்குறளை அடுத்து நாலடியாரும், அதன் பின்னர்ப் பழமொழியும் மேற்கொள்ளப் பெற்றன. நூறு செய்யுள்களை உடைய நூல்கள் நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆசாரக்கோவை என்ற நான்குமாம். இவற்றுள் பாடல்தோறும் ......... பொருள்களை உரைக்கும் நான்மணி நாலடியாரோடு பெயர் ஒற்று ......... உடைமையானும், நூறு பாடல்களை உடைய ஏனைய மூன்று நூல்களில் ......... சிறந்த முறையில் நீதிகளை வகுத்துள்ளமையினாலும் நான்மணிக்கடிகை முதலில் தரப்பெற்றது. இதன்பின் திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ......... இரண்டும் கொள்ளப் பெற்றுள்ளன. இவை மருந்தின் பெயர்களை பெற்றுள்ளதோடு, திரிகடுகம் மூன்று பொருள்களையும், சிறுபஞ்சமூலம் ஐம்பொருள்களையும பாடல்தோறும் கூறுகின்றன. அறநூல்கள் எடுத்துரைக்கும் வகையில் இரண்டிலும் திரிகடுக்ப்படால்கள் சிறந்த அமைப்பு முறையில் மேற்கொண்டுள்ளன. ஆசாரக் கோவை ஒரு மொழி பெயர்ப்பு நூல் என கூறத்தக்க வகையில் வடமொழி ஸ்மிருதிக் கருத்துக்களை பின்பற்றி அமைந்துள்ளது. எனவே நூறு பாடல்களைக் கொண்ட கீழ்க்கணக்கு நூல்களில் இறுதியாக வைக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் ......... பெயரினாலும் நூல் அமைப்பினாலும் சிறுபஞ்ச மூலத்தோடு ஒத்தகருத்து உடையதாயினும் எண்பதே பாடல்களை உடையதால் நூறு பாடல்களை கொண்ட நூல்களின் பின் அடைவு பெற்றுள்ளது. மற்ற நூல்களுள் இவ்வாறே வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அறநூல்களில் நீதி நூல்கள் பதினொன்றில் ஏலாதி நீங்கலாக ......... பத்திற்கும் பழைய உரைகள் சிதைவின்றிக் கிடைத்துள்ளன. ஏலாதியிலும் சிற்சில பாடல்களுக்கும் பழைய உரை கிடைக்கவில்லை. கைந்நிலை நூல் சிதைவுற்றுள்ளது போலவே உரையும் ஆங்காங்கே சிதைவுற்றுள்ளது.

## ஏலாதி

ஏலம் என்பது மருந்து. மணப்பொருள்களுள் ஒன்று, ஏலம் ஆதிய ......... என்பது ஏலம் முதலாக என்பது பொருள் ஏலம் முதலாகப் பல மருந்துப் பொருட்களை இணைத்துச் செய்யப் பெறும் மருந்தின் பெயர் ஏலாதி. ஏலாதி மருத்துவ நூல்களில் கூறப்பெறும் ஏலம் ஒருபங்கு, இலவங்கம் ......... இரண்டு பங்கு, நாககேசரம் மூன்று பங்கு, மிளகு நாலு பங்கு, திப்பிலி ஐந்து பங்கு, சுக்கு ஆறு பங்கு என்ற அளவுப்படி சேர்த்து இம்மருந்தை ஆக்கு ........ ஏலாதி நூலும் ஒவ்வொரு பாடலிலும் ஆறு பொருள்களைப் பெற்று, உயிருக்கு உறுதுணையான அறநெறியை விளக்கி உரைக்கும் ஒப்புமை நீர்மையாக இப்பெயரைப் பெற்றுள்ளது.

ஏலாதியின் தன்மை குறித்துத் தமிழ்நூல்களில் விளக்கம் காணப்பெறவில்லை. வடமொழியில் ஏலாதி கிருதம், ஏலதி சூர்ணம், ஏலாதி கணம் என மூவகை ஏலாதிகள் பேசப் பெறுகின்றன. இவற்றுள் ஏலாதி சூர்ணம் என்பதுவே இந்நூற்பொருளுக்கு மிகவும் இயைந்ததாகும்.

மருந்துப் பெயர் பெற்ற கீழ்க்கணக்கு நூல் ஏலாதி, சிறுபஞ்ச மூலத்தோடு, பெரிதும் ஒத்த பாங்கினை உடையது. சிறுபஞ்சமூலம் ஐந்து பொருள்களை உரைக்க, இது ஆறு பொருள்களைச் சுட்டுகின்றது. மேலும் சிறுபஞ்சமூலத்தின் கருத்துச் சொற்பொருள்களை இந்நூல் பல இடங்களில் அடியொற்றியுள்ளது. இருநூல்களின் ஆசிரியரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர். இருவரும் மாக்காயனாரிடம் தமிழ் பயின்றவர். வடசொல் ஆட்சி, சிறுபஞ்சமூலம் ஏலாதி ஆகிய இருநூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

இந்நூலாசிரியர் கணிதமேதாவியார், கணிமேதை யார் என்றும் அவர் வழங்கப் பெறுவர். கணிமேதை என்பது கொண்டு, சோதி நூற்புலமை மிக்கவர். இவர் என்று கொள்வாரும் உண்டு. நூலின் முதற்கண் அருகக் கடவுளுக்கு இவர் வாழ்த்துக் கூறியுள்ளமையாலும் நூலுள் சமண சமயத்தின் சிறப்பு அறங்கள் சுட்டப் பெறுதலினாலும் இவரை சமண சமயத்துவர் என்று கொள்ளலாம். இவர் சமணரில் ஒரு சிலரைப் போலத் துறவறத்தையே வற்புறுத்தாதவர்.

மனை வாழ்க்கை மாதவம் என்றிரண்டும் மாண்டவினை வாழ்க்கையாக விழைப ( 73 ) என இல்லறம் பற்றிக் கூறியது நோக்கத்தக்கது. இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர், திணைமாலை நூற்றைம்பதின் ஆசிரியரும் இவரே.

இவரது நூல் இல்லற நூலாயும், துறவற நூலாயும், வீட்டு நெறிநூலாயும் உள்ளது எனச் சிறப்புப் பாயிரச் செய்யுள் புகழ்கிறது.

**இல்லற நூல் ஏற்ற துறவறநூல் ; ஏயுங்கால்**
**சொல்லறநூல் சோர்வு இன்றித் தொக்குரைத்து நல்ல**
**அணிமேதைஆய், நல்ல வீட்டுநெறியும்**
**கணிமேதை செய்தான் கலந்து.**

மேற்கண்ட செய்யுளின் பொருள், இல்லறம் பற்றிய நூலையும் அதற்கேற்ப துறவற நூலையும் செய்து ஆராயும்போது அறம் கூறும் நூலாகவும் இந்த ஏலாதி எனும் நூலை நல்ல அழகான மேதைத் தன்மையுடையராக ஆராய்ந்து நன்மைதரும் வீடுபேறு நெறியும காட்டும் நூலாகவும் கணிமேதை எனும் புலவன் எல்லாம் கலந்து செய்தான். எத்தனை அழகான கருத்தாழமும், பொருள் ஆழமும் கொண்ட சொற்கள், இத்தகு அறநூலில் பொதிந்து கிடைக்கும் அறக்கனிகள் சிலவற்றை ஈண்டு சுவைத்து மகிழ்வோம்.

புகழ்பெற வாழ்தல், நிறை உடைமை, பொய்யாமை, அஞ்சாமை, சிதை சொற்கள் உரையாமை, சாவது எளிது. ஆனால் சான்றோராய் வாழல் அரிது பெரியார் சொல் பேணல் முதலிய பல்வேறு நீதிக்கருத்துக்களை எண்பது பாடல்களிலும் எடுத்து விளக்கும் பாங்கும் போற்றுதற்குரியது.

கொலைபுரியான் கொல்லான், புலால்மயங்கான் அலை புரியான், வஞ்சியான், யாதும் நிலைதிரியான் (கூர்ந்த மண்ணவர்க்கும் அன்றி - மது மலி பூங்கோதாய் விண்ணவர்க்கும் மேலாய்விடும்).

தேன் நிறைந்த பூமாலை சூடிய பெண்ணே கொலை புரியாதவனாகவும், பிற உயிர்களைக் கொல்லாதவனாகவும், கொன்ற உயிர்கள் ஆடு, கோழி, மாடு போன்ற உயிர்கள் ஊனைத் தின்ன வேண்டும் எனும் ஆசை இல்லாதவனாகவும் வஞ்சனை புரியானாகவும், பிறரை வஞ்சிக்காதவனாகவும், தன்னிலையினின்று

திரியாதவனாகவும் இருப்பவன். இம்மண்ணுலகில் வாழ்வார்க்கு அன்றி, விண்ணுறை தேவர்க்கும் மேலாய் விடுவான்.

கொலைபுரியான் என்றால் மனித உயிர்களைக் கொலைபுரியும் கொடுஞ்செயலாம், கொல்லான் எனில் ஆடு, மாடு, கோழி போன்ற விலங்கு பறவை முதலியவற்றைக் கொன்று அவற்றின் புலாலில் ஆசை வையாமையாம். திருவள்ளுவரும், "கொல்லான புலாலை மறுத்தானைக் கைகூபபி எல்லா உயிரும் தொழும்" என்றார்.

**கொல்லான், கொலை புரியான், பொய்யான்,**
**பிறர்பொருள் மேல் செல்லான், சிறியார் இனம் சேரான்,**
**சொல்லும் மறையில் செவிஇலன் தீச்சொற்கள்**
**மூங்கை இறையிற் பெரியாற்கு இவை.**

பிற உயிர்களைக் கொல்லாதவனாகவும், மனிதக் கொலை புரியாதவனாகவும், பொய்ம்மை இல்லாதவனாகவும், பிறர்பொருள் மேல் பற்று வைக்காதவனாயும், அற்பர் கூட்டத்தில் சேராதவனாயும் பிறர் சொல்லும பொய்க்குச் செவி சாய்ககாதவனாகவும், தீய சொல் பேசுவதில் ஊமையனாகவும் இருப்பவன் இறைவனில் பெரியவன் ஆகும். தகுதியுடையான் என்கிறார் கணிதமேதையார். மேற்காண் செய்திகள் மனிதருள் மேம்பட்டவனாய் விளங்க என்னென்ன வேண்டும் என்பதை ஏலாதி காட்டும் பாங்கு எண்ணத்தக்கது.

எவை எவை இழந்தார்க்கு கொடுத்து வாழ வேண்டும் என்பதற்கு ஓர் அற்புதமான பட்டியல் தருகிறார் கணித மேதையார்.

**தாய் இழந்து பிள்ளை, தலை இழந்து பெண்டாட்டி**
**வாய் இழந்த வாழ்வினார், வாணிகம் போய் இழந்தார்**
**கைத்து ஊண் பொருள் இழந்தார், கண்ணிலவர்க்கு ஈந்தார்**
**வைத்து வழங்கி வாழ்வார்.**

**இல்இழந்தார் கண் இழந்தார், ஈண்டிய செல்வம் இழந்தார்**
**நெல் இழந்தார், ஆன்நிரைதான் இழந்தார்க்கு - எல்உழுது**
**பண்ணி ஊண் ஈந்தவர் - பல்யானை மன்னராய்**
**எண்ணி ஊண் ஆர்வார், இயைந்து.**

**நிலையாளர் நீர்மை இழந்தார் - தலையாளர் தர்க்கு**
**புலையாளர், புண்பட்டார், கண்கெட்டார், போக்கு இல்**

ஊண் கொடுத்து ஊற்றாய் உதவினார் - மன்னராய்க்
காண் கொடுத்து வாழ்வார் கலந்து.

இம்மூன்று பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்து அறிவோம்.

தாயில்லாப் பிள்ளை, கணவனை இழந்த கைம்பெண், பேசும் திறனில்லாமையால் வாழத் தெரியாது வாழ்பவர், வியாபாரம் செய்து கெட்டுப் போனவர் உண்ணும் உணவுக்கெனச் சேர்த்து வைத்திருந்த பொருளை இழந்தவர், கண்ணிலார் இவர்க்கு ஈந்து வாழ்பவர் உண்மையில் வாழ்பவர் ஆவார்.

குடியிருக்கும் வீடு இழந்தவர், கண் இருந்து பின் குருடானவர், ஈட்டிய பொருளை இழந்தவர், சேமிப்பில் இருந்த நெல்லை இழந்தவர், தம பசுக் கூட்டத்தை இழந்தவர் ஆகியோர்க்கு உணவு வழங்கி வாழ்பவர் பல் யானைக் கூட்டம் உடைய மன்னர் போல் வாழ்வார்.

எல்லோரும் வெறுக்கும் புலைத்தன்மையுடையார் புண்பட்டார். கண்கெட்டார், போக்கிடம் தெரியாமல் தவிப்பவர், தன்நிலைத்தே எல்லாம் இழந்தவர் இப்படிப்பட்டவர்க்கு உணவு கொடுத்து ஊற்று நீராய் உதவுபவர் மன்னர்போல் வாழ்வார்.

இவ்வாறு கொடைத்தன்மையின் வகைப்பாட்டையும் எப்படிக் கொடுக்க வேண்டும் எனும் கருத்துத் தொகுப்பையும் கற்கும் தோறும் கற்கும் தோறும் இன்பம் தரும். இதுகாறும் ஏலாதி காட்டிய சிறப்புச் செய்திகளை அறக்கனிகளாய்ச் சுவைத்தோம்.

**இன்னிலை :**

இனி பதினெண்கீழ்கணக்கு நூல்களில் சேராது என அறிஞர் கூற சிலர் சேரும் என வ.உ.சி. போன்றோர் கூறும் இன்னிலை காட்டும் இன்சுவைத் தமிழை ஈண்டு அறிவோம்.

இன்னிலை என்னும் இந்நூல் கீழ்க்கணக்கு என்னும் பெயரால் தொகுக்கப்பட்டுள்ள நூல்களில் ஒன்று என்றும் நாலடி நான்மணி என வரும் பாடலில் இன்னிலை என்பதனைக் காஞ்சி என்பதற்கு அடைமொழியாகக் கொள்ளுதலும் காஞ்சியுடன் ஏலாதி என்பவே என்பதற்கு பின்னுள்ள ஒன்றாகக் கொள்ளுதல் பொருந்துவனவல்ல என்பது நன்கு விளங்கும் என்றும் வ.உ.சி. விளக்குவார்.

மேலும் இன்னிலை பற்றி வ.உ.சி. கூறும் செய்திகளை ஈண்டு காண்போம்.

இந்நூலை இயற்றியருளினவர், தெய்வ அருளும் செந்தமிழ் ஞானமும் சிறக்கப பெற்ற ஆழ்வார் பன்னிருவர்களில் ஒருவராகிய பொய்கையார். இவரே இந்நூலை இயற்றியவர் எனக் கொள்ளுதற்குரிய காரணம் பற்றி வ.உ.சி. இன்னிலை ஆசிரியர் எனும் தலைப்பில் எழுதியுள்ளார். இந்நூலினது ஏட்டுப் பிரதியின் முதல் ஏட்டுத் தொடக்கத்தில் மதுரையாசிரியரால் தொகுக்கப்பட்ட இன்னிலை நாற்பது ஐந்து என்னும் சொற்களும், அம்முதல் ஏட்டின் முடிவில் திருமேனிக் கவிராயன் இன்னிலை நாற்பதைந்து நன்றாக என்னும் சொற்களும், அம்முதல் ஏட்டின் முடிவில் திருமேனிக் கவிராயன் இன்னிலை நாற்பதைந்து நன்றாக என்னும் சொற்களும் அவ்வேட்டுப் பிரதியின் கடைசி ஏட்டு முடிவில் பொய்கையார் பாடிய இன்னிலை முற்றிற்று எனும் சொற்களும் எழுதப் பெற்றுள்ளன. பொய்கையார் என்பவர் இந்நூலை இயற்றிலர் என்றாவது அந்நூலை வேறு யாரெனும் இயற்றினார் என்றாவது நாம் கேள்விப்படவில்லை. ஆதலால் இன்னிலை என்பது இந்நூலே என்றும் இந்நூலை இயற்றியவர் பொய்கையாரே என்றும் நாம் கொள்ளலாகும். முதற்றிருவந்தாதி இயற்றியவரும் இன்னிலை எழுதிய பொய்கையாரும் ஒருவரே. இவர் காஞ்சி நகரைச் சார்ந்தவர். விஷ்ணு பக்தர் என்பது வ.உ.சி. அவர்களின் ஆய்வு. இவருக்கு முற்பட்ட இன்னொரு பொய்கையார் உள்ளார் எனச் சான்றோர் ஆய்வில் காணக்கிடக்கிறது.

இந்நூலைத் தொகுத்தவர் மதுரையாசிரியர் என வ.உ.சி. குறிப்படுகிறார். பொய்கையார் கடைச்சங்க காலத்துக்கு முற்பட்டவர் எனக் கருதுகிறார்.

இந்நூல் அறப்பால், பொருட்பால், இன்பப் பால், வீட்டுப்பால் என நான்குபகுதிகளாகவும், அவற்றில் வீட்டுப்பால், இல்லியல் துறவறவியல் என இரண்டு இயல்களாகவும் பகுக்கப்பட்டுள்ளன. அறப்பால் பத்து வெண்பாக்களையும், பொருட்பால் ஒன்பது வெண்பாக்களையும், இன்பப் பால் பன்னிரெண்டு வெண்பாக்களையும், வீட்டுப்பால் ( இல்லியல் எட்டு வெண்பாவும், துறவியல் ஆறு வெண்பாவும் ) பதினான்கு வெண்பாக்களையும கொண்டுள்ளன. இவற்றில் ஒரு சில இலக்கண இலக்கியப் பயிற்சி இல்லாதவர்கட்கும் பொருள் விளங்கத்தக்கவையாகவும், வேறு சில இலக்கண இலக்கியப் பயிற்சியுடையார்க்கு மாத்திரம் பொருள் விளங்கத்தக்கவையாகவும், மற்றவை இலக்கண இலக்கியப்

பயிற்சியுடையாரையும், கலக்கத்தக்கவையாகவும் உள்ளன. இவற்றில் பல நேரிசை வெண்பா சில இன்னிசை வெண்பா மூன்று சிந்தியல் வெண்பா, இரண்டு பஃறொடை வெண்பா, இந்நூலின் செய்யுள்களில் சில மிக அருமையான இலக்கணங்களுக்கு இலக்கியங்களாக அமைந்துள்ளன. பொருட்பால், இரண்டாம் செய்யுள், நான்காம் செய்யுளும் வீட்டுப்பால் துறவியல் இரண்டாம் செய்யுளும் ஐந்தாம் செய்யுளும் இலக்கியமாகும். இவ்வாறு வ.உ.சிதம்பரம் பிள்ளை இன்னிலை பற்றிய சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகிறார். கப்பலோட்டிய தமிழனாகவும், செக்கிழுத்த செம்மலாகவும் திகழ்ந்த சிதம்பரம் பிள்ளை ஓர் அற்புதமான இலக்கியவாதி, உரையாசிரியர், கட்டுரையாளர், கவிஞர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர் என்பது பலரும் அறிந்து கொள்ள வேண்டிய செய்தியாகும்.

நாற்பத்தைந்து செய்யுள்களைக் கொண்டு உருவத்தில் சிறிதாகத் தோற்றினும், இந்நூலின் ஒவ்வொரு செய்யுளினும் அடங்கிக் கிடக்கும் பொருள்களின் அருமையும் பெருமையும் அளவிற்கு அடங்காதவை. இந்நூலின் ஒவ்வொரு பாவும் ஒவ்வொர் இரத்தினம் என்று சொல்லத்தக்க சிறப்பை உடையது. இவ்வாறு வ.உ.சி. இந்நூலைச் சிலாகிப்பது எண்ணத்தக்கதாகும்.

இன்னிலை இனிமையாகிய நிலை எனப் பொருள்படும் கடவுள் வாழ்த்தில் வேலனைத் தொழுகிறார். அறப்பாலில் முதல்பாடலாக,

**அன்றமரில் சொற்ற அறவுரைவீழ் தீக்கழுது**
**மன்றுயர்ந்து போந்த வகைதேர்மின் - பொன்றா**
**அறமறிந்தோன் கண்ட அறம்பொருள் கேட்டல்லன்**
**மறம்ஒறுக்க வாய்த்த வழக்கு.**

<u>பொருள் :</u> முற்காலத்தில் பாரதப் போரில் கண்ணன் அருச்சுனனுக்குச் சொன்ன கீதையாகிய பேருரையை விரும்பிக் கேட்போர் தீய மனப்பேய்த் தன்மையின் நீங்கி உயர்வுற்று ஆன்றோர் அவைக்குச் சென்று சேர்வர். எனவே அழியா அறச்செயல்களை உணர்ந்தோன் உரைத்த அறநூலையும், பொருள் நூலையும் கேட்டு அல்லல் தரும் அறமல்லாத செயல்களை நீக்கி மேலான நிலையை அடைவதற்குச் சிறந்த வழியாம். இப்பாடல் மூலம் கீதை கேட்டோர் உயர்வது என்பது போல அறம் உணர்ந்தோர் கூறும் கருத்துக்களை கேட்டலே உயர்வடைய வழியாகும் எனும் கருத்தை வலியுறுத்துகிறார்.

அறப்பாலில் நான்காம் பாடல் அறம்புரிவோர்க்குத் துன்பம் அணுகாது எனும் கருத்தை அழகாக வலியுறுத்துகிறது.

**கழிவிரங்கங்கொள்ளார் கதழ் வாளர் வேர்த்துப்**
**பழிமுறுகக் கோடார் பயன்போர்த் - தமிழுதலை**
**இல்லங் கொண்டாக்கார் இடும்பைத் தளை தணப்பர்**
**நல்லறனை நாளணி கொள்வார்.**

<u>பொருள்</u> : நன்மையே பயக்கும் அறச்செயல்களை நாள்தோறும் அணியும் அணியாகக் கொள்பவர் கழிந்த காரியங்களுக்காக தனக்குத்தானே இரங்கி வந்தார். பகை கொள்ளமாட்டார். வெகுண்டு பழிக்குக் காரணமாக அறமற்ற செயல்களைச் செய்யார். அறநெறி விட்டுவிலகமாட்டார். அறமில்லா வழியில் வந்த அழிவுதரும் பொருளைத் தம் வீட்டில் சேர்த்து வைக்க மாட்டார். எனவே, இவர் துன்பமாகிய விலங்கிலிருந்து விடுபடுவார். இவ்வாறு அறப்பால் சிறப்பை அற்புதமாய் வலியுறுத்துவார் பொய்கையார்.

**தூய சொல்லாட்டும் துணிவறியும் துன்பங்கள்**
**தோயக் கலங்காத் துணைவலியும் - பூயல்**
**படுக்கும் திருவுத்தனாரே பறிப்பர்**
**அடுக்கு மடிச் சேராதவாறு.**

இப்பாடலில் வாயிலாக மீண்டும் பிறவாமை வேண்டில் எனன செய்ய வேண்டும் என்பதை விளக்கும் விதம் பாராட்டுக்குரியது.

தூய சொற்களைக் கூறுதலும், நூலோர் துணிந்தவற்றை அறிதலும், துன்பங்கள் வந்து, தம்மையடைந்தால் கலங்காதிருக்கும் துணைவலியும் பெற்ற செல்வந்தரே. ஒன்றன் பின் ஒன்றாக அடுத்துவரும் பிறப்பைப் பெறாத சிறப்பினை அடைவார்.

இப்படி அறத்துப்பால் பத்துப்பாடல்களிலும் பல அரிய செய்திகளைப் பொய்கையார் புகன்றுள்ளார். இன்னும் பொருட்பால், இன்பத்துப்பால், வீட்டுப்பால் ஆகி அனைத்துப் பால் செய்திகளையும் வ.உ.சி. நூல் கண்டு படித்து மகிழலாம். ( 1930 ஆம் ஆண்டு பதிப்பு).

**மெய் வலியுஞ் சென்னிலையும் வாழ்நாளும் தூவொழுக்கம்**
**மெய்யா வளிக்கும் வெறுக்கை இலார் - வையத்துப்**
**பல்கினையும் வாடப்பணையணைதோள் சேய்திரங்க**
**வொல்குயிர்ந்தாரும் நரகு.**

செல்வம், உடல் பலத்தையும், சொல் நிலையையும் பூரண ஆயுளையும், தூய ஒழுக்கத்தையும் உண்மையாகக் கொடுக்கும் அஃது இல்லாதவர் இவ்வுலகில் தமது பல உறவினரும் வருந்தவும், பருமை பொருந்திய தோள்களை உடைய மனையாளும் மக்களும், மெலிவுறவும், தளரும் தம் உயிரைவிட்டு மறுமையில் நரகம்புகுவர். இப்பாடல் மூலம் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை எனப் பொருளின் சிறப்பை உணர்த்துகிறார்.

காலத்தில் பொருள் சேர்க்காதவன் படும் துன்பத்தை அற்புதமாய் விளக்குகிறார் இந்நூலாசிரியர்.

**குருட்டாயன் நீள்கானங்கோடல் சிவணத்**
**தெருட்டாயம் காலத்தாற் சேரான் பொருட்டாகாள்**
**நல்லறமும் பேணானாம் நாரம் இவர்த்தானாம்**
**பொல்லாங் குறைவிடனாம் புல்.,**

இப்பாடற் கருத்து சிந்தித்தக்கது. ஆய்வுக்குரியது.

இளம்பருவத்தில் அறிவை அடைவதற்கு ஏதுவான பொருள் வருவாயைப் பொருந்தாதவன் அல்லது சேர்க்காதவன் குருட்டு இடையன் பாதை தடுமாறி காட்டினை அடைதலைப் போல ஒரு பொருளாக மதிக்கப்படாதவன் ஆவான். துன்பங்கள் எல்லாம் தங்குவதற்குரிய இடமாவன், ஆதலால் அவன் அற்பனேயாவான். பொருள் இல்லாமையால் வரும் கேடுகள் யாவை என்பதை இப்பாடல் விளக்குறது.

**முப்பொருள் உண்மை தெளிவான் அருஞ்சீலன்**
**முப்பொருள் உண்மை உடையான் அருமுனிவன்**
**முப்பொருள் உண்மை மடுப்பான் இறையாங்கு**
**முப்பொருள் உண்மைக் கிறை.**

இச்செய்யுளின் சொல்லழகும் பொருள் அழகும் அற்புதமானவை.

இப்பாடல் கருத்தை இங்கே காண்போம். அறம், பொருள், இன்பம், எனும் மூன்று பொருள்களின் உண்மையை அறிபவன் அரிய ஒழுக்கம் உடையவன் ஆவான். அம்மூன்று பொருள்களின் உண்மையைக் கைக்கொண்டவன் அரசன் ஆவான். அம்மூன்று பொருள்களும் மெய்ப்பொருளுக்கு இடமாம். இப்பாடல் கருத்தின் சாரம் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றின்

இலக்கணங்களை உணர்ந்து நடப்பவர் ஒழுக்கம் முதலிய நன்மைகளை அடைவர். இன்னிலையில் பொருட்பாவில் உள்ள ஒன்பது செய்யுள்களும் இத்தகு ஒப்பற்ற கருத்துக் கருவூலங்களையே நமக்கு உணர்த்துகின்றன. இனி இன்பத்துப் பாலிலும் வீட்டுப்பாலிலும் ஒவ்வொரு பாடல் பார்ப்போம்.

**காமம் வீழின்பக் கடலாமே காதலரி**
**இளம விருக்கையே தூந்திரையா - மேமத்தீண்**
**டாம்பாலே தோன்றும் அளியூடலாம் பாலிற்**
**றெற்றித் தெறிப்பா மொளியொளிப் பாய்கண்ணே**
**துற்றுக்காப்பாய்க் பெற்ற மகவு.**

காம வேட்கையே மாந்தர் விரும்பும் இன்பக் கடலாம் காதலன் காதலியாகிய இருவரது ஒருமித்த சேர்க்கையே இன்பக்கடல் தாவும் அலையாம். இருவரிடமும் உண்டாகும் அன்பே இருவர் சேர்க்கையினின்றும் வெளிப்படும் முத்தாம் (விந்து) இருவருள்ளும் உண்டாகும் புலவி ( ஊடலே)யே அவ்வாறாகும் முத்தினின்று எழுந்து பாயும் ஒளியாம். இருவரும் இணைவதால் உவந்து பெற்ற செல்வங்களே மக்கள்.

இவ்வாறு இல்லற மாண்பை இனிதே விளக்குவார் ஆசிரியர். இன்பப்பாலில் பன்னிருபாடல்கள் இன்சுவைக் கனிகளாய் மிளிர்கின்றன.

அடுத்து வீட்டுப்பால் எனப்படும் இல்லியல், இங்கு நாம் வீடுபேறு பற்றி அறியவில்லை. இல்லறஇயல் பற்றி விளக்குவதே வீட்டுப்பால் என்கிறார் வ.உ.சி. இவ்வியலில் ஏழுபாடல்களே உள. அவற்றுள் ஒரு பாடலைச் சுவைப்போம்.

**முனியான் அறம் மறங்கள் முக்குற்றம் பேணான்**
**நனிகாக்கும் ஒண்மை உறைப்படுத்தும் பண்போன்**
**பனி நிலத்தின் வித்தாய்ப் பெயரான் நடுக்கற்**
**றினியனாவான் மற்றினி.**

அறத்தை வெறுக்காதவனாய் அறமற்ற செயல்களையும் முக்குற்றங்களையும் விரும்பாதவனாய் மிகவும் பாதுகாக்கப்படும் அறிவை நிலைப்படுத்தும் ஒழுக்கத்தை உடையோன் குளிர்ந்த நிலத்தைச் சேர்ந்த வித்தைப் போன்றவனாய், நின்ற நிலையை விட்டு அசையாதவனாய் அச்சம் நீங்கி, இப்பிறவியிலேயே பேரின்பத்தை உடையவன் ஆவான்.

வீட்டுப்பால் என்பது இல்லறத்தின் சுவைப்பால் என்பதை இதை விடச் சிறப்பாக விளக்க இயலாது.

இனித்துறவியலில் ஒரு பாடல் காண்போம்.

**மெய்யுணர்வே மற்றதனைக் கொள்ள விழுக்கலனாம்**
**பொய்யுணர்வான் ஈண்டிய எல்லாம் ஒருங்கழியும்**
**மையுணர்வான் ஆய்ந்து அறஞ்சார்பாக சார்பொறுக்க**
**நையா நிலை வேண்டுவார் கடக்க மேலாம் வீடுபேறாம்**
**கடல் மெய்யுணர்வே மேலான தெப்பம்.**

பொய்ப் பொருள் உணர்ச்சியால் வந்தவை நம்மைச் சாராது அழிந்து விடும். அழியாத வீடுபேற்றை விரும்புவோர் ஐவகை. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் உணர்வாக நிற்பானை ஆராய்ந்த அறத்தைத் துணையாகக் கொண்டு பற்றுக்களை ஒழிக்கக்கடவர்.

இன்னிலை எனும் நூலின் அறம், பொருள், இன்பம், வீடு, துறவு யாவும் உணர்ந்தோம். இவற்றின் உண்மைப் பொருளும் உணர வ.உ.சி. வாய்ப்பளித்த வள்ளலாவார். அவரைப் போற்றுவோம்.

**கைந்நிலை :**

கைந்நிலை என்பதைக் கை + நிலை என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும். கை என்ற சொல்லுக்கு மனித உறுப்பு. யானைத் துதிக்கை, கதிர், அவிநயக்கை, பக்கம், கட்சி, கை மரம், இரயில் கைகாட்டி, சட்டையின் கை, கைப்பிடி, விசிறிக் காம்பு, சிறகு, படையறுப்பு, சேனை, இடம் கைப்பொருள், செய்யத்தக்கது. ஒப்பனை, ஆற்றல், கையளவு, ஆள், சிறுமை, உலகம், ஒழுக்கம், ஒழுங்கு, தக்கை, போன்ற பொருட்கள் உள்ளன.

கைந்நிலை என்பது ஐந்திணை அறுபது என வழங்கும் நிலையில் உள்ள நூல் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசை முறையில் அமைந்துள்ள நூல், இவ்வரிசையில் அமைந்திருப்பது எண்ணத்தக்கது. இந்நூற் செய்யுட்களில் 18 பாடல்கள் சிதைந்துள்ளன. (1, 8, 14 - 17, 20, 26, 35,38) இவற்றுள் மூன்று பாடல்கள் ஒரு சொல் அளவில் சிதைவுப்பட்டவை. ஏனைய பதினைந்து அடிகளும் சொற்களும் பல்வேறு வகையில் சிதைந்து

காண்கின்றன. எவ்வித சிதைவும் இல்லாதவை நெய்தல் திணைப் பகுதியில் அமைந்துள்ள பாடல்களே.

இந்நூலைச் செய்தவர் மாறோக்கத்து முள்ளி நாட்டு நல்லூர் காவிதியார் மகனார் புல்லங்காடனார் என்பது. இவர் தந்தையார் காவிதியார் எனபபடுதலின் அரசனால் காவிதி என்னும் சிறப்பு பெயர் அளிக்கப்பெற்றவர் போலும். மாறோக்கம் கொற்கையைச் சூழ்ந்துள்ள பகுதியைக் குறிக்கும். எனவே இவர் கொற்கையை அடுத்து முள்ளி நாட்டு நல்லூரில் வாழ்ந்தவர் ஆவார்.

**பொன்னம் பசலையும் தீர்ந்தது - பூங்கொடி**
**தென்னவன் கொற்கைக் குருகுஇரிய மன்னரை**
**ஓடுபுறங்கண்ட ஒண்தாரான் தேர் இதோ**
**கூடல் அனைய வரவு.**

என்ற இந்நூல் இறுதிப் பாடலில் (60) பாண்டியனையும் கொற்கை நகரையும் இவர் குறிப்பிடுவது சிந்தித்ததற்குரியது.

இந்நூற் பாடல்களும் பிற அகப்பொருள் நூற்பாடல்களை ஒத்த சிறப்புடையனவே. திணைமாலை நூற்றைம் பதில் வருவது போலத்தாரா (40) என்ற பறவைப் பெயர் வந்துள்ளது. பாசம் (3) ஆசை, இரசம் (5) தேசம் (12) இடபம் (36) உத்தரம் (48) முதலிய வடசொற்களையும் இதில் காணலாம்.

ஐந்திணை அடைவில் இது திணைமொழி ஐம்பதை ஒத்துள்ளது. அறுபது பாடல்களை உடைய இந்நூல் திணைமொழி ஐம்பது முதலிய அகப்பொருள் நூல்களின் காலத்தை அடுத்துத் தோன்றியதால் கூடும்.

இந்நூற் செய்யுட்களை இளம்பூரணர் போன்ற பழைய உரைகாரரர் எடுத்தாண்டுள்ளனர். நூல் முழுமைக்கும் உரை கிடைக்கவில்லை. ஈண்டு சில பாடல்களில் வளம் காண்போம்.

கைந்நிலையில் தலைவிக்குத் தூக்கம் வரவில்லை. மலையில் வேங்கை மரங்கள் மிகுதியாக இருக்கும் பொன் போன்ற பூக்களைப் பூக்கும். அவன் கைவேல் மின்னலைப் போன்று ஒளி வீசும். அதனால் இரவில் வந்தால் அவனைப் பலரும் அறிவர். இந்த நிலையில் தலைவி எவ்வாறு தூங்குவாள் ? தூங்க இயலாது தடுமாறுகிறாள். கண் இமைகள் பொருந்த மறுக்கிறாள் எனப்

பேசுகிறாள் தலைவி. இது குறிஞ்சித் திணையில் வரும் பாடல். இதன் மூலம் இரவில் தன்னைச் சந்திக்க வரும் காதலனை யாரும் கண்டுவிடுவாரோ எனும் அச்சம் அவளை நிலைகுலைய வைக்கிறது. இக்காட்சியைக் கீழ்வரும் பாடல் அருமையாக காட்டுகிறது.

**பொன்கிணர் வேங்கைப் புனல்சூழ்மலை நாடன்**
**மின்னின் அனைய வேல் ஏந்தி இரவினுள்**
**இன்முன வருங்காண்டாய் தோழி**
**இடையாமத்து என்னை இமை பொருமாறு.**

காதலனை எண்ணி, ஏங்கும் இக்காட்சி வாராதிருப்பாரோ வண்ணமலர்க் கண்ணன் அவன், சேராதிருப்பாரோ சித்தரம்பூம்பாவை தன்னை எனக் கவியரசர் கண்ணதாசன் இக்கருத்தைத் திரையிசைப் பாடலில் சித்தரிக்கிறார்.

இசைப்பாலையில் ஓர் காட்சி கள்வர் திரியும் கானத்தைக் கடந்த உன் காதலர் பொருள் ஈட்டத்தானே பிரிந்துள்ளார். அவர் உள்ளம் உன்னப் பிரிந்திலது. நீ அறிவாயாக தொல்லை தரும்விடம் செறிந்த காடெல்லாம் நீந்தி மீண்டும் உன்னைக் காண வருவார் கவலைப்படாதே எனத் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

அப்பாடல் இதுதான்,

**கள்வர் திரிதரூஉம் கானம் கடந்தவர்**
**உள்ளம் பிரிந்தமை நீ அறிதி - ஒள்ளிழாய்**
**தொல்லைவிட ரகம் நீந்திப் பெயர்த்து அவர்**
**வல்லை நாம் காணும் வரவு.**

இதில் தலைவிக்குத் தலைவன் மேல் தோழி நம்பிக்கை ஊட்டும் செய்தி சுட்டப்படுவது சுவைதரும் நிகழ்ச்சி.

குறிஞ்சி நிலம் தலைவன் தலைவி சேரும் நிகழ்வையும் பாலை தலைவன் தலைவி பிரிவையும் சுட்டும் உரிப்பொருள் இலக்கணம் கொண்டது.

மருத நிலத்தினை தலைவன் தலைவி இருவரும் ஊடல் கொள்ளும் நிகழ்வைச் சுட்டும் வள்ளுவர் தலைவன் பால் தலைவி ஊடுவது உணவில் உப்பமைந்தது போல் அளவாய் இருத்தல் வேண்டும் என்பார்.

உப்பமைந்தற்றால் புலவி அக்குறள் வரியாம். இங்கே தலைவனை இல்லத்துக்குள் நுழைய அனுமதிக்காத தலைவிக்குத் தலைவன் பாணனைத் தூதுவிடும் காட்சி சுவை தரும். தண்துறை ஊரன் - தடமென் பணைத்தோளாய் வண்டு ஊது கோதை வகை நாடிக் கொண்டிருந்தது. கோல வனமுலையும் புல்லினோன் என்று எடுத்து சாலவும தூற்றும் ஊர்.

ஏ பாணனே உன்தலைவனுடைய திரண்ட தோள்கள் வண்டு தேன் உறிஞ்சும். மாலை அணிந்த வேறு மகளிரைச் சேர்ந்தன என மிகவும் ஊர் தூற்றும். எனவே அவனை அனுமதியேன் என மறுக்கிறாள் தலைவி. இச்செய்தியால் தலைவனுக்கு ஒழுக்கம் வேண்டும் என்பதும், ஒழுக்கம் நீத்த தலைவனைத் தலைவி விரும்பாள் என்பதும் சுட்டப்படுகிறது.

இவ்வாறு பல்வேறு செய்திகள் இந்நூலில் பரக்கக் காட்டப்படுகின்றன.

இன்னிலையில் அறத்துப்பால் மூலம் சில செய்திகளும் கைந்நிலையில் குறிஞ்சி, பாலை, மருதம் எனும் திணைச் செய்திகளும் இங்கு ஓரளவு ஓராற்றான் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

**நிறைவுரை :**

ஏலாதி - இன்னிலை - கைந்நிலை இம்மூன்று நூல்களின் செய்திகளும் இங்கே சுருக்கியே தரப்பட்டுள்ளன. அனைவரும் பதினென்கீழ்க்கணககு நூல்களைப் பயில வேண்டும் எனும் எண்ணத்தை இக்கட்டுரை தர வேண்டும் என்பதே நோக்கம்.

# வாழ்வே கனவுதான்

எலுமிச்சை, நாரத்தை, மா, பலா, தென்னை போன்ற பல்வேறு தோப்புகள் அடங்கிய சின்னஞ்சிறிய கிராமம் கல்லலுக்கு அருகே உள்ள வேப்பங்குளம். நீர் வளமும் நிலவளமும் நிறைந்த ஊர். அந்த ஊரில் முத்தையா என்ற ஓர் இளைஞன். அவன் அப்பா சோணை முத்து அம்பலம். சோணைமுத்து அம்பலம் தந்தையார் சின்னையா அம்பலம் சிறந்த வேதாந்தி. தமிழ்ப்புலமைமிக்கவர். கந்தபுராணத்தை ஆனந்தக் களிப்பு மெட்டில் பாடி அகமகிழ்ந்தவர். அவரது பேரன், பெயருக்கு ஏற்ப, முருக்கடவுள் தந்த தமிழை முத்துமுத்தாய்க் கவிமழையாய்ப் பெய்யும் முத்தையாவாகத் திகழ்ந்தான்.

இளையாங்குடி லெப்பை இபுராஹிம் புலவர் மூலம் முறையாகத் தமிழ் படித்தான். தமிழோடு பர்மா சென்று இரங்கூனில் நேமத்தான்பட்டி நாட்டுக்கோட்டை நகரத்தார் வட்டிக்கடையில் கணக்குப் பிள்ளையாக இருந்தான். பின் அவன் திறமையால் ஏஜெண்டாக உயர்ந்து நாணயமாகத் தொழில் புரிந்து வந்தான். இவனுக்கு வெற்றியூர் எரனப்பன் அம்பலம் மகள் காளியம்மையைத் திருமணம் செய்து வைத்தனர். இருவருக்கும் ஒரே ஆசை மகனாயப் பிறந்து வளர்ந்தவன் நாகுசாமி. அவனை முத்தையாவும், காளியம்மையும் பாசத்தைக் கொட்டி வளர்த்தனர். அவனுக்கு ஆறு வயதாகும் போதே முத்தையா அவனைப் பர்மாவுக்கு அழைத்துச் சென்றுவிட்டான். தன்னைப்போல நாகுசாமியும் பெருங்கவிஞராகவும், புலவராகவும் வர ஆசைப்பட்டான் முத்தையா. பெரும் புலவர்களைக் கொண்டு அவனுக்குப் பர்மா வீட்டில் வைத்துத் தமிழ் கற்றுக் கொடுக்கச் செய்தான். நாகுசாமியும் இளம் பருவத்திலேயே பெருங்கவிஞனாக வளரத் தொடங்கினான். நாகுசாமிக்குப் பதினாறு வயதிருக்கும். ஒருநாள் இரவு தந்தையும் மகனும் அருகருகே உறங்கிக் கொண்டிருந்தனர். திடீரென்று முத்தையா மனைவி காளியம்மை முல்லைச் சிரிப்போடு பக்கத்தில் வந்து நின்றாள். உடனே முத்தையா ஆனந்தமும், அதிர்ச்சியும் கலந்தவனாய் "என்னெலா

திடீர்னு ? ” என்று எழுந்து விழித்தான். கண்டது கனவென்று புரிந்து கொண்டான். உடனே தன் மகன் நாகுசாமியிடம் “ யப்பா நாகுசாமி ! ” உன் ஆத்தா சொப்பனத்திலே திடீர்னு வந்தாப்பா... ஒன்னும் புரியல எனக் குழப்பமாய்ப் பேசினான் முத்தையா. உடனே நாகுசாமி “ கவலைப்படாதீங்கப்பு ” எல்லாம் நல்லதாத்தான் இருக்கும் என்றான். பொழுது புலர்ந்தது. புதுச் செய்தி ஒன்று தந்தி மூலம் வந்தது. வந்த செய்தி, தந்தை மகன் இருவரையும் உறையச் செய்தது. காளியம்மை இறந்துவிட்டாள் உடனே இருவரும் ஊருக்குப் புறப்பட்டனர். ஊரில் எல்லாம் முடிந்திருந்தது. அப்போது உடனடியாகச் செல்ல இப்போதைய நவீன விமானப் பயண வசதி இல்லை. முத்தையா, நாகுசாமிக்கு ஆறு வயதாகும் போது காளியம்மைப் பிரிந்து ஊரிலிருந்து வந்தவன். பதினைந்து ஆண்டுகட்டுகப் பின் மனைவியை உயிரோடு பார்க்கமுடியவில்லை. இதுவே அக்கால அவலம். கல்யாணம் பண்ணிக் கொண்டு போகிற கணவன், தன் மகளின் அல்லது மகனின் கல்யாணத்துக்குத்தான் திரும்புவான். சிலர் வெளிநாடு சென்று திரும்பாமலே இறந்து போவதும் உண்டு.

கல்யாணமான புதிதில் பர்மா சென்று முத்தையா பிறகு நாகுசாமிக்கு ஆறு வயது ஆகும் போது ஒருமுறைவந்து நாகுசாமியை அழைத்துச் சென்றவன். இப்போதுதான் திரும்புகிறான். செக்கச் செவேலென இருக்கும் காளியம்மை மேனியழகும், கன்னங்குழி விடிச் சிரிக்கும் போது பளிச்சிடும் பச்சரிசிப் பல்லழகும், அவனைப் பதறியழ வைத்தது. நாகுசாமியும் “ ஆத்தா ! என்னையும் அப்பையும் அநாதையா விட்டுட்டுப் போயிட்டியே ” என நெஞ்சில் அறைந்து கொண்டு அழுத காட்சி, சுற்றியிருந்தவர் அனைவர் கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது.

பதினாறாம் நாள் காரியம் முடிந்தது. முத்தையா தன் மனைவியை அவள் சிரிப்பை கல்யாணமான புதிதில் நடந்த மகிழ்ச்சி தரும் நெகிழ்ச்சி தரும் நினைவுகளின் சிலிர்ப்பை எண்ணி, எண்ணி தன்னை மீட்டுக் கொள்ள முடியாமல் தவித்தான்.

முத்தையாவின் ஒன்றுவிட்ட பங்காளியான ஆலம்பட்டு ஆதப்பன் அம்பலம், வேப்பங்குளத்திலிருநது முத்தையாவைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். கூடவே நாகுசாமியும் சென்றான்.

முத்தையாவின் மனதை மாற்றவும், ஆறுதல் ஊட்டவும் ஆதப்பன் ஒரு யோசனை கூறினார். " ஏம்பா, முத்தையா ! கல்லல் சோமசுந்தரேசுவரர் சௌந்தரநாயகி திருக்கோயிலுக்கு நம்ம நாட்டார் சார்பிலே ஒரு பெரிய தேர் செய்யணும். அதை நீ தான் பொறுப்பாயிருந்து செய்யணும்" என ஆதப்பன் கூற, முத்தையாவும் சரியண்ணே ! நல்லாச் செய்திருவோம் எனக் கூறினான். உடனடியாக அந்நடவடிக்கையில் இறங்கினான். கல்லல் தெப்பக் குளத்துக்குத் தெற்கில் ஒருமடம் கட்டி, அதற்கு மணிவாசக நிலையம் ஸ்ரீ ஞான வாணி விலாசம் எனப் பெயரிட்டான். திருவாசகம் பாடிய மாணிக்க வாசகர்பால் பேரன்பு கொண்டவன் முத்தையா. உள்ளே பூசையறை, புத்தக அறை எல்லாம் அமைத்தான். கல்லல் தேர்திருப்பணிக்குச் சொந்தமாக முப்பதாயிரம் ரூபாய் அச்சாரமாக வைத்துத் திருப்பணியைத் தொடங்கினான். கல்லலைச் சுற்றியிருந்த 22-1/2 கிராம மக்களும் தாராளமாக நன்கொடை வழங்கினர். மூன்றாண்டுகளில் அழகிய பெருந்தேரைச் செய்து முடித்தான். கல்லல் குன்னம்மா காளியம்மனைத் தலைமையிடமாய்க் கொண்ட குன்னங்கோட்டை நாட்டார் அனைவரும் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தனர். (அக்கால குறுநில மன்னர் ஆட்சிக் காலத்தில் 22-1/2, 18-1/2 எனக் கிராமங்களை உள்ளடக்கிய ஒருபகுதிக்கு நாடு எனப் பெயரிட்டனர். அதற்குத் தலைவர் பட்டயத்தய்யா என அழைக்கப்படுவது வழக்கம்.

இந்நிலையில் வேப்பங்குளம் பங்காளிகள் அனைவரும் கிராமக் கர்ணம் ஆறுமுகம் சேர்வையைச் சந்தித்தனர். " யாப்பூ ! உங்க மக தெய்வானையை நம்ம முத்தையாவுக்குக் கல்யாணம் செய்து வைககலாம்னு நினைக்கிறம். நீங்க என்ன நினைக்கிறீக ? " எனக் கேட்டனர். உடனே அவரும் ஒப்புக் கொண்டார்.

பன்னிரண்டு வயதே ஆன பூவாப் புதுமலர் தெய்வானையை முத்தையாவுக்கு மறுமணம் செய்து வைத்தனர். திருமணம் முடிந்த ஒரு மாதத்தில் தெய்வானை பூப்படைந்தாள். பெண்ணுக்குப் பேச்சுரிமை இலலாக் காலம். உடம்பிலே சட்டை போடக் கூடாது. எவ்வளவு கொடுமை ? இதையெல்லாம் உணரமுடியா ஊமை தெய்வானை. எந்திர கதியில் கருவுற்றாள் . மீண்டும் முத்தையா பர்மா பயணம். ரங்கூன் நகரில் ஓய்வு நேரங்களில் சைவ சமயச்

சொற்பொழிவு, பகலில் வட்டிக் கடைத் தொழில், இரவில் தமிழ் இலக்கியத் தேடலில் திளைப்பு, செந்தமிழ் நாட்டுச் சிறப்பு போன்ற நூல்களின் படைப்பு, தன் மகன் நாகுசாமியுடன் முத்தையாவின் இலக்கியப் பயணமும் தொடர்ந்தது.

ஊரில் தெய்வயானைக்கு அழகான ஒரு பெண் குழந்தை பிறந்தது. தந்தையின் மறு உருவாய் குழந்தை இருந்தது. குழந்தைக்குச் சௌந்தர நாயகி எனப் பெயர் சூட்டி வளர்த்தனர். பர்மாவிலிருந்து நாகுசாமி தன் தங்கைக்கு அழகான பட்டுப் பாவாடையும் சட்டையும், ஓராண்டு நிறைவுக்கு அனுப்பியிருந்தான். தாயும் மகளும், முத்தையா அருகில் இல்லாக் குறை தவிர வேறு எக்குறையும் இன்றி மகிழ்வோடு வாழ்ந்திருந்தனர். முத்தையா வாரம் ஒருமுறை அன்பையும் பாசத்தையும் குழைத்துக் கடிதம் எழுதுவான்.

குன்றக்குடியில் தமிழ்க் கலாசாலை கட்ட ஓர் இடம் வாங்கிப் போட்டான். ஏரியூர்க் கிராமத்தில் 60 ஏக்கர் விளைநிலம் வாங்கிப் போட்டான். இந்நில வருவாய் கொண்டு மட நிர்வாகப் பணி, தேர்த்திருவிழா நிகழ்வு, தமிழ்ப்பணி ஆகியவற்றைச் செய்யத் திட்டம் இட்டிருந்தான்.

வேப்பங்குளத்தில் எலுமிச்சை, நாரத்தை, தென்னை, மா ஆகியவற்றின் தோப்புகளும் முத்தையாவுக்கு இருந்தன. பர்மாவிலும் விவசாயம் செய்தான். வட்டிக் கடைத் தொழிலையும் நேமத்தான்பட்டி நகரத்தார் செட்டியாருக்கு லாபம் தரும் வகையில் நிர்வகித்து வந்தான்.

ஒவ்வொரு ஞாயிறும் விடுமுறை நாளில் புலவர்களைக் கூட்டித் தமிழ் நூல்களை ஆய்வு செய்து வழக்கம். இவ்வாறு பல்வேறு பொதுப் பணிகளையும் சோம்பலின்றிச் செய்து, வாழ்நாளை அர்த்தமுள்ளதாக்கி வாழ்ந்து வந்தான் முத்தையா. தன் மகன் நாகுசாமியும் தன்னைப் போல் தமிழ்ப்புலமை பெறவேண்டும் என முத்தையா எண்ணியதற்கேற்ப நாகுசாமியும் தமிழ்க் கவிஞனாக விளங்கினான்.

ஒரு நாள் ஞாயிறு, மாலை புலவர்கள் ஏராளமாக குழுமியிருந்தனர். இந்நிலையில் இலக்கணம் பற்றிய விவாதம் சூடாக நடந்து

கொண்டிருந்தது. திரிசொல் பற்றிய விவாதம் நடந்து கொண்டிருந்தது. எல்லோருக்கும் விளங்காது. கற்றவர்க்கு மட்டுமே விளங்கும் சொல் திரிசொல் எனக் கூறிய முத்தையா, கிளிக்குக் கிள்ளை எனக் கூறுவர் என்றான். முத்தையாவுக்குக் கோபம் தலைக்கேறியது. "சிரசிருக்க வாலாடுகிறதோ? " என நாகுசாமியை மிகவும் கோபமாகக கடிந்து கொண்டான். தன்னை ஒருநாளும் கோபித்தறியாத் தந்தையின் கோபக் கனலில் தாக்குண்டு கடுங்காய்ச்சலுக்கு ஆளானான். எவ்வளவு போராடியும் அவன் தேறவில்லை. தேடக் கிடைக்காத திரவியமாய் வளர்ந்த மகன் நாகுசாமி, தேடியும் காணமுடியாத இடத்துக்குப் பயணப்பட்டு விட்டான். முத்தையா, மகன் பிரிவுத்துயரில் தன்னை மறந்தான். மூன்று நாட்கள் பேச்சிழந்து திக்பிரமை பிடித்தவன் போல் ஆனான்.

ரங்கூனில் தமிழ்ப் புலவர்கள் கூடி அவரைப் பேச வைக்க முயன்றனர். இறுதியில் இரு புலவர்கள் வேண்டுமென்றே தமிழைப் பிழையாகப் பேசினர். மகன் மேல்கொண்ட பாசத்தைத் தமிழ் வென்றது. " ஏன் இப்படித் தமிழைக் கொலை செய்கிறீர்கள் ? " என முத்தையா கடிந்து பேசத் தொடங்கினான். அவனிடம் நாகுசாமி இறந்து மூன்று நாள்கள் ஆனதையும், அவன் உடல் தகனம் செய்யப்பட வேண்டும் என்பதையும் அருகில் இருந்தவர்கள் நினைவூட்டினர். முத்தையா மகனின் இறுதிச் சடங்குகளை முடித்தார். ஏறத்தாழ பதினைந்து நாள்களே அங்குத் தங்கினார். பர்மாவில் தான் வாங்கிய நில புலங்களை விற்று உடனே பர்மாவைவிட்டு வெளியேறினார். நேரே சென்னை திருவொற்றியூர் பட்டினத்தார் சமாதிக்கு வந்தார். முன்பே சிவ தீக்கை முத்தையா பெற்றிருந்தார். பட்டினததார் சன்னதியில் கணபதிசாமி மூலம் சந்நியாச தீக்கை பெற்றார். குன்றக்குடி மேலமடத்தில் வந்து தங்கினார். தன் ஒரே மகனைப் பிரிந்த துயர், அவர் மனைவி 22 வயதான தெய்வயானையையும் 5 வயதான மகள் சௌந்தரநாயகியையும் மறக்க வைத்தது.

தன் சொத்துக்கள் முழுமையும் பங்காளி வீட்டுக்கு எழுதி வைத்தார். இந்த நிலையில், தான் கட்டிய கல்லல் மடத்திற்கு வந்தார். அங்கு சில நாள்கள் தங்கினார். அப்பொழுது கூட ஓராண்டே தன்னுடன் வாழ்ந்த இளம் வயது மனைவியை, மாதரசி தெய்வயானையைச் சந்திக்கவில்லை. தன் மகளை மட்டும் சந்தித்தார்.

முத்தையா சந்நியாசியானதை தெய்வயானை தந்தை ஆறுமுகம் சேர்வையால் சீரணிக்க முடியவில்லை. உடனே தன் மகன் மாணிக்க வேலைத் தெய்வயானையிடம் அனுப்பி மறுமணம் புரியச் சம்மதம் பெற்றுவரச் சொன்னார். அப்போது அண்ணன் மாணிக்கவேலுவும் தங்கை தெய்வயானையும் பேசிய உரையாடல் மிகச் சுவையானது.

"யாத்தா ! நான் சொல்றதக் கேளு .. நம்ம சாதியிலே அறுத்துக் கட்டறது ஒன்றும் புதிசில்லே. அந்த சாமியார்ப்பய, மனைவி மகளை நினைக்காம இரும்பு மனம் படைச்சவனா உன்னை விட்டுட்டுப் போயிட்டான் ... நீ எதை நினைச்சு இன்னும் இநதச் சாமியார்ப் பயவீட்ல இருக்கே ? என மாணிக்கவேலு கேட்க, தெய்வயானை " , உங்க மனைவி யார நினைச்சு உயிர் வாழ்ந்திக்கிட்டு இருக்கு என்றாள். அந்தச் சின்ன வயதில், அந்தச் சாதியிலே ஒரு திருமணம் செய்து பிள்ளைகள் பிறந்த பின்னும் தீர்த்துவிட்டு, மறுமணம் செய்வது சாதாரணம். அந்த மரபை மாற்றி, ஒருத்திக்கு ஒருவன் என்ற உயிர் மூச்சோடு வாழ்ந்த மாதரசி தெய்வயானை.

இதை அறிந்த தெய்வயானை தந்தை, தன் மகளுக்கு உயிரோடு இருக்கும்போதே கருமாதிபோட்டுவிட்டார். ஆனால் தன்னையே தெய்வமாய் நினைத்து வாழும் தெய்வயானையின் மன உறுதியை எண்ணி வியந்த முத்தையா, தன் மனைவிக்கும் மகளுக்கும் வாழ்வாதாரமாக ஒரு ஏக்கர் நிலமும், தோட்டம் ஒன்றும், தென்னந்தோப்பு ஒன்றும் எழுதி வைத்தார்.

முத்தையா தென்காசி, பழநி, திருச்சி மாவட்டம், பழுவூர் ஆகிய ஊர்களில் தெய்வத் தமிழ் பற்றிப் பேசி வந்தார். மணிவாசக சரணாலயர் எனத் தன் பெயரை மாற்றிக் கொண்டார். தன் ஐம்பதாம் வயதில் பெம்பலூர் மாவட்டம், முருக்கன்குடியில் சமாதியானார். முத்தையா கண்ட தமிழ்க் கலாசாலைக் கனவு நிறைவேறாமலேயே போய்விட்டது. தன் மகன் நாகுசாமி பற்றிக் கண்ட கனவுகள் எல்லாம் கனவாகவே போய்விட்டன. தெய்வயானை, கணவனே தெய்வமாய்க் கனவு வாழ்வே வாழ்ந்து நூறு வயதில் மறைந்து கற்புத் தெய்வமாய் வாழ்கிறார். ஒவ்வொரு நாளும் நடக்கும் நிகழ்வு மறுநாள் கனவாகி விடுகிறது. வாழ்வே கனவுதான். கனவுலகில் வாழும் நாம் அனைவரும் கனவு காண்பவர்களே.

# முக்குற்றம், முப்பதம், முப்பரம், முத்துரியம்

**முன்னுரை:**

*சிவனொடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை*
*அவனொடொப்பார் இங்கு யாவரும் இல்லை - திருமந்திரம்.*

பிறப்பிலியாகவும், பிஞ்ஞகனாவும் பேரருளாளன் ஆகவும் இலங்கும் பரம்பொருளாம் பெரும் பொருளைப் பிறப்பறுக்கும் பெம்மானைப் போற்றிப் பாடப்பட்டனவே பன்னிருதி முறைகள். சைவ சித்தாந்தத்தின் சாரமாகவும் சிவனே செம்பொருள் எனச் செப்புவனவும் மேற்கூறிய திருமுறைகளே ஆகும். இவை தோத்திரம் /சாத்திரம், பிரபந்தம், புராணம் என நான்குவகையாக அமைந்துள்ளன.

முதல் ஒன்பது திருமுறைகளும் தோத்திர வகையாயும், பத்தாம் திருமுறை சாத்திரவகையும், பதினொன்றாம் திருமுறை பிரபந்தமாகவும், பன்னிரண்டாம் திருமுறை புராணமாகவும் (பெரிய புராணம்) பகுக்கப் பெற்றுப் பனுவல்களாய்த் தமிழ் அன்னைக்கு அணிகலன்களாய் இலங்குகின்றன. இவற்றுள் பத்தாம் திருமுறை சைவ சமயத்தின் சாத்திர நூலாய் விளங்கும் திருமூலர் இயற்றிய திருமந்திரமாகும்.

இந்நூல் கூறும் கருத்துக்கள் ஒன்பது தந்திரங்களாய்த் தொகுத்துரைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் நுவலும் பொருள் இறை, உயிர் , தளை என மூன்றுள் அடக்கம் இவை வடமொழியில்

பதி, பசு - உயிர் - பாசம் - ஆணவம், கன்மம் மாயை ஆகிய மும்மலப் பாசங்களில் உயிர்க்கட்டுண்டு கிடக்கிறது. இதைப் பற்றிய செய்திகளை எட்டாம் தந்திரத்தில் திருமூலர் முக்குற்றம், முப்பதம், முப்பரம் , முத்துரியம் எனும் தலைப்புகளின் கீழ் விளக்குவாராயினர்

## முக்குற்றம்

ஆருயிர்களின் பிறப்புக்கு வித்தாய் இருப்பன மூன்று . அவை காமம், வெகுளி, மயக்கம் என்பனவாம். இம்மூன்றும் நம்மை முற்றாகத் துன்பத்தில் ஆழ்த்துவனவேயாம். மயக்கத்தால் தனக்குத் தகுதியற்ற பொருளை விரும்பி, விரும்பிய பொருள் கிட்டாத நிலையில் கோபம் உற்று அதனால் உயிர்கள் அழிகின்றன. அதனால் இன்ப துன்ப நுகர்ச்சிக்குட்பட்டுப் பிறப்புக்கும், இறப்புக்கும் ஆளாகின்றன. இதனையே வான்புகழ் வள்ளுவர் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய் என்றார். இச் செய்தியைத் திருமூலர்.

**காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்**
**தேமம் பிடித்திருந்தேனுக் கெறிமணி**
**ஓமெனும் ஓசை யினுள்ளே யுறைவதோர்**
**தாம மதனைத் தலைப் பட்டவாறே!** என்றார்.

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றால் வரும் ஏமம் - துன்பம் எனப்பொருள் தருவர். ஓம் எனும் ஓசை உள்ளத்தில் தோன்றி அது உயிர்க்குத் தாமே இன்பம் தரும். உயிர் இறைவனோடு ஒன்றித்து நிற்கும் என்பார் திருமூலர் இதை இல்லங்களில் எப்போதும் ஏதோ ஒரு ஒழுங்கற்ற முறையற்ற சத்தம் கேட்கும். இந்தச் சத்தம் ஓம் ஓசையாய் மாற வேண்டும். இதை விநாயகர் அகவலில் ஒளவையார் சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி எனச் சுட்டுவார்.

## முப்பதம்

பதம் என்பது சொல்லைக் குறிக்கும். இங்கே மூன்று சொற்கள் (முப்பதம் ) சுட்டப் படுகின்றன. அவை தத் ,துவம் அசி என்பனவாம். உயிர்(சீவஉ.பாதி)படும்துன்பத்தளையிலிருந்து விடுபடுவதே தொம்பதம் ஆகும். (நீ) இறைவனது அறிவின் முடிவு தற்பதம் (அது) ஆகும்.(அது) ஆன்மாவும் இறைவனும் ஒன்றுபடும் நிலை அசிபதம் (ஆகின்றாய்) ஆகும்.நீ அது ஆகின்றாய் என்பது பொருள்

இதை அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் பின்வருமாறு அழகுக் கூறுகின்றார்.

**ஆனா அமுதே அயில்வேல் அரசே**
**ஞானா கரனே நவிலத் தகுமோ**
**யானா கிய என்னை விழுங்கி வெறுந்**
**தானாய் நின்றது தற்பரமே**

பிறப்பு இறப்புகட்கு உட்பட்டுத் தோன்றும் உயிர் தொம்பதம் ஆகும் தொம்பதம் என்பதும் துவம் என்பதும் ஒன்றே. துவம் என்பது நீ எனும் பொருள் தரும். தத் பதம் என்பது அது என்னும் சுட்டுப் பொருளைத் தந்து சிவத்தைக் குறிக்கும். அசிதபதம் ஆகின்றாய் எனும் பொருள் தரும்.

எனவே துவம் .தத் அசி எனமுப்பதமாய்ப் பிரிந்து நீ அது ஆகின்றாய் எனும் பொருள் தருவது மிகச்சிறப்பு இதைத் திருமூலர்.

**தோன்றிய தொம்பதந் தற்பதஞ் சூழ்தர**
**என்ற அசிபதம் இம்மூன்றோடெய்தினோன்**
**ஆன்ற பராபரமாகும் பிறப்பற**
**என்றனன் மானச் சிவமாயிருக்குமே**

என இனிதே இயல்புவார். உயிர்களின்ன பிறப்பு அற உதவினன் ( ஏன்றனன் ) மானச்சிவமாயிருக்குமோ என வரும்.

**முப்பரம் :**

மேலான பரம்பொருள் தூல உடம்பு, சூக்கும உடம்பு காரண உடம்பு ஆகிய மூன்றனுள் கலந்து இயங்குவதால் முப்பரம் எனப் பேசப்பட்டது. பருவுடம்பு பிறவிக்குக் காரணமாய் அமைந்த காரண உடம்பு.இவை இரண்டும் அற்ற அறிவே வடிவமாய நுண்ணுடம்பு இவை சிவம் + அறிவு + பரம் = மூன்றும் கலந்து உடனாயும் வேறாயும் நிற்றலின் பரம் முப்பரம் எனப்பட்டது. அறிவு கொண்டு பருவுடம்பினின்றும் விலகி நுண்ணுடம்பால் சித் + அம்பரம் = சிதம்பரம் என்னும் தென்பால் உகந்தாடும் தில்லைக் கூத்தனை

ஆகாயம் தலையில் உச்சியில் அமுத தாரையின் வாயிலாய் உணர்வது ஆனந்த கூத்தனாம் சிவபரம்பொருளையேயாகும்.

பரம்: மேலே இருப்பது அருவமாய் இருப்பது எங்கும் பரந்து விரிந்து எல்லாம் உயிர்களிடத்தும் கலந்து இன்பம் தருவது . இதையே ஆனந்தம் பரம் + ஆனந்தம். பரம்பொருளை உணர்ந்து விட்டால் பரம் ஆனந்தம் என ஞானியர் நவிலவர். இப்பரம்பொருளைப் பற்றின்றிப் பற்றினால் இறைவன் நம் தலைவன் என்பதை உணர்ந்தும் விடலாம். இதையே திருமூலர்

**பற்றறப் பற்றிற் பரம்பதி யாவது**
**பற்றறப் பற்றிற் பரனறிவே பரம்**
**பற்றறப் பற்றினிற் பற்றவல் லோர்கட்கே**
**பற்றறப் பற்றிற் பரம்பர மாமே.**

**முத்துரியம்**

இதுவும் தத்துவம் அசியை உணர்த்துவனவே எனத் திருமூலர் குறிப்பிடுகிறார். சிவதுரியம், சீவதுரியம் , பரதுரியம் என்பனவே முத்துரியம் எனப்படும்.

**சிவதுரியம்**

சாக்கிரம், சொப்பனம், கழுத்தி இவற்றில் நிலைக்கொண்டு இயங்குவது சிவதுரியம் எனப்படும்.

சாக்கிரம் - நனவு நிலை சொப்பனம், கனவு நிலை - சுழுத்தி - நினைவு சீவன் - உயிரானது நனவுநிலை கடந்து கனவு நிலையில் நின்று நினைவில் நின்றும் நீங்காமல் இறைவனைப் பேருறக்க நிலையில் உணர்வது, துரியம் - உறக்கம் , துரியாதீதம் - பேருறக்கம் பரதுரியம்- பரம்பொருளின் சுவையைப் பேரானந்தம் உறக்கத்தில் மூழ்கி உணர்வது முத்துரியம் எனப்படும்.

சுவை, ஒளி, ஊறு ,ஓசை, நாற்றம் எனும் ஐந்தும், உரை நடை, கொடை, போக்கு, இன்பம் என்னும் ஐந்தும் ஆகிய பத்து அவத்தைகள், பிராணன், உதானன் முதலான வாயுக்கள் பத்து அந்தக்கரணம் எனப்படும். மனம், புத்தி, அகங்காரம்,சித்தம் நான்கு.இந்த 34 அவத்தைகளும் ஆன்மா எனப்படும், புருடன் இயங்க உதவுகின்றன. இந்தப் புருடன் எனும் உயிர் அவத்தைகளில் நின்று விடுபட்டு இறையருட் பெருங்கருணையால் ஆட்கொள்ளப்பட்டுப் பரதுரியம் எனப்படும். பேரானந்தப் பேருறக்கத்தில் நிலைபெறச் செய்தலை விளக்கலே முத்துரியம் எனப்படும்.

இக்கருத்துகளை உள்ளடக்கி.

நனவாதி மூன்றினிற் சீவதுரியந்
தனதாதி மூன்றினிற் பரதுரியந்தான்
நனவாதி மூன்றினிற் சிவதுரியமாம்
இனதாகுந் தொந்தத்தசி பதத்தீடே

**நிறைவுரை**

என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே எனத் திருமூலர் திருவாக்காலேயே தம் திருமந்திரச் சிறப்பை விளக்கினார். இத்தமிழமுதச் சாத்திரத் திருமந்திரத் திருமாலையாய் எண்ணி ஓதுவார் உயர்நிலை உய்குவார் என்பது திண்ணம்.




புலவர்.

## ஆறு. மெ. மெய்யாண்டவர்

இவர் தமிழ்நாடு சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த வேப்பங்குளம் கிராமத்தில் பிறந்தவர். தாய் சௌந்தரநாயகி அம்மாள், தந்தை ஆறு. மெய்யப்பன். இவர் 27.03.1949– இல் பிறந்தவர். இவரது தாய்வழிப் பாட்டன் ஆண்டவன் சுவாமிகள் பெரும்புலவர். தொடக்கக்கல்வியை தன் ஊரில் பெற்றார். உயர்கல்வியை திருவையாறு அரசர் கல்லூரியில் கற்றார், புலவர் பட்டம் பெற்றார். தேவகோட்டை சமீன்தார் அரு. சோமராயணன் செட்டியாரின் தொடர்பு பெற்று சமயக்கல்வி பெற்றார். ஐந்தாம் வகுப்பில் திருப்பாவை ஒப்புவித்தல் போட்டியில் முதல் பரிசு பெற்றார். இவர் முதல் முறையாக நால்வர் காட்டிய நன்னெறி என்ற தலைப்பில் பேசும் வாய்ப்பைப் பெற்றார். தந்தையாரிடம் தேவாரம் திருவாசகம் பாடும் திருமுறை அறிவைப் பெற்றார். தமிழாசிரியராகத் தம் வாழ்க்கையை சென்னையில் தொடங்கினார். காரைக்குடி, அரியக்குடி பள்ளியில் தொடர்ந்து முதுகலை மொழியாசிரியராக மற்றும் அரசு உயர்பள்ளி தலைமையாசிரியராக, சாக்கோட்டை வட்டார வளமைய மேற்பார்வையராகப் பணியாற்றி 31.05.2007 இல் ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப்பின் கல்வியல் கல்லூரியிலும், கலையறிவியல் கல்லூரியிலும் பணியாற்றினார். இலக்கியச் சொற்பொழிவு இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்றவற்றில் தொடர் சொற்பொழிவு நடத்தி வருகிறார்.

1979 இல் அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் பெரியாரின் பேரொளி என்ற கவிதை எழுதி மாநில அளவில் இரண்டாம் பரிசு பெற்றார். காரைக்குடி கண்ணதாசன் நற்பணி மன்றத்தில் நடைபெற்ற பாட்டுப்போட்டியில் முறையே இரண்டாம் பரிசும், முதல் பரிசும் பெற்று முத்திரை பதித்தார். கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடந்த உலகக் கவிதைப் போட்டியில் "வருக பொற்காலம்" என்ற தலைப்பில் கவிதை எழுதியமைக்காக உலக அளவில் நான்காம் இடம் பெற்றார். 2017 இல் கண்ணதாசன் பிறந்த சிறுகூடல்பட்டியில் கண்ணதாசன் விருது பெற்று சாதனை படைத்தார். பல்வேறு சொற்பொழிவு அரங்கங்களில் சொற்பொழிவு ஆற்றிவருகிறார். காரைக்குடி சமரசசுத்த சன்மார்க்க சத்திய சங்க துணைத் தலைவராக இருந்து ஆன்மீகப் பணியாற்றி வருகிறார். இவ்வாறு அவருடைய சாதனைகள் இன்னும் பலப் பல தொடரும். இவருடைய **தெய்வம் நீ என்று உணர்** என்ற நூலை வெளியிடுவதில் காரைக்குடி வள்ளுவர் பேரவை பெருமைப்படுகிறது. பெருமிதம் கொள்கிறது.

மெ. செயம்கொண்டான்

*நிறுவனத் தலைவர், வள்ளுவர் பேரவை, காரைக்குடி*

பாரத் பிரிண்டர்ஸ். காரைக்குடி. 98650 43093